உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 094 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 16 வியாழக்கிழமை (28/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily

# போர்க் குற்றங்களுக்கு இலங்கை பொறுப்புக் கூறியே தீரவேண்டும்

''பொருளாதார அபிவிருத்தி போதியளவு ஏற்படவில்லை. நீடித்த நல்லிணக்கப்பாட்டையும், நிரந்தரமான சமாதானத்தையும் மேற்கொள்ள துரித முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இவற்றிற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவது அதிகாரப் பகிர்வே ஆகும்.''

## அமெரிக்கா தொடர்ந்தும் விடாப்பிடி

வொஷிங்டன், பெப்.28

இறுதிக்கட்டப் போரின் போது ஏற்பட்ட சிவிலியன்களுக்கு உண்டான பாதிப்புகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் ஆகியவை உட்பட போர்ச் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக்கூறல் கடப்பாடுகளிலிருந்து விலக முடியாது என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், நல்லிணக்கப்பாட்டைத் தோற்றுவிக்க மேலும் பெரும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என அமெரிக்க (யு.எஸ்.எய்ட்) உதவி நிறுவனத்தின் ஆசிய பணியக சிரேஷ்ட பிரதி நிர்வாகி டெனிஸி ரொலின்ஸ் தெரிவித்துள்ளார்.

2012 பெப்ரவரியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இவர், தற்

பார்க்க பக்கம் 04

## ஜனநாயகத்தில் கொழும்பு பின்நோக்கிச் செல்கின்றது

### அமெரிக்கா கடும் அதிருப்தி



வொஷிங்டன், பெப்.28


இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு சர்வதேச நாடுகள் வலியுறுத்திவரும் நிலையில், ஜனநாயகத்தில் கொழும்பு பின்நோக்கிச் செல்கிறது என அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவின், ஆசிய பசுபிக் உபகுழுவில் உரை

பார்க்க பக்கம் 23

# தமிழர்களுக்கு நீதி இந்தியா வழங்கும்

## நாடாளுமன்றில் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்று அறிவிப்பு



புதுடில்லி, பெப்ரவரி 28

இலங்கையில் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு இந்திய அரசுக்கு உள்ளது என்று தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கை அரசு உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் குற்றம் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அத்துடன், போர் நடைபெற்ற காலம் இலங்கை வரலாற்றில் மோசமானகாலம் என்றும் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை

பார்க்க பக்கம் 04

## மனித உரிமை மீறல்களுக்கு உரிய விசாரணை அவசியம்

### இலங்கையிடம் வலியுறுத்துகிறது பிரிட்டன்

லண்டன், பெப்.28

இலங்கை மீது போர்க் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பிலிருந்தும் வலுத்துவரும் நிலையில், மனிதாபிமான சர்வதேச சட்டமீறல்கள் தொடர்பாக இலங்கை முறையான விசாரணைகளை மேற்கொண்டு இவற்றுக்குப் பொறுப்பானவர்களை நீதிக்கு முன் நிறுத்த

பார்க்க பக்கம் 23


## மோசமான பாதையில் இலங்கை மாநாட்டை புறக்கணிப்பது உறுதி

### கனடா மீண்டும் திட்டவட்டம்

மொன்றியல், பெப்.28

இலங்கை விடயத்தில் மென்போக்குடன் நடந்து கொள்ளுமாறு பொதுநலவாயத்தால் விடுக்கப்பட்ட அழைப்புகளை அடியோடு நிராகரித்துள்ள கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர், இந்த ஆண்டு இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவில் இருந்து தாம்

பார்க்க பக்கம் 04




பதவியில் இருந்து விலகும் பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பர் ரோம் சென்.பீற்றர் சதுக்கத்தில் நேற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்க தனது இறுதி ஆசீரை வழங்கினார். அங்கு குழுமியிருந்த மக்கள் கண்ணீர் மல்க கையசைத்து அவருக்கு விடை கொடுத்தனர். (த)

## அமெரிக்காவின் பிரேரணை ஐ.நா. கொள்கைக்கு முரண்

### ஜெனிவாவில் சமரசிங்க நேற்று ஆவேசம்

ஜெனிவா, பெப்.28

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது அமர்வில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை தேவையில்லாத ஒன்று. அது கொண்டுவரப்படும் நேரமும் தவறானது. எனவே, இது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான ஜனாதிபதியின் சிறப்புத்தூதுவரான அமைச்சர் மஹிந்த சமர

பார்க்க பக்கம் 04

## காணாமல் போனோரைத் தேடி கொழும்பில் மார்ச் 6 இல் பேரணி

கொழும்பு,பெப்.28

காணாமல் போனோரைக் கண்டறியுமாறு கோரி எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. பேரணியின் முடிவில் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மனுக்களும் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

காணாமல் போன உறவுகளைத் தேடும் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பில் நடைபெறவுள்

பார்க்க பக்கம் 04

## நலன்புரி முகாம்கள் அரசுக்குத் தெரியாதாம்!

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப்.28

வலி.வடக்கு மக்கள் 23 வருடங்களாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் நலன்புரி நிலையங்கள் இருப்பது அரசுக்கு இதுவரை தெரியாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போரின் காரணமாக கடந்த 1990 ஆம் ஆண்டு வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்தனர். இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி முகாம்களிலும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் கடந்த 23 வருட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

அந்தநிலையில் நேற்று புதன்கிழமை அந்த மக்

பார்க்க பக்கம் 04

## உரிமையைக் கேட்டு ஐ.நா. செல்லும் தமிழரை யாரும் தடுக்க முடியாது

### அரசுக்கு மனோ கணேசன் சாட்டை

யாழ்ப்பாணம், பெப்.28

1989 ஆம் ஆண்டு அன்றைய எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சிங்கள மக்களின் மனித உரிமைக் கோரிக்கைகளை எடுத்துக் கொண்டு ஜெனிவா சென்றமை நியாயம் என்றால், அதை இன்று ஏன் எம்மால் எமது மக்களுக்குச் செய்ய முடியாது?

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குச் சென்று தமிழர்கள் நீதி கேட்கும் உரிமையில் எவரும் தலையிட முடியாது.

பார்க்க பக்கம் 04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உள்ளூராட்சிச் சபைச் செயற்பாடுகளுக்கு வடக்கு மாகாண சபை நிர்வாகம் குந்தகம்

## இனியும் அனுமதிக்க முடியாது என்கிறது தமிழரசுக் கட்சி

யாழ்ப்பாணம்,பெப்.28

மாகாணசபை நிர்வாகம் தொடர்ந்தும் தனக்குத் தேவையான நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிப்பதைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதனை இனி சட்ட - நிர்வாக ரீதியாக நாங்கள் எதிர்கொள்வோம்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :-

கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றியைப் பெற்றிருந்தது. பெரும்பாலான சபைகளின் ஆட்சியையும் கைப்பற்றியிருந்தது. இருப்பினும் கடந்த இரண்டு வருடகாலமாக இந்தச் சபை வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாதவாறு பல்வேறுபட்ட நெருக்குவாரங்கள் பிரயோகிக்கப்பட்டன.

30 வருடகாலமாக உள்ளூராட்சிச் சபை நிர்வாகம் இல்லாத இந்தப் பிரதேசத்தில், புதிய நிர்வாகம் 2011 ஆம் ஆண்டே தெரிவு செய்யப்பட்டது. எனவே அவற்றின் தலைவர்களும், உறுப்பினர்களும் புதியவர்கள். அவர்களுக்கு இந்த மாகாண சபையால் இதுவரையில் எந்தவொரு பயிற்சியும் வழங்கப்படவில்லை. எமது கட்சியாலேயே அவர்களுக்குப் பல் வேறுபட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மாகாணசபை நிர்வாகம் தொடர்ந்தும் தனது நிகழ்ச்சி நிரலிலேயே செயற்படுகின்றது. எமது ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகத்தை முடக்கும் வகையிலேயே மாகாணசபையின் நிர்வாகம் செயற்படுகிறது.

இனியும் இதனை அனுமதிக்க முடியாது. இவர்களின் இந்தச் செயற்பாட்டைச் சட்ட - நிர்வாக ரீதியாக எதிர்கொள்ளவுள்ளோம் - என்றார். (த-5)

# அங்கவீனமான குடும்பத்துக்கு உடன் உதவி வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,பெப்ரவரி.28

அரியாலை, உதயபுரம் கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமாகவுள்ள குடும்பம் ஒன்று தொடர்பில் நாடகம் வாயிலாக வெளிப்பட்டதைத் தொடர்ந்து அந்தக் குடும்பத்துக்கு வீட்டுக் கடன், சுயதொழில் ஊக்குவிப்பு மற்றும் மாதாந்தக் கொடுப்பனவு என்பவற்றை உடனடியாகவே வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அரியாலை, உதயபுரம் கிராமத்தில் 9 ஆம் குறுக்கு வீதி 192 ஆம் இலக்க, வீட்டில் வசிக்கும் பழனியாண்டி இராமையா என்பவரின் குடும்பத்துக்கே மேற்படி உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தக் குடும்பம் கடந்த 1995 ஆம் ஆண்டு போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஷெல் வீச்சில் மகன், மருமகன் இருவரையும் இவர்கள் இழந்துள்ளனர்.

அத்துடன் குடும்பத்தில் தகப்பன், தாய் மற்றும் இரு பிள்ளைகள் என நால்வரும் அங்கவீனர்களாகவே உள்ளனர். இதனால் மிகவும் வறுமைப்பட்ட நிலையில் தமது வாழ்வாதாரத்துக்காக விறகு வெட்டி விற்பனை செய்து வருகின்றனர். வறுமை காரணமாக அவர்கள் கொட்டில் வீட்டிலேயே வசித்து வருவதுடன், அங்கவீனமான 4 பேருக்கும் எந்தவொரு உதவிகளும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

> இலத்திரனியல் ஊடகம் ஒன்றினால் இந்தக் குடும்பத்தின் அவலநிலை வெளிக்கொணரப்பட்டது.

இலத்திரனியல் ஊடகம் ஒன்றினால் இந்தக் குடும்பத்தின் அவலநிலை வெளிக்கொணரப்பட்டது.

இதனையடுத்து மேற்படி குடும்பத்துக்கு இதுவரைகாலமும் ஏன் உதவிகள் வழங்கப் படவில்லை என்று சமூகசேவைகள் அமைச்சர் பீலிக்ஸ்பெரேரா அமைச்சின் செயலரிடம் வினவியுள்ளார்.

குறித்த குடும்பம் அந்தப் பகுதியில் வசிப்பது தமக்கு தெரியாது என்று அந்தப் பகுதி கிராம சேவகரும் , சமூக சேவை உத்தியோகத்தரும் தெரிவித்துள்ளனர். இதன் பின்னர் சமூக சேவை அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்படி குடும்பம் இனங்காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து குறித்த குடும்பத்துக்கு வீடமைப்புக்கு நன்கொடை நிதியாக இரண்டரை இலட்சம் ரூபாவும் சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவும், சமூக சேவைகள் அமைச்சின் மாதாந்தக் கொடுப்பனவாக மாதம் 3 ஆயிரம் ரூபாவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (த-5)

# கௌரவ கலாநிதிப் பட்டம் இம்முறை எவருக்கும் இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப் பட்டம் எவருக்கும் வழங்கப்படவில்லை. எவரும் இதற்குத் தெரிவு செய்யப்படவில்லை.

இதுகுறித்து கல்வியியலாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சமூக அந்தஸ்துள்ளவர்கள், சமூகப் பெரியவர்களுக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்படுவது வழமை. அவர்கள் சமூகத்துக்குச் செய்யும் சிறந்த பணியைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்படுகிறது. இவ்வாறுள்ள பலர் கௌரவ கலாநிதிப் பட்டத்தை எதிர்பார்ப்பர்.

அவர்களில் குறிப்பிட்ட சிலருக்காவது கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த முறையும் சிலருக்கு இந்தப்பட்டம் வழங்கப்பட்டது. ஆனால் இந்த முறை எவருக்கும் வழங்கப்படாதமையால் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இந்தமுறை பட்டமளிப்பு விழா அவசரஅவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இது தவிர இந்தமுறை பட்டதாரிகளும் அதிகம். அதனால் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்படவில்லை. அடுத்த முறை வழங்கப்படும் - என்றார். (த-4)

# நேற்று மட்டும் 4 பேருக்கு டெங்கு

**பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.**

யாழ்ப்பாணம்,பெப்.28

டெங்குக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகி நேற்று புதன்கிழமை மாத்திரம் நான்கு பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, கோப்பாய், இருபாலை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளிலிருந்து டெங்கு நோயாளர்கள் இப்போது இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் நூற்றுக்கும் மேற்பட்டோர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தற்போதும் பலர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். (த-4)

# அபராதம் செலுத்தத் தவறியவருக்கு சிறை

யாழ்ப்பாணம்,பெப்.28

பணம் மற்றும் கைத்தொலைபேசியைத் திருடியவர் அபராதம் செலுத்தத் தவறியதனால் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று புதன்கிழமை தீர்ப்புக்கு வந்தது.

வேலணை 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தட்சணாமூர்த்தி தனயக்குமரன் என்பவரே திருட்டுக் குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர், தான் சுற்றவாளியென்று தெரிவித்ததால் வழக்குத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. விசாரணையின் மூலமாக அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டது. திருட்டுப் பொருள்களும் அவரிடமிருந்து மீட்கப்பட்டன.

இதன்படி இந்தக் குற்றத்துக்காக அவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர் அபராதம் செலுத்தத் தவறியதனால் 2 வாரகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.(த-4)

# சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றவருக்குச் சிறை

யாழ்ப்பாணம், பெப். 28

பதின்ம வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டமை தொடர்பான வழக்கில் சந்தேகநபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு 6 மாத கால சிறைத் தண்டனை விதித்து, அதனை 5 வருடத்துக்கு ஒத்திவைத்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இந்தத் துஷ்பிரயோக முயற்சி இடம்பெற்றுள்ளது. இந்தக் குற்றச்சாட்டில் புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அல்பிரட் டக்ளஸ் பெர்னான்டோ என்பவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை நீதிமன்றில் முற்படுத்தி அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தனர் - பொலிஸார்.

சந்தேகநபர், தான் சுற்றவாளியென்று மன்றில் தெரிவித்ததால் வழக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

அவர் தொடர்பான வழக்கு விசாரணையின் இறுதியில் அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

இதனையடுத்து அவருக்கு நேற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதன்படி அவருக்கு 6 மாத சிறைத்தண்டனை விதித்து 5 வருடங்களுக்குத் தண்டனை ஒத்திவைக்கப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் குறித்த குற்றவாளி மீண்டும் அவ்வாறான குற்றச் செயலில் ஈடுபடுவாராயின், அவர் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். (த -4)

# பெண்களுக்கான சிகை அலங்கார பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.28

பெண்களுக்கான சிகை அலங்கார இலவச பயிற்சி நெறிகள் கைதடியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆர்வமுடையவர்களை விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கைதடி நவீல்ட் பாடசாலையில் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. 3 மாத கால பயிற்சி நெறியாக முற்பகல் தொடக்கம் பிற்பகல் வரை இது நடைபெறவுள்ளது.

ஆர்வமுடையவர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் எஸ்.மகேந்திரன் கேட்டுள்ளார். (த-4)

# சட்டவிரோத மின்சாரம்; சிக்கினர் நான்கு பேர்

## நட்டஈடு செலுத்த நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம்,பெப்.28

ஊர்காவற்றுறையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற நால்வரையும் மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய நட்டஈடாக 2லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை செலுத்த உத்தரவிட்டதுடன் அபராதமும் விதித்தது நீதிமன்றம்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நால்வரையும் பொலிஸாரூடாக மின்சாரசபையினர் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணையின் மூலமாக நால்வரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்கு நட்ட ஈடும் அபராதமும் விதிக்கப்பட்டது.

இதன்படி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குசலநாதன் இளமாறன், நட்டஈடாக மின்சாரசபைக்கு 19 ஆயிரத்து 932 ரூபாவும், மருதசீலன் இம்மானுவேல், நட்டஈடாக 86 ஆயிரத்து 293 ரூபாவும், வேலணையைச் சேர்ந்த துரைசாமி சரோஜினிதேவி நட்டஈடாக 44 ஆயிரத்து 626 ரூபாவும், கந்தசாமி மதியழகன் நட்டஈடாக 79 ஆயிரத்து 962 ரூபாவும் மின்சார சபைக்கு செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

இது தவிர நால்வருக்கும் நீதிமன்ற அபராதமாக தலா ஆயிரம் ரூபா வீதம் 4 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (த-4)

# மருத்துவர் சிவசங்கருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

## குற்றப் பத்திரமும் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.28

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவர் இ.சிவசங்கர் மீதான குற்றப்பத்திரம் அடங்கிய விவரக் கோவை சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது. மருத்துவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தது நீதிமன்றம்.

மருத்துவர் இ. சிவசங்கர் கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி கொக்காவில் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மருத்துவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். அவர் இலத்திரனியல் உபகரணங்களுடன் இராணுவ முகாமுக்குள் நுழைந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. அவருக்கு எதிரான குற்றப்பத்திரம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாத நிலையில் இருந்தது.

இந்த நிலையில் மருத்துவர் தொடர்பான குற்றப்பத்திரம் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்கள முறைப்பாட்டு இலக்கம் என்பன முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டன.

மருத்துவர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. குற்றப்பத்திரம் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் மருத்துவர் மீதான வழக்கு அடுத்தமுறை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-4)

# இ.போ.ச. வடக்கு டிப்போக்கள் செலுத்தவில்லை சேமலாப நிதி

## பலமுறை அறிவித்தும் பயனேதும் இல்லை

*யாழ்ப்பாணம், பெப்.28*

*இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய டிப்போக்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகச் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாக தொழிற் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் வடக்கு இ.போ.ச. டிப்போக்கள் இந்த நிதியை செலுத்த வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் பணியாற்றும் சகல பணியாளர்களுக்குமான இந்த ஊழியர் சேமலாப நிதிக்குரிய கொடுப்பனவை செலுத்துமாறு பல தடவைகள் தொழிற் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை அந்த நிதி செலுத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனை அடுத்துச்சபைக்கு எதிராகத் தொழில் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் தொழிற் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வடக்கில் உள்ள சகல தொழில் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பன பணியாளர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியினைத் தவறாது செலுத்தி வருகின்றன.

இவ்வாறு பணியாளர்களுக்கு நிதி செலுத்தத் தவறும் நிறுவனங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தொழிற் திணைக்களம் கூறியுள்ளது. (த-17)

# விழிப்புலனற்ற முதியோரை பராமரிக்க முதியோர் இல்லம்

## யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.28

விழிப்புலனற்ற முதியோரைப் பராமரிப்பதற்கென தனியான முதியோர் இல்லம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சமூகத்தில் கைவிடப்பட்ட கண் பார்வையற்ற வயோதிபர்களை தனியாக குறித்த இல்லத்தில் வைத்து பராமரிப்பது அவர்களின் தேவையை நிறைவேற்றுவதற்கும் விழிப்புலனற்றோர் சங்கம் தீர்மானித்திருப்பதாக சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

அதிகமான முதியோர் இல்லங்களில் கைவிடப்பட்ட அதுவும் கண்பார்வையற்ற முதியவர்களை அனுமதிப்பதற்கு பின்னடிக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணத்தால் தான் விழிப்புலனற்ற வயோதிபர்களுக்கென தனியான முதியோர் பராமரிப்பு இல்லம் ஒன்றை அமைப்பதற்கு சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கென காணி ஒன்றைக் கொள்வனவு செய்து பின்னர் அதில் முதியவர்களைப் பராமரிப்பதற்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி முதியோர் இல்லத்தை அமைப்பதற்குரிய நிதிவளத்தை தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது..(வ-17)

# நுளம்பு பெருகும் இடங்கள் யாழ். நகரில் கண்டுபிடிப்பு

தென்மராட்சி,பெப்.28

யாழ். நகரில் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக இருந்த இரண்டு இடங்கள் நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டன. அந்த இடத்தின் உரிமையாளர்கள் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படவுள்ளனர் என்று யாழ். மாநகர பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் க.ஆ. ஜீவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டெங்கு ஒழிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கையின் போது யாழ். நகர் கஸ்தூரியார் வீதியில் 2 இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

கஸ்தூரியார் வீதியில் உள்ள 2 வீடுகளில் கிணற்று நீர் தேங்கி நின்ற இடங்களில் நுளம்பு பெருக்கத்துக்கான அறிகுறிகள் காணப்பட்டன. அந்த வீடுகளின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

மாநகர சபை சுகாதாரப் பரிசோதகர் பி.ஆறுமுகதாசன், சுகாதார பாதுகாவலர் பி.ஜொசெப் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேரடியாகச் சென்று அவதானித்த பின்னரே இந்த இரண்டு வீடுகளின் உரிமையாளர்களுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாக இருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த-13)




*யாழ். நகரில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை மீண்டும் அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பாக யாழ். முற்றவெளி பிரதேசத்தில் மாலை நேரங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் வீதிகளில் நடமாடுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் விபத்துக்களும் நிகழ்கின்றன. (த-17)*

# திருடப்பட்ட மோ.சைக்கிள் பற்றைக்குள்ளிருந்து மீட்பு

தென்மராட்சி,பெப்.28

நுணாவில் மத்தி பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு அருகில் உள்ள பற்றைப் பகுதியில் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்தது.



நுணாவில் மத்தியைச் சேர்ந்த சாவகச்சேரி சந்தை வியாபாரியான ஐயாத்துரை ரவிக்குமார் என்பவரது வீட்டினுள் கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு கறுப்புத் துணியால் முகத்தை மூடிக் கட்டிய நிலையில் நுழைந்த பத்துப் பேர் கொண்ட திருட்டுக் கும்பல் அங்கிருந்த பெண்ணின் கழுத்தில் கத்தி வைத்துப் பயமுறுத்தி நகைகள் , பணம், கையடக்கத் தொலைபேசி உட்பட பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்தது.

பின்னர் வீட்டு விறாந்தையில் விடப்பட்டிருந்த சூட்டிபெப் மோட்டார் சைக்கிளையும் இரண்டு தலைக் கவசங்களையும் எடுத்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டதையடுத்து நேற்று புதன்கிழமை அதிகாலை சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி மயானத்துக்கு அருகில் உள்ள பற்றைப் பகுதியில் அநாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டுக் கொண்டு சென்றுள்ளனர். (த-9)

# புதிய விதை நெல் இனம் அறிமுகமாகிறது யாழில்

## குறைந்த நீரிலும் அதிக விளைச்சல் தரும்

யாழ்ப்பாணம், பெப்.28

உயர் விளைச்சலைத் தரக்கூடிய புதிய வெள்ளை விதை நெல் இனத்தை பி.ஐ.சி நிறுவனம் இனங்கண்டுள்ளது. இதனை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தம்புள்ளை பேள் விகாரை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இந்த புதிய விதை நெல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் மூன்று மாத காலத்தில் விளைச்சலைப் பெற்றுத் தரக்கூடிய இந்த புதிய விதை நெல்லுக்கு பி.ஐ.சி 301 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

குறிப்பாக ஓர் ஏக்கருக்கு குறைந்த பட்சம் 120 புசலை விளைச்சலாகப் பெற்றுத் தரக்கூடிய இந்தப் புதிய வெள்ளை இன விதை நெல்லை நாடு முழுவதும் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மழை வீழ்ச்சி குறைந்த மற்றும் நீரின் தன்மையை மட்டுப்படுத்தி இந்தப் புதிய நெல்லைப் பயிரிட முடியும் என்று விவசாய ஆராய்ச்சி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் புதிய விதை நெல்லை யாழ். குடாநாட்டிலும் அடுத்த போகத்தின் போது அறிமுகப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போதிய மழை வீழ்ச்சியை எதிர்பார்க்காமலே இப் புதிய நெல்லை பயிரிட முடியும் எனவும் இதன் மூலம் விவசாயிகள் அதிக பலனை அடைய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# மேலுமொரு சைக்கிள் தரிப்பிடம் யாழ். நகரப் பகுதியில் அமையும்

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ். நகரில் சைக்கிள் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மின்சார சபையின் வளாகத்தில் இந்த சைக்கிள் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது.

குறிப்பாக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்தப்படும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றை இனிமேல் இந்தத் தரிப்பிடத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சைக்கிள்களை நிறுத்துவதற்கு முற்றாகத் தடை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்துவதால் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-17)

# சுகாதாரத் தொழிலாளர் ஆட்சேர்ப்பு கல்வித் தகைமையைக் குறைக்குக

## வலி. கிழக்கு பிரதேச சபைகளில் தீர்மானம்

பிரதேச சபைகளினால் கோரப்பட்டிருக்கும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கான பதவிக்கு ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ள தகைமையை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும் எனக் கோரி வலி. கிழக்கு பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி. கிழக்கு பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகச் சபையின் தவிசாளர் அ. உதயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையில் உள்ள பிரதேச சபைகளில் சுகாதாரத் தொழிலாளர்களின் நியமனத்துக்கு 8 ஆம் வகுப்பு சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற கல்வித் தகைமை அடிப்படையிலேயே தொழிலாளர்கள் இணைக்கப்படுகின்றனர். ஆனால் இங்கு ஜி.சீ.ஈ க.பொ.த சாதாரண தரம் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற கல்வித் தகைமையை உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசின் 1-86 சுற்றறிக்கைக் நிருபத்துக்கமைய சுகாதாரத் தொழிலாளர் நியமனத்துக்கான கல்வித் தகைமையை 8 ஆம் வகுப்பு சித்தியாகக் குறைக்க வேண்டும். அத்துடன் வலி கிழக்கு பிரதேச சபையில் ஏற்கனவே தற்காலிக சுகாதார தொழிலாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் இந்தத் தீர்மானம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றார். (த-17)

## காணாமல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு, கிழக்கில் காணமற்போன உறவுகளின் பெற்றோர், உறவினர்கள் ஆகியோருடன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

காணமற்போன உறவுகளின் நிலைபற்றி தெளிவுபடுத்துமாறு கோரியும் இது தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## நலன்புரி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்றிருந்தார்.

நீதிவான் முகாம், கோணப்புலம் முகாம், தும்பளை முகாம், தும்புத் தொழிற்சாலை முகாம், பிள்ளையார் முகாம், ஆலடி முகாம், சபாபதிப்பிள்ளை முகாம், கண்ணகி முகாம் ஆகியவற்றுக்கே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரடியாகச் சென்றிருந்தார்.

அதன்போது நலன்புரி முகாம்கள் மத்தியில் அவர் கருத்துத் தெரிவிக்கும்போது-

இவ்வாறான இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள நலன்புரி முகாம்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பது அரசுக்கு இதுவரையில் தெரியாது. இங்குள்ள குறைபாடுகள், வசதியீனங்கள் தொடர்பாக அறிந்து அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளேன். இந்த நலன்புரி முகாம்களைப் புனரமைப்பதற்காகவே அவற்றைச் செய்யவுள்ளேன்- என்று கூறியுள்ளார்.

இதற்கு நலன்புரி முகாம்களில் இருந்த மக்கள், நீங்கள்இதனைத் திருத்தித் தரப் போவதாகச் சொல்வதைப் பார்த்தால், எங்களை இங்கேயே குடியமர்த்தப் போகிறீர்கள் போன்று தோன்றுகின்றது-

நலன்புரி முகாமை நீங்கள் புனரமைத்துத் தரவேண்டாம். எங்களைச் சொந்த இடங்களில் வாழவிடுங்கள். நாங்கள் எங்கள் உழைப்பிலேயே, சொந்த மண்ணில் வாழ்வோம்- என்று பதிலளித்துள்ளனர்.

அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நான் உங்களை மயிலிட்டி வரை கொண்டு சென்று இருத்தியிருப்பேன். நீங்கள் உண்ணாவிரதப் போராட்டம் செய்து குழப்பி விட்டீர்களே- என்று தெரிவித்தார்.

நாங்கள் உண்ணாவிரப் போராட்டம் செய்ததால் தானே இன்று இங்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று மக்கள் அமைச்சரிடம் நையாண்டியாகக் கேட்டனர்.

இதேவேளை, கடந்த செப்ரெம்பர் மாதம், தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஆயிரத்து 556 குடும்பங்கள் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளனர் என்று தெல்லிப்பழை பிரதேச செயலரினால் தெரிவிக்கப்பட்டிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (த-5)

## போர்க்குற்ற...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போது மீள இலங்கை வந்துள்ளார். இந்தக் குறுகிய காலகட்டத்தில் பல துறைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் குறித்தும் இவர் பெருமிதம் தெரிவித்துள்ளார். அதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக இன்னும் காத்திரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி போதியளவு ஏற்படவில்லை. நீடித்த நல்லிணக்கப்பாட்டையும், நிரந்தரமான சமாதானத்தையும் மேற்கொள்ள துரித முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இவற்றுக்குக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தாக அமைவது அதிகாரப்பகிர்வே ஆகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிக்கட்டப் போரின்போது ஏற்பட்ட சிவிலியன்கள் பாதிப்பு, மனித உரிமை மீறல்கள் தொடர்பான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் ஆகியவை உட்பட போர்ச் சம்பவங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் கடப்பாடுகளும் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்றும் டெனிஸி ரொலின்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

சிறந்த வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கும், சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் இலங்கை மக்களோடு அமெரிக்க மக்களும் இணைந்து செயற்படுவார்கள். இரு நாடுகளுக்குமிடையிலான நெருங்கிய உறவுக்கும் ஆதரவளிப்பார்கள்.

உலகளவில் மக்களுக்கு அளிக்கும் உதவியால் சுகாதாரம், கல்வி, உற்பத்தி, ஜனநாயகம், ஆட்சி முறைமை மேம்பாடு அடைகிறது. அமெரிக்கா, அதன் ஸ்தாபக இலட்சியத்தை நிறைவேற்றுவதன் மூலமாக சுபீட்சகரமான நண்பர்கள், அயலவர்கள், வர்த்தக பங்குதாரர்கள் ஆகியோரை உருவாக்குகின்றது. ஸ்திரப்பாட்டை கட்டியெழுப்புகிறது.- என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## உரிமையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எமது பங்காளிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஜெனிவா சென்றுள்ளது. அதை ஊடகத்துறை அமைச்சரும், இனவாத அமைச்சர்களும் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல் என்று கூக்குரல் இடுகின்றனர்.

அது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயல் அல்ல. எங்களின் அடிப்படை உரிமை. அதை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது.

1989ஆம் ஆண்டு அன்றைய எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தெற்கில் சிங்கள மக்களின் மனித உரிமைக் கோரிக்கையை எடுத்துக் கொண்டு ஜெனிவா சென்றது நியாயம் என்றால், அதை இன்று ஏன் எம்மால் எமது மக்களுக்குச் செய்ய முடியாது?

2012ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்லாததால் பல விமர்சனங்களை எதிர்கொண்டது. அந்த வேளையில் தான் இலங்கைக்கு எதிராக முதன்முதலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்று தமிழர் தரப்பு ஜெனிவா செல்லாது இலங்கை அரசுக்குச் சந்தர்ப்பம் வழங்கியது. நமது பிரச்சினையை நாட்டுக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்வோம் என்பதே அது.

எனது நண்பர் அசாத் அலி கடந்த ஜெனிவா மாநாடு நடந்த காலத்தில் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டுத் தமது இனத்தின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முயன்றார். ஆனால் அது நடக்கவில்லை.

தமிழர்களும், முஸ்லிம்களும், ஐ.நா. சபையும் இந்த அரசுக்கு வழங்கிய சந்தர்ப்பங்களை அது புரிந்து கொண்டு செயற்படவில்லை. தமது சொந்தத் தயாரிப்பான கற்றுக்கொண்ட மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளைக் கூட நடைமுறைப் படுத்தவில்லை. அதை நடைமுறைப்படுத்துகிறோம் என்று கூறியே ஐ.நா.வில் சூடம் கொளுத்தி சத்தியம் செய்தார்கள்.

கடந்த 65 வருடங்களாக இந்த நாட்டை ஆண்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டுமே தமிழர்களுடன் கைகுலுக்கி ஒப்பந்தங்களைச் செய்துவிட்டுக் கிழித்து எறிந்தார்கள்.

தமிழர்களை ஏமாற்றியது போல் இன்று சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது. தமிழர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை கிழித்து எறிந்தது போல் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கிழித்து எறிந்துவிட முடியாது.

ஜெனிவா செல்ல வேண்டாம் என்று எங்களுக்குச் சொல்ல வேண்டாம். எங்களுக்கும் உள்நாட்டுப் பிரச்சினையை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்ல விருப்பம் இல்லைத் தான். ஆனால் என்ன செய்வது? அந்த சூழ்நிலையை நீங்கள் தானே உருவாக்கியுள்ளீர்கள்?

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்தால் எங்களுக்கும் சர்வதேசத்தை நாடிச் செல்லும் வேலை, தேவை இருக்காது- என்றார். (த-5)

## மோசமான...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பின்வாங்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

கனேடிய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை பிரிட்டன் உட்பட பொதுநலவாயத்தில் அங்கத்துவம் வகிக்கும் முக்கிய சில நாடுகள் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ள நிலையில், கனடாவின் நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்துள்ளார் பிரதமர் ஹாப்பர்.

இலங்கையில் மோசமாக இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள், சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறை, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசின் அசமந்தப் போக்கு ஆகியவை உட்பட மேலும் சில காரணங்களைக் கருத்திற்கொண்டே கனேடிய அரசு இத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதுதொடர்பில் கனேடிய நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் நிலைமைகள் முன்னேற்றமடையாது போனால், அங்கு நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருந்தேன்.

அந்த அறிக்கையை வெளியிட்ட பின்னர், அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கவலையளிக்கின்றன. அந்த நாடு மோசமான திசையில் சென்று கொண்டிருக்கிறது - என்றார்.

பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவை கனடா கைவிட வேண்டும் என்று பொதுநலவாயச் செயலர் கமலேஸ் சர்மா கேட்டுக் கொண்டிருந்தபோதும், தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார் என கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் மாநாட்டை நடத்த இலங்கை ஏற்புடைய நாடு அல்ல என்றும் மாநாட்டுக்கான இடத்தை மாற்ற வேண்டும் என்றும் மனித உரிமை அமைப்புகளும் கனடாவும் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளன.

இலங்கை தன் மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கத் தவறியுள்ளது என்றும் இலங்கையில் தொடர்ந்து மனித உரிமை மீறப்பட்டு சிவில் சமூகம் தாக்கப்படுவது நீதித்துறை தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன என்றும் குற்றச்சாட்டுகளே மாநாட்டு எதிர்ப்புக்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

கனடாவின் முடிவை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனைய சில நாடுகளும் மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவை அறிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இனிவரும் காலங்களில் இலங்கை அரசியல், பொருளாதார ரீதியில் பல நெருக்கடிகளைச் சந்திக்குமென எச்சரிக்கப்பட்டுள்ளது. (சி)

## தமிழர்களுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குறித்து இப்போது எதுவும் கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக நேற்று கொண்டுவரப்பட்ட கவனஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த விவாதத்தின் போது உரையாற்றிய அ.தி.மு.க. மற்றும் இடதுசாரிக்கட்சிகளின் உறுப்பினர்கள், இந்திய அரசு தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க எதுவும் செய்யவில்லை என்று குற்றம்சாட்டினர்.

அவற்றுக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கருத்துகளை முன்வைத்தார். வெளிவிவகார அமைச்சர் தமது உரையில் மேலும் தெரிவித்தவையாவது:-

போர் நடைபெற்றது இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான காலம். அங்கு மனித உரிமை மீறப்படுவது குறித்த விவாதம் நெகிழவைத்தது. தமிழர்களின் உணர்வுகளுக்கு காங்கிரஸ் மதிப்பளிக்கிறது.

எமக்கு கவலை இருக்கலாம், கோபம் இருக்கலாம். ஆனால் இலங்கையை ஒரு எதிரி நாடாக கூறக் கூடாது. தமிழ்நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்களின் கவலைகளை மதிக்கும் அதே வேளை, இந்தக் கவலைகள் அவர்களுக்கு மட்டும் தனியானது அல்ல.

இருந்தாலும், இன்னொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட முடியாது. இலங்கைப் பிரச்சினை மொழி ரீதியிலான பிரச்சினை அல்ல.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருப்தியளிக்கும் தீர்வே தேவை

மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணையில் வெளிப்படைத்தன்மை வேண்டும் என்று இலங்கையிடம் தொடர்ந்து இந்தியா வலியுறுத்தி வருகிறது.

எமது எல்லா அதிகாரபூர்வ சந்திப்புகளின் போதும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துமாறு இலங்கையிடம் வலியுறுத்தி வருகிறோம்.

பொறுப்புக்கூறல் இலங்கைக்குள் இருந்தே வரவேண்டும். குற்றம் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்ந்து நாம் வலியுறுத்தி வருகிறோம். வளமான, ஒன்றுபட்ட இலங்கையே எமக்குத் தேவை.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் திருப்தியளிக்கத்தக்க தீர்வு ஒன்றையே நாம் எதிர்பார்க்கிறோம்.

இலங்கை அரசு உண்மையை உணர வேண்டும். ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை குறித்து இப்போது எதுவும் கூற முடியாது.

### பெரிய அண்ணன் மனப்பாங்கு இல்லை

ஜெனிவா தீர்மான விவகாரத்தில் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படும். இது தொடர்பாக காரசாரமான விவாதம் நடத்தினாலும், சட்டப்படி தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஜனநாயகத்தில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவெடுக்க முடியாது. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு சட்டரீதியாகவு தீர்வு காணப்பட வேண்டும்.

இப்பிரச்சினையில் இந்தியா பெரிய அண்ணன் மனப்பாங்குடன் செயற்படவில்லை, சகோதரனாகத் தான் செயற்படுகிறது.

இலங்கைக்கு இந்தியா அதிகபட்ச மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது.- இப்படி சல்மான் குர்சித் தெரிவித்தார். (த-சி)

## அமெரிக்காவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை இறுதிக்கட்டப் போர் குறித்தும், சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படத்தின் உண்மைத்தன்மை பற்றியும் இலங்கை இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணை மன்றம் ஆராய்ந்து தனது கருத்துக்களை முன்வைத்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பேரவையில் இலங்கையின் தரப்பு வாதங்களை முன்வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பில் இலங்கை ஏற்கனவே உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிவிட்டது. இவ்வாறானதொரு நிலையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவிருக்கும் பிரேரணை தமது அபிப்பிராயப்படி தேவையற்ற ஒன்று என்றும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கையில் போருக்குப் பின்னர் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் நாம் மிகவும் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்ற நிலையில், விடுதலைப்புலிகள் அமைப்பின் எஞ்சியுள்ள தரப்பினர், சில மேற்கு நாடுகளில் இலங்கைக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு சர்வதேச சமூகத்தில் சில பிரிவுகள் எடுபட்டுவிட்டதது என்றும் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர் சமரசிங்க, அதனால், இலங்கை பக்கசார்பான, சமநிலையற்ற நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டது எனக் கூறப்படுவது தவறு. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை இறுதிப் போர் நிகழ்வுகள் குறித்தும், சனல் - 4 தொலைக்காட்சியின் ஆவணப்படத்தின் உண்மைத்தன்மை பற்றியும், ஏனைய பல விடயங்கள் குறித்தும், இலங்கை இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணைக் குழு ஆராய்ந்து தனது கருத்துக்களை முன்வைத்திருக்கிறது என்றும் அமைச்சர் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அந்த விசாரணைக் குழு தற்போது தனது இரண்டாவது கட்ட நடவடிக்கையாக, சனல் - 4 ஆவணப்படம் குறித்த புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளது. மேலும் திருகோணமலை மாணவர்கள் படுகொலை மற்றும் ஏசிஎஃப் கொலைகள் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அதற்கு சிரேஷ்ட அரச சட்டத்தரணிகளின் குழுவொன்று உதவுகின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்க ஆணைக் குழுவின் இடைக்காலப் பரிந்துரைகள் குறித்த விடயத்தில், அவற்றில் சில ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டன என்பதையும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், காணிகள் குறித்த பிரச்சினைகளின் தீர்வுக்காக காணி ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் குறைக்கப்பட்டு வருவதாகவும், மக்கள் நடமாட்டத்துக்குத் தடை எதுவும் கிடையாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட்டு, வழமை நிலைமைக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும், 75 வீதமான கண்ணிவெடிகளை இலங்கை இராணுவம் அகற்றிவிட்டது என்றும், புனர்வாழ்வு நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளை இலக்கு வைப்பதற்கான ஒரு ஏற்பாடு அல்ல. அது முன்னாள் போராளிகளின் நலன்களுக்கான ஏற்பாடு என்றும் அமைச்சர் சமரசிங்க தமது உரையில் தெரிவித்துள்ளார். (சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இந்தியாவின் தளம்பல் நிலை இம்முறையும் ஐ.நா.வில் தொடருமா?

நீண்ட காலமாக நிலவி வரும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். அதுவரையில், இந்தப் பேரவையில் இலங்கை தொடர்பான செயற்பாடுகள் முடிவடைந்துவிட்டன என்று கருதக்கூடாது; அவ்வாறு ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் அமெரிக்காவின் அனைத்துலக விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் எஸ்தர் பிரிமீர்

ஜெனிவாவில் இப்போது நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இருபத்திரெண்டாவது கூட்டத் தொடரில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட கருத்தை தமது அரசு சார்பில் கூறினார்.

அதேவேளை, அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையில் இம்முறை கொண்டுவரவுள்ள பிரேரணை-

இலங்கையில் நீண்ட காலமாக ஸ்தம்பித்துப்போயுள்ள, நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளின் தேக்க நிலை நீக்கப்பட்டு பொறுப்புக் கூறும் கடப்பாட்டைத் துரிதப் படுத்த உந்து சக்தியாக விளங்கும்-என்றும் அவர் அழுத்தித் தொட்டுக் காட்டியுள்ளார்.

இந்த உரையை மேலோட்டமாக நோக்கும் போது, அது மேலெழுந்த வாரியான கருத்தாகத் தென்பட்டாலும் அது மிக ஆழமானது என்பதில் சந்தேகம் கொள்ள முடியாது.

இத்தனைக்கும்-

அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயார் என்று இலங்கை அறிவித்திருந்த வேளையில், தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கப் போவதாக வெளிவந்த செய்தியை ஒரு முக்கிய திருப்பம் எனக் கொள்ளலாம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற 19 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்காவின் பிரேரணையை இறுதி நேரத்திலேயே ஆதரிக்க இந்தியா முடிவுசெய்தது. இந்த ஆண்டு மற்றொரு பிரேரணையை கொண்டுவரப்போவதாக அமெரிக்கா அறிவித்தபோது, இந்தியா ஆதரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் கூட, கடைசிவரை இந்தியா உத்தியோகபூர்வமாக கருத்துத் தெரிவிக்கவில்லை. கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு இரு தினங்களுக்கு முன்பே பிரதமர் மன்மோகன்சிங் தமது நாட்டின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான முதலாவது தீர்மானத்துக்கு இந்தியாவின் ஆதரவு அமெரிக்காவுக்கு அவசியமாக இருந்தது. இந்தியா மிகவும் பலம்வாய்ந்த அயல்நாடு. பிராந்தியத்தில் பொருளாதார ரீதியில் வேகமாக வளர்ந்து வரும் நாடு.

அந்தக் காரணங்களால் இந்தியாவினால் இலங்கை மீது அழுத்தம்கொடுக்கமுடியும் என்று அமெரிக்கா எதிர்பார்த்தது. அதனாலேயே தனது பிரேரணையில் இருந்த சில சரத்துக்களை அமெரிக்கா நீக்கியது. அதன் கடுமையைக் குறைத்துவிட்டு இந்தியாவின் ஆதரவைப் பெற்றது.

அமெரிக்கப் பிரேரணையின் மூல வடிவத்தில் மாற்றங்களைக் கொண்டு வராமல் அது நிறைவேற்றப்பட்டிருப்பின் அதனைச் செயற்படுத்துவதில் ஐ.நாவின் தொழில்நுட்ப உதவிகளை இலங்கை பெற்றுக்கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டிருக்கும்.

அமெரிக்காவின் இப்போதைய இரண்டாவது பிரேரணை முன்னையதைவிட மிகவும் காரமானதாகவும் கடுமையான தாகவும் இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

போரின் இறுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாடு, இனங்களிடையே நல்லிணக்கம் இவை இரண்டிலும் இம்முறை அமெரிக்கத் தீர்மானத்தில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமிருக்கமாட்டாது என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி அமைச்சர் எஸ்தர் பிரிமீர் பரிந்துரைகளைச் செயற்படுத்தும் இலங்கையின் செயன்முறைத்திட்டத்தைக் கண்காணிக்கவும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் விடயங்களில் இலங்கைக்கு உதவவும் அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்தும் என்று அதிரடியாகத் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே, அமெரிக்கப் பிரேரணையில் இனி வெட்டிக் குறைப்புக்கு இடமில்லை.

அதனைத் தெரிந்து கொண்டே அமெரிக்கப் பிரேரணை குறித்துப் பேச இந்தியாவுக்கு ஒரு குழுவை அனுப்ப இலங்கை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாய நிலையில் இந்தியா இருந்து வருகிறது. கடந்த ஆண்டுநிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை செயற்படுத்தத் தவறியது மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் இந்தியாவுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் இலங்கை நிறைவேற்றவில்லை.

பாலச்சந்திரனின் மரணம் தொடர்பாக வெளிவந்துள்ள படங்கள், போர்க் காலத்தில் கைதுசெய்யப்பட்ட பலரை இலங்கை இராணுவத்தினர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்த குற்றச்சாட்டு இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிரான உணர்வலை மேலும் அதிகரிக்க வைத்துள்ளன.

இந்தியாவுக்கு இலங்கை அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமை, தமிழ்நாட்டில் இலங்கைக்குத் தெரிவிக்கப்படும் கடுமையான எதிர்ப்பு ஆகியவை இந்தியாவின் புவிசார் அரசியலைக்கூட பின்தள்ளிவிட்டன என்று கொள்ளலாம்.

கடந்த வருடத்தைப் போன்று இம்முறையும் இந்திய அரசு அமெரிக்காவுக்கு ''டிமிக்கி'' விடுவதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே தென்படுகின்றன.

# போரில் இறந்த மற்றும் காயமுற்றோர் தொடர்பான கணக்கெடுப்பு விரைவில்

## பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்குவதற்காக

கொழும்பு, பெப்.28

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு பரிந்துரைத்திருப்பதற்கு இணங்க கடந்த காலப் போரின் போது நாடு முழுவதும் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவுள்ளது.

பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மக்கள் கணக்கெடுப்பு-புள்ளிவிவரவியல் திணைக்களம் ஆகியவை இணைந்து இந்தக் கணக்கெடுப்பை நடத்த விருக்கின்றன.

1983 ஆம் ஆண்டிலிருந்து 2009இல் போர் ஓய்ந்தகாலம் வரையான காலப்பகுதி இந்த கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படும் என்று தகவல் திணைக்களம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பின் மூலம் போரின் போது இறந்து போனவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான சரியான புள்ளி விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மக்கள் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரவியல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கணக்கெடுப்பின் முக்கிய காரணங்களில் ஒன்று போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதாகும் என்று அவர் தெரிவித்தார்.

கணக்கெடுப்பில் கிராம சேவை அதிகாரிகள் ஈடுபடுவார்கள் என்றும் அவர்கள் வீடுகளுக்கு வரும் போது சரியான தகவல்களை வழங்கி மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ப)

# விவசாயக் குடும்பங்களின் மாணவருக்கு புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.மாவட்ட சமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் புலமைப்பரிசில்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காகப் பின்வரும் தகைமைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

★முழுநேர விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், பெற்றோரில் ஒருவராவது ஏதாவதொரு கமக்கார அமைப்பில் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

★சமுர்த்தி நிவாரணம் பெறாத குடும்ப அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

★2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தி 2014 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமது எல்லைக்குட்பட்ட கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற முடியும். பின்னர் தத்தமது கமக்கார அமைப்பின் பரிந்துரையுடன் உரிய கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை தாம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் பரிந்துரைக் கடிதத்துடனும் குறித்த கிராம சேவை உத்தியோகத்தரின் பரிந்துரைக் கடிதத்துடனும் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு நேரடியாக கையளிக்க வேண்டும்.

மேற்படி திட்டத்தில் வறுமை, குடும்பநிலை, பிள்ளையின் கல்வித்தரம், மீளக்குடியமர்வு என்பன கருத்தில் எடுக்கப்பட்டு தெரிவு நடைபெறும் என கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (த)

# மகளிர் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.28

மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டியை நடத்த நல்லூர் பிரதேச செயலகம் தீர்மானித்துள்ளது.

இந்தப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக கிராம மட்டத்தில் இருந்து 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ள முடியும்.

'குடும்பத்தைப் பாதுகாப்பவர்களை மேம்படுத்துவோம்', 'பெண்கள் மீது ஏற்படுத்தப்படும் வன்முறைகளைக் குறைப்பதில் சமூகத்தின் பங்கு', 'பெண்களை தாய் காப்பதில் குடும்பம், சமூகத்தின் பங்கு' என்ற தலைப்புக்களில் கட்டுரை 450 முதல் 500 சொற்களைக் கொண்டதாக அமைய வேண்டும்.

கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட மேற்படி கட்டுரைகளை எதிர்வரும் மார்ச் 12 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகப் பெண்கள் அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# கிராமிய வங்கி சமாசத்துக்கு புதிய தலைவர்

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ்.மாவட்டக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவராக யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.தெய்வேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சமாசத்தின் பொதுச்சபை கடந்த ஞாயிற்றுக்கிழமை சமாச மண்டபத்தில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தலைமையில் கூடியது.

இந்தக் கூட்டத்தில் பின்வருவோர் சமாசத்தின் இயக்குநர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

எஸ்.தனபாலசிங்கம், இ.சுந்தரலிங்கம், எஸ்.சிவகுமார், எஸ்.மகாலிங்கம், என்.சுந்தரலிங்கம், கே.நாகலிங்கம். (த-17)

# திருக்கேதீஸ்வரத்தில் இம்முறை சிறப்பான மகா சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், பெப்.28

பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரி விழா சிறப்பாக இடம்பெறவுள்ளது.

விழாவை முன்னிட்டு குடி தண்ணீர், சுகாதார, மருத்துவ சேவைகளை பொதுமக்களின் வசதி கருதி சிறப்பாக ஒழுங்கு படுத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதுடன் தொண்டர் சேவைகள், பொலிஸ் சேவைகள் என்பன வற்றையும் சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமை போன்று இம்முறையும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மகா சிவராத்திரி விழாவில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர்களுக்கான உணவு வழங்குவதில் தொண்டர் அமைப்புகள், சமய சமூக நிறுவனங்கள் உரிய நடவடிக்கைகளை இப்போதே மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் இருந்தும் விசேட பஸ் சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கான வசதிகள் குறித்த அனைத்து செயற்பாடுகளும் மன்னார் அரச அதிபரின் ஒத்துழைப்புடன் நடைபெறுவதாகவும் பக்தர்களை மகா சிவராத்திரி விழா சிறப்பாகவும் அமைதியாகவும் நடைபெற ஒத்துழைக்குமாறும் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை இம்முறை ஆலயச் சுற்றாடலில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாகக் கடதாசிப் பைகளைப் பயன்படுத்துமாறும் இதற்கான கடதாசிகளைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆலய திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் பாலாவியில் சவர்க்காரம், சம்போ பாவனை என்பனவும் தடைசெய்யப்பட்டுள்ளன. (த-7)

## கிளிநொச்சி மாவட்டத்தில் அருகிவரும் கால்நடை வளம்

கிளிநொச்சி,பெப்.28


கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை வளம் அருகி வருவதாக இங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இந்த நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போரின்போது பெருமளவு கால்நடைகள் அழிக்கப்பட்டமையும், ஏராளமான கால்நடைகள் வேறு இடங்களுக்குக் கடத்தப்பட்டமையும் இதற்கான முக்கிய காரணங்கள் எனத் தெரிய வருகின்றது.

போருக்கு முன்னர் போதியளவு பால் வளத்தைக் கொண்டிருந்த கிளிநொச்சி மாவட்டம், இன்று இங்கு வசிக்கும் மக்களின் தேவையைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் கால்நடை வளத்தைப் பெருக்கும் பொருட்டு வேறு இடங்களிலிருந்து நல்லின கால்நடைகளை இங்கு கொண்டு வர முடியாத நிலை காணப்படுவதாக கால்நடை திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)



முல்லைத்தீவு மாவட்டம் இரணைப்பாலையில் போரின்போது சேதமடைந்த அன்னை மரியாள் ஆலயம் புனரமைக்கப்பட்டு புதுத்தோற்றத்துடன் காணப்படுகின்றது. (க-6)

## கற்றல் உபகரணங்கள்

அக்கராயன்,பெப்.28

கிளிநொச்சி செல்வ நகரைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பட்டதாரிப் பயிலுநர் ஒருவரின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்களை கொழும்பு லயன்ஸ் கழகம் வழங்கியது.

வறுமைக் கோட்டின் கீழ் வரும் இம் மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## முன்பள்ளிக் கட்டடங்கள் திறந்து வைப்பு

கிளிநொச்சி,பெப்.28

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இத்தாவில், பளிக்கையடி ஆகிய பிரதேசங்களில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடங்களே கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அல்லிப்பளை - அறத்தி நகரில் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற்ற மக்களால் சுவிஸ் அபிவிருத்தி ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் அலெக்ஸ், பிரதேசசபை உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், கூட்டுறவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-எ)

# பரவிப்பாஞ்சான் மக்களுக்கு எப்போது விமோசனம்?

### அவல வாழ்வு வாழ்வதாக அவர்கள் கவலை

கிளிநொச்சி,பெப்.28

தாம் தொடர்ந்தும் அவல வாழ்வு வாழ்வதாக கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். எப்போது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்து தாங்கள் இயல்பு வாழ்க்கையை ஆரம்பிப்பது என்றும் அவர்கள் ஏக்கத்துடன் கேட்கின்றனர்.

போர் ஓய்ந்து மக்கள் மீள்குடியமர்ந்த நிலையிலும் பரவிப்பாஞ்சான் மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு இதுவரை அனுமதிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 107 குடும்பங்கள் வாடகை வீடுகளிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளன.

> தற்போது 107 குடும்பங்கள் வாடகை வீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

அதனால், இவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

இந்தக் கிராமம் 1939 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இங்கு வசித்த 156 குடும்பங்கள் சொந்தக் காணிகளைக் கொண்டிருந்தன. தற்போது 107 குடும்பங்கள் மட்டுமே உள்ளன.

சுமார் 412 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இந்தக் கிராமமும் இதற்கு அருகில் காணப்படுகின்ற மருதநகர்க் கிராமத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள 30 ஏக்கர் நிலப் பகுதியும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையிலேயே தற்போது காணப்படுகின்றன.

தமது அவல நிலையை உணர்ந்து அதிகாரிகள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த வேண்டுமென பரவிப்பாஞ்சான் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

## மரக்கறி, பழவகைகளை பயிரிட்டு அதிக இலாபம் பெறுங்கள்

### கிளிநொச்சி விவசாயிகளுக்கு அறிவுறுத்து

அக்கராயன்,பெப்.28

கிளிநொச்சி விவசாயிகள் மரக்கறி மற்றும் பழ வகைகளைப் பயிரிடுவதில் அக்கறை செலுத்த வேண்டுமென விவசாயத் திணைக்களத்தினர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இவர்கள் நெற்பயிருக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை இவற்றுக்கும் வழங்கினால் அதிக இலாபத்தைப் பெற முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

> நெற்பயிருக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை இவற்றுக்கும் வழங்கினால். அதிக இலாபத்தைப் பெற முடியும்.

விவசாயிகள் நெற்செய்கையில் மட்டுமே ஈடுபடும்போது காலநிலை மாற்றத்தினால் அழிவுகளைச் சந்தித்து வருகின்றனர். இதனால் தாம் பெற்ற கடன்களைக் கூடச் செலுத்த முடியாத நிலையில் இவர்கள் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் இவர்கள் நெற்செய்கையை மட்டுமே நம்பியிருக்காது மரக்கறி மற்றும் பழவகைகளையும் பயிரிட வேண்டுமென விவசாயத் திணைக்களத்தினர் ஆலோசனை வழங்கி வருகின்றனர். (க-18)


# கிளிநொச்சி நெல் கொள்வனவு நிலையத்தில் ஏற்படும் தாமதத்தால் விவசாயிகள் சிரமம்

கிளிநொச்சி, பெப். 28

கிளிநொச்சி நெல் கொள்வனவு நிலையத்தில் கொள்வனவு நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதங்களால் அங்கு நெல்லை எடுத்துச் செல்லும் விவசாயிகள் அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வந்துள்ளது.

மழையின் காரணமாக பெரும் அழிவையும் நட்டத்தையும் எதிர்கொண்ட விவசாயிகள் தாம் எஞ்சிய நெல்லை அறுவடை செய்து விற்பனை செய்யும் போது அதிக சிரமங்களை எதிர்கொள்வதாகக் கவலை வெளியிட்டுள்ளனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலையில் நெல்லைக் கொள்வனவு செய்யும் இந்த நெல் கொள்வனவு நிலையம், நாளொன்றுக்கு வரையறுக்கப்பட்ட அளவிலேயே நெல்லைக் கொள்வனவு செய்வதால் தாம் நாள்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதிகாலை மூன்று மணிக்கே நெல் கொள்வனவு நிலையத்துக்கு வந்து வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும், அவ்வாறு காத்து நின்றாலும் சிலவேளைகளில் மறுநாளே நெல்லை வழங்க முடிவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



நெல் கொள்வனவு நிலையத்தில் ஒரேயொரு உத்தியோகத்தரே கடமையில் உள்ளார். இதனால் தாமதங்கள் ஏற்படுவதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் பெய்த பருவம் தவறிய மழையால் 60 வீதமான நெற்செய்கை பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-எ-6)

## வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில் இடம்பெயர்ந்து செல்லும் குடும்பங்கள்

### மாந்தை கிழக்கில் இந்த அவலம்

கிளிநொச்சி,பெப்.28

போதிய வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் மாந்தை கிழக்கிலுள்ள பல குடும்பங்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில்உள்ள மூன்று முறிப்பு, வீரப்பிராயர் குளம், இளமருதன்குளம், கொம்பு வைத்தகுளம், சிறாட்டி குளம், கிடாய்பிடித்த குளம், பாலைப்பாணி ஆகிய விவசாயக் கிராமங்களில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்கடந்த காலங்களில் வாழ்ந்து வந்தன. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் விவசாயச் செய்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

ஆனால் மீள்குடியமர்வு இடம்பெற்ற மேற்படி கிராமங்களில் போதிய வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது.

வைத்தியசாலைகள், பாடசாலைகள், போக்குவரத்து வசதி என்பன இல்லாத நிலையே இங்கு காணப்படுகின்றது.

இதனால் இங்கு மீளக்குடியமர்ந்த பெருமளவு குடும்பங்கள் வேறு இடங்களை நாடிச் செல்வதைக் காண முடிகின்றது.

இங்கு தொடர்ந்து வசிக்கும் குடும்பங்கள் எங்கும் செல்லமுடியாத நிலையில் அவலங்களுடன் வாழ்ந்து வருகின்றனர் என்றும் தெரிய வருகின்றது. (க-6)

# சிதம்பரபுரம் மக்களை தொடர்ந்து வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்

வவுனியா, பெப். 28

வவுனியா சிதம்பரபுரம் மக்களை தொடர்ந்து அங்கு வசிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் சிறிரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா.

சிதம்பரபுரம் முகாமில் வாழ்கின்ற மக்களை கடந்த வாரம் நேரில் சந்தித்த அவர் மேலும் கூறியதாவது:-

போருக்கு முன்னரே சிதம்பரபுரம் முகாம் அமைக்கப்பட்டது. இங்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மலசலகூடமோ, குடிதண்ணீரோ அல்லது நிம்மதியாக வாழக்கூடிய சூழலோ இங்கு இல்லை. அவர் களைப் பார்வையிடச் செல்லும் அதிகாரிகள் அவர்களை அங்கு வாழ முடியாது என்றும் விரும்பினால் வேறு இட்ங்களுக்குச் செல்லுங்கள் எனவும் கூறுகின்றனர்.

> சிதம்பரபுரம் மக்கள் கடந்த 20 வருடங்களாக இந்த இடத்தில் வாழ்ந்ததன் அடிப்படையில் இலங்கைச் சட்ட திட்டத்துக்கு அமைவாக அல்லது சட்டத்துக்கு அப்பால் மனிதநேயத்தின் பிரகாரம் அவர்களை இங்கு வாழ்வதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

மேலும் வீட்டுத் திட்டத்தையோ அல்லது வேறு எதையுமோ இங்கு இருக்கும் வரை தரமுடியாது எனவும் கூறிச் செல்கின்றனர் என அந்த மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். குறிப்பாக வன்னி பெருநிலப்பரப்பைப் பொறுத்தவரை இங்கு 80 வீதமானவர்கள் வேறு இடங்களிலிருந்து வந்து குடியேறியவர்களே. அவர்கள் அரச காணிகளில்தான் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை வாழ்ந்து வருகின்றனர்.

எனவே சிதம்பரபுரம் மக்களும் 20 வருடங்கள் வரை இந்த இடத்தில் வாழ்ந்ததன் அடிப்படையில் இலங்கைச் சட்ட திட்டத்துக்கு அமைவாக அல்லது சட்டத்துக்கு அப்பால் மனிதநேயத்தின் பிரகாரம் இங்கு வாழ்வதற்கு அனுமதி வழங்க வேண்டும்.- என்றார். (க)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியஐயர் ஈஸ்வரியம்மா



கரணவாய் கிழக்கை வசிப்பிடமாகக்கொண்ட பிரம்மஸ்ரீ சுப்பிரமணியஐயர் ஈஸ்வரியம்மா நேற்று (27.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணிய ஐயர்
வரதராஜசர்மா

கரணவாய் கிழக்கு.

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராசா பூமணி



நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா பூமணி கடந்த (25.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்ணன் -ஐயாத்தை தம்பதியரின் பாசமிகு மகளும் செல்வராசாவின் அன்பு மனைவியும் சரஸ்வதி, மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுகந்தினி (நல்லூர்), வசந்தினி (பிரான்ஸ்), காந்தகுமார் (பிரான்ஸ்), கஜேந்திரன் (சுரேஸ்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் இராஜகுமாரனின் (குமார்-K.M.P. Associate, திருநெல்வேலி) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.02.2013) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப.4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

389, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P. 0772294985

(33899)(8.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகிறேன்

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வைத்தியத்துறை (M.B.B.S) யில் தரம் IIஇல் சித்தி பெற்று



இன்று பட்டம் பெறும்
**குணாநந்தன் கார்த்திக்**
இதே துறையில் மேலும் பல பட்டங்களையும் சிறப்புக்களையும் பெற்று வாழ்க வளமுடன் என வாழ்த்துகிறேன்.

மாமி-ராதா செல்வநாயகம்
கொழும்பு.

(33872)(3.6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று 28.02.2013 யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறும் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A.(Hons) பட்டம் பெறும்

**பஞ்சநாதன் பிரியங்கா**

அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று பதவிகள் பல வகித்து சீரும் சிறப்புடன் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

27, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

Best wishes குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி நாகலட்சுமி



கேணியடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி நாகலட்சுமி நேற்று (27.02.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து ராசையா -சௌந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவகுரு குமாரசாமியின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2013) வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
ஸ்ரீகுமார் தர்மபூபதி(மகள்).

## கந்தையா நடராசா

(Retired Chief Assistant Head Reader, Printing Department - Government Press)



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் குமிழங்குழி (சக்கலாவோடை), கொழும்பு (76- 2/1 W.A.Silwa Mawatha, Wellawatha Colombo - 06)ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று முன்தினம் (26.02.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான காசிநாதன் (இளைப்பாறிய அதிபர்- சுப்பிரமணிய வித்தியாலயம்) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் பிரபாகரன் (லண்டன்), கண்ணகி (சிங்கப்பூர்), தயாகரன் (கண்ணன்- கனடா), குமாரதேவி (கவிதா- இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சித்ராங்கனி, சண்முகதாசன், தேன்மொழி ஆகியோரின் அன்பு மாமனும் ஜெயகணேஷ், தருண் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மீனாட்சி, நல்லதம்பி, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வரத்தினம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, நேசரத்தினம், Dr.கனகமலர், பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2013) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.30 மணியளவில் பொரளைகனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். 0112508803


## பார்மசிக்கு வேலையாள் தேவை

நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இயங்கும் பார்மசிகளுக்கு ஆள் தேவை.
அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு:-0774656428

(சி/6707)(3.6)

## வீடு வாடகைக்கு

ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் சகலவசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-0778035236

(33903)(3.6)

## விற்பனைக்கு

XK-xxxx என்ற இலக்கமுடைய HUNK மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0717511959

(33901)(3.6)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com
0215671111


# நன்றி கூறுகின்றோம்





கடமை நிறைவேற்று அதிபர்களாக இருந்த எமக்கு நிரந்தர நியமனம் கிடைப்பதற்காக அரும்பாடுபட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் அதன் பொதுச்செயலாளர் திரு சரா. புவனேஸ்வரன், சங்கத்தின் சிரேஸ்ட ஆலோசகர் திரு. த. மகாசிவம் அவர்களுக்கும் எமது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இனிவரும் காலங்களிலும் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிடுபவர்களின் கருத்துக்களுக்கு இடம்கொடாமல் எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்ற எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிரந்தர நியமனம் கிடைக்கப்பெற்ற,
கடமை நிறைவேற்று அதிபர்கள்,
வடக்கு மாகாணம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (28.02.2013) வியாழக்கிழமை நடைபெறும் 28ஆவது பட்டமளிப்பு விழாவில்

திருமதி.
**கல்யாணி பிரகலதன்**
அவர்கள் "கலைமாணிப்பட்டம்" பெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மென் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ இறையாசி வேண்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்-
பிரகலதன் (கணவன்), அபிஷேக் (மகன்), நடராஜா (அப்பா), பாமாதேவி (அம்மா), நிலாந்தினி (தங்கை), யோகச்சந்திரன் (மாமா), சிவபாக்கியம் (மாமி), நிக்ஷலா, கிஷாந்தினி (மைத்துனிமார்).

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்
**செல்வி.துஷியா சோமகுலசேகரம்**
அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறுகின்ற 28ஆவது பட்டமளிப்பு விழாவில் சமூகவியல் சிறப்புக்கலைமாமணி (B.A. Hons-Sociology Spe) பட்டம் பெறுகின்றமையை வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.தி மேலும் பல பட்டங்கள் பெற்று சகல செல்வங்களுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

Best wishes

ஊழியர்
நலன்புரிசங்கம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது அரசடிவீதி கந்தர் மடம் பத்திரிகை முகவரான த. சுந்தரலிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியார் திருமதி சுந்தரலிங்கம் மங்கையர்க்கரசி அவர்களின் பிரிவுகுறித்து ஆழ்ந்த துயரடைகின்றோம் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்
குடும்பத்தினர்.

# நல்லூர் பிரதேச சபை

## முக ஒப்பனை அழகுக்கலை மற்றும் கேக் ஐசிங் பயிற்சி நெறி-III

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள வறிய மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் முகமாக **நல்லூர் பிரதேச சபையினால்** நடத்தப்படும் மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் பெண் பயிற்சியாளர்கள் விண்ணப்பப் படிவத்தினை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் இலவசமாக பெற்று எதிர்வரும் **15.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் நல்லூர் பிரதேசசபை கொக்குவில் என்னும்** விலாசத்துக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் விண்ணப்பதாரர் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பதுடன் இதனை அப்பகுதி கிராம சேவையாளரின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 18 வயது தொடக்கம் 40 வயதுக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

**ப.வசந்தகுமார்.**
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை.

# மகேஸ்வரன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடந்த வருடம் 9 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

வடமராட்சி, பெப்.28

தொண்டமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரம மகேஸ்வரன் ஞாபகார்த்த இலவச வைத்தியசாலையில் கடந்த வருடம் 9 ஆயிரத்து 687 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வாரந்தோறும் புதன், ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெறும் இலவச சிகிச்சை மாதத்தில் 8 தினங்கள் நடைபெற்று வருகின்றன. வடமராட்சியைச் சேர்ந்த டாக்டர்கள் சேவை அடிப்படையில் மேற்படி வைத்தியசாலையில் வைத்திய சேவைகளை வழங்கி வருகின்றனர்.

கடந்த பத்து வரு டங்களுக்கு முன்னர் சந்நிதியான் ஆச் சிரமத்தில் நடத்தப் பட்டுவந்த இந்த வைத்திய சேவைக் கென தனியான வைத் திய சாலைக் கட்டடம் ஒன்று நிர்மாணிக் கப்பட்டு முன்னாள் இந்து கலாசார அமைச் சர் அமரர் மகேஸ்வர னின் ஞாபகார்த்த வைத்தியசாலை எனப் பெயர் சூட்டப் பட்டு 2010 ஆம் ஆண்டு தொடக்கம் செயற் பட்டு வருகின்றது.

(வ-8)

# இருவருக்கு அபராதம்

சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட இரண்டு பேருக்கு 20 ஆயிரம் ரூபா ஊர் காவற் றுறை நீதிமன் றத் தால் அபராதம் விதிக் கப்பட்டது.

காரைநகர் வலந் தலையைச் சேர்ந்த கந்த சாமி நாகம்மா மற்றும் அல்லைப் பிட்டி யைச் சேர்ந்த ஏ.குணசீலன் ஆகிய இருவரையும் பொலி ஸார் ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ். மகேந் திரராஜா முன் பாக நீதிமன்றில் முன்னிலைப் படுத் தினர். விசாரணை யின் போது இரண்டு பேரும் தம் மீதான குற் றத் தை ஒப்புக் கொண் டதை யடுத்து தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும் அபராதம் விதிக்கப் பட்டது. (வ-4)

# திருமண பந்தத்தில் வெள்ளி விழாகாணும் எம் தெய்வங்களை வாழ்த்துகின்றோம்



லோ.நோயல் நோ.காஞ்சனா (மாலா)

பஞ்ச பூதங்கள் போன்று எம்மவர்களை ஐந்து பேராக உருவாக்கி இவ் உலகிற்கு அறிமுகம் செய்து இன்று (28.02.2013) வியாழக்கிழமை திருமண பந்தத்தில் வெள்ளி விழாக் காணும் –எம் உயிரிலும் மேலான அன்பு தெய்வங்களை மனதார பல ஆண்டுகள் நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்- பிள்ளைகள் (ஜெறாட், ஜெரன், ஜெறோன், ஜெறின், ஜெயமாலினி)**


**தற்போது யாழ் நகரில்...**



கட்டட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி

BTEC HND in
- Quantity Surveying
- Civil Engineering

Leading to **BSc (Hons)** From **UK**

**Why** Choose BCAS for **QS & Civil Engineering** ?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தயேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747



உதயன்
விளம்பரத் திணைக்களத்திற்கு:
advt@uthayan.com
0215671111


# மரண அறிவித்தல்

**திருமதி இராஜேஸ்வரி ஏகாம்பரநாதன்**

நேற்று 27.02.2013 உதயன் பக்கம் 6B இல் பிரசுரமான திருமதி இராஜேஸ்வரி ஏகாம்பரநாதன் என்பவரது மரண அறிவித்தலில் ரவிச்சந்திரகுமார் காலஞ்சென்ற பாலச்சந்திரகுமார் என தவறுதலாக பிரசுரமான பகுதியை காலஞ்சென்ற ரவிச்சந்திரகுமார் மற்றும் பாலச்சந்திரகுமார் என திருத்தி வாசிக்கவும். (33865)(3.6)

# மரண அறிவித்தல்

## திருமதி பகவதி இராசதுரை



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி இராசதுரை நேற்று(27.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், சின்னையா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசதுரையின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.02.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி கிழக்கு, மருதடி,
பருத்தித்துறை.

தகவல்:
மா.செந்திவேல்
(தம்பி)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## திரு.கா.சந்திரராசா S.L.A.S

முன்னாள் பிரதேச செயலர், உ.அ.அ. வலி.மேற்கு,
இணைப்பாளர் UNHCR

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 | 19 |
| 01 | 02 |
| 1939 | 2003 |



*திதி: திருதியை 28.02.2013*

ஓர் பத்து ஆண்டுகள் ஓடியே சென்றும் அப்பா
நீரெம்மை விட்டகன்ற நீள்துயரம் தீராதாம்
ஊர்போற்ற வாழ்ந்த உத்தமரே உமைப்போலிங்கு
ஆரும் எமக்கில்லை ஆதரவு சொல்வதற்கு உங்கள்
பேரே எமக்குப் பெருந்துணையென்று விட்டு
கார்மேக வண்ணன் கழலிணை சேர்ந்தீரோ

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி.

**கல்யாணி பிரகலதன்**

இன்று (28.02.2013) வியாழக்கிழமை நடைபெறும் **28ஆவது** பட்டமளிப்பு விழாவில் "கலைமாணிப்பட்டம்" பெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.



Best Wishes

AIA

B.A
University of Jaffna

பிராந்திய முகாமையாளர்,
வெளிக்கள முகாமையாளர்கள்,
உத்தியோகத்தர்கள்.

AIA Insurance Lanka PLC
Regional office,
No.62/6, Stanley Road,
Jaffna.

## சுத்திகரிப்பின்போது காருக்குள் கண்டெடுத்த இரு பென்ரன்கள்

### உரியவரிடம் கையளித்த தொழிலாளி

வடமராட்சி, பெப்.28

கார் ஒன்றை சுத்திகரிப்புச் செய்தபோது அந்தக்காருக்குள் இருந்து முக் கால் பவுண் பெறுமதி கொண்ட இரு பென்ரன்கள் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் கையளிக்கப்பட்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை மந்திகையில் இடம்பெற்றுள்ளது.

அரச நிறுவனம் ஒன்றில் நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர் தனது காரை சுத்திகரிப்பதற்கு மந்திகை கொடிகாமம் வீதியில் உள்ள தனியார் வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றில் ஒப்படைத்திருந்தார்.

நிலையப் பணியாளர் காரைச் சுத்திகரித்துக் கொண்டிருந்தபோது, காருக்குள் முக்கால் பவுண் பெறுமதியான இரண்டு தங்கப் பென்டன்களைக் கண்டு அதனை எடுத்துக்காரின் உரிமையாளரான அதிகாரியிடம் ஒப்படைத்தார்.

சில காலத்துக்கு முன்னர் குறித்த அந்த நிறைவேற்று அதிகாரியின் குழந்தையின் கழுத்தில் இருந்து கழன்று விழுந்த பென்ரன்களே அவை எனப் பின்னர் தெரியவந்தது.

கண்டெடுத்த தங்கப் பென்ரன்களை ஒப்படைத்த பணியாளரை குறிப்பிட்ட அதிகாரி வெகுவாகப் பாராட்டிச் சென்றார். (வ-8)

## சாவகச்சேரி நகரசபையில் ஆதனவரி செலுத்துவோரின் தொகை அதிகரிப்பு

தென்மராட்சி, பெப்.28

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் ஆதனவரிப் பணம் செலுத்த வரியிறுப்பாளர்கள் நேற்று அதிகரித்ததால் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இதனால் ஆதனவரிப் பகுதிக்கு மேலும் சில உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பற்றுச் சீட்டுக்கள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி நகர சபையில் இவ்வருடத்துக்குரிய ஆதனவரியை பத்து வீத கழிவுடன் அறவிட இன்று வரை காலநீடிப்பு வழங்கப்பட்டது.

**இன்றுடன் காலநீடிப்பு முடிவடைவதால் நேற்று பெரும் எண்ணிக்கையா னோர் தமது ஆதனவரியைச் செலுத்த நகரசபைக்கு வந் திருந்தனர்.**

கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை ஆதனவரி செலுத்துவோருக்கு பத்து வீத கழிவு வழங்குவது நடைமுறையில் இருந்தபோதிலும் அந்தக் காலப்பகுதியில் வரி செலுத்த வந்தோரின் எண்ணிக்கை அதிகரித்ததால் வரியிறுப்பாளர் நலன் கருதி இந்த மாதம் 28 ஆம் திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டது.

இன்றுடன் காலநீடிப்பு முடிவடைவதால் நேற்று பெரும் எண்ணிக்கையானோர் தமது ஆதனவரியைச் செலுத்த நகரசபைக்கு வந்திருந்தனர். அதை அடுத்து மேலதிகமாக உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடு படுத்தப்பட்டனர். (வ-9)

## தாக்குதல் தொடர்பில் விரைவில் துரித நடவடிக்கை எடுக்கப்படும்

### நல்லூர் பிரதேச செயலர் உறுதி

யாழ்ப்பாணம்,பெப்.28

அரியாலை ஜே/ 90 கிராம அலுவலர் தாக்கப்பட்டமை தொடர்பாக முக்கிய சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கை துரிதமாக இடம்பெற்று வருகின்றது. அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று புதன்கிழமை நடைபெற்ற மறியல் போராட்டத்தை அடுத்து மக்களைச் சந்தித்து மனுவை பெற்றுக் கொண்ட மேற்படி பிரதேச செயலர் மேலும் கூறியதாவது :-

அரச அதிபர் தற்போது பொலிஸ் அத்தியட்சகருடன் இந்த விடயம் தொடர்பாகப் பேசி இருப்பதாகவும் சந்தேக நபர்களை விரைவில் கைது செய்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளதாகவும், எனக்குத் தெரியப்படுத்தினார். அவர் வேறொரு முக்கிய கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பதால் பொது மக்களிடம் நிலைமையை எடுத்துக்கூறுமாறு எனக்கு அறிவித்துள்ளார்.

**அரச அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஏற்கனவே நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.**

பொது மக்கள் சேவையில் உள்ள ஓர் அரச அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஏற்கணவே நாம் உரிய நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம்.

அரச அதிபர் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். கிராம அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து நிச்சயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். - என்றார். (வ-7)

### அரியாலை கிராம அலுவலர் மீதான தாக்குதலுக்கு

# தகுந்த விசாரணை கோரி நேற்று மறியல் போராட்டம்

### நல்லூர் பிரதேச செயலகம் முன்பாகத் திரண்டன 6 அமைப்புகள்





யாழ்ப்பாணம், பெப்.28

அரியாலை ஜே/90 கிராம அலுவலர் எஸ். விஜிதன் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் குறித்து நீதி விசாரணை கோரி நல்லூர் பிரதேச செயலகத்தின் முன்பாக ஆறு அமைப்புக்கள் இணைந்து நேற்று புதன்கிழமை மறியல் போராட் டத்தில் ஈடுபட்டன.

கிராம அலுவலரான விஜிதன் தாக்கப்பட்டமை குறித்தும் குற்றவாளிகளை இதுவரை கைது செய்யாதமை குறித்தும் அரியாலை ஜே/90 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் சங்கம், விளையாட் டுக் கழகங்கள் உட்பட ஆறு அமைப்புக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் 'குற்றவாளிகளைக் கைது செய்', 'நீதியை நிலை நாட்டுங்கள்', 'நேர்மையான உத்தியோகத்தருக்கு நீதி கிடைக்க வேண்டும்' போன்ற சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு உரிய நட வடிக்கை எடுக்கக் கோரி கோஷங்களை எழுப்பினர். பிரதேச செயலக நுழைவாயில் கதவுகளை மூடி மறியல் போராட்டம் நடைபெற்றது.

இதன் காரணமாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களில் கணிசமானவர்கள் தமது அலுவலகத்துள் செல்ல முடியாது வெளியில் காத்திருக்க நேரிட்டது.

கிராம அலுவலர்கள் சிலரும் அலுவலகத்துக்கு வெளியே காத்திருந்தனர். காலை 8.30 மணிக்கு மேற்படி மறியல் போராட்டம் ஆரம்பமாகியது. முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் மக்களைச் சந்தித்துப் பேசினார். அவர்களால் கையளிக்கப்பட்ட மனுக்களையும் பெற்றுக் கொண்டார். அதை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (வ-7-17)

## பருத்தித்துறை - மணற்காடு இ.போ.ச.பஸ் சேவை சீரில்லை

### மக்கள் விசனம்

வடமராட்சி, பெப்.28

வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காடு கிராமத்துக்கு பருத்தித்துறையில் இருந்து இடம்பெற்றுவரும் இ.போ.ச. பஸ் சேவை சீராக இல்லை என்று அந்தப் பகுதி கிராம மக்கள் முறைப் பாடு தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பாடசாலை நாள் களில் பஸ் சேவை அடிக்கடி தடைப்படுவதால் மாணவர் கள் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் நேரத்தில் பஸ் சேவை இடம் பெறுவதில் நிச்சய மற்ற நிலை தொடர்ந்து இருந்து வருவதால் மணற் காடு கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெரிதும் சிரமப் படுகின்றனர். இரண்டு மைல் தூரமுள்ள சைக்கிள்களில் குடத்தனைச் சந்திக்கு சைக்கிகள் மோட்டர் சைக்கிள்கள் சென்றே பாடசாலைக்குச் செல்ல பஸ்ஸை பிடிக்க வேண்டியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

அடிக்கடி தடைப் படும் மேற்படி சேவையை மாணவர்களின் வசதிகருதி குறிப்பிட்ட நேரத்துக்கு என்றாலும் நடத்த வேண் டும் என அந்தக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-8)

## பல்கலைக்கழக ஏழை மாணவருக்கு சந்நிதியான் ஆச்சிரமம் நிதி உதவி

வடமராட்சி, பெப்.28

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் 40 மாணவர்களுக்கு சந்நி தியான் ஆச்சிரமத்தால் மாதாந்தம் குறிப்பிட்ட தொகைப்பணம் உதவியாக வழங்கப்பட்வருகின்றது.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக் களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்களுக்கே மேற்படி நிதி உதவிவழங்கப்பட்டு வருகின்றது.

இந்தவருடம் தெரிவான 30 மாணவர்களுக்கும், கடந்த வருடம் தெரிவான 10 மாணவர்களுக்குமே இந்த நிதி உதவிவழங்கப்பட்டு வருகின்றது. எனினும் உதவித் தொகை கோரும் மாணவர்கள் வருடந் தோறும் தம்மைப் பதிவு செய்து நிதி உதவி பெறுவதை புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவிக் கப்படுகின்றது. (வ-8)

## பருத்தித்துறையில் ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தில் இணையலாம்

வடமராட்சி,பெப்.28

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தில் இணைய விரும்பும் ஓய்வூதியர்கள் அடுத்த மாதம் 14 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் சங்கத்தின் 3 ஆவது ஆண்டுப் பொதுச் கூட்டம் நடைபெற விருப்பதால் புதிதாக இணைய விரும்பும் ஓய்வூதியம் பெறுவோர் ஓய்வூதிய அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பன வற்றைச் சமர்ப்பித்து விண் ணப்பப் வடிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைத்து சங்கத்தில் இணைந்து கொள்ளலாம் என சங்கத்தின் தலைவரான ஓய்வு பெற்ற மாவட்ட நீதி பதி பா.சுப்பிரமணியம் தெரி வித்துள்ளார். (வ-8)

## புத்தூர்-வேம்பிராய் வீதி மருங்கிலும் பூத்துக்குலுங்கும் பாதீனியச்செடிகள்

அளவெட்டி,பெப்28

சுன்னாகம்- புத்தூர் வீதியில், மின்சார நியைத்துக்குச் செல் லும் சந்தியிலிருந்து புத்தூர் - வேம்பிராய் வரையான வீதி யின் விளை நிலங்கள் உள்ள பகுதிகளில் இரு மருங்கிலும் பாதீ னியச் செடிகள் மிகவும் செழிப்புற்ற நிலையில் பூத்துக் காணப்படுகிறது.

வீதியின் இரு பக்கங்களிலும் இங்கு பீற்றூட், வெங்காயம், கரட், லீக்ஸ், பயிற்றை, வாழை, புகையிலை, கீரை வகைப்பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. பாதீனியச் செடிகள் அவற்றுக்கு மிக அண் மையாகவும் வீதி ஓரமாகவும் பயிர்களுக்கு பாதுகாப்பு வேலி போல் மறைத்து வளர்ந்து நிற்கின்றன. இந்தச்செடிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை பயிர்ச்செய்கையாளர்கள் மேற்கொள்வில்லை.

எனினும் இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட பொது அமைப்புகள், விவசாயத் திணைக்களம் போன்ற தரப்புக்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-36)

## வல்வெட்டித்துறையில் இரத்ததான முகாம்

வடமராட்சி,பெப்.28

வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்திய சாலையில் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரத்ததான முகாம் நடை பெறவுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஏற்பாட்டில் வல் வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. மேற்படி முகாமில் அனைவரும் முன்வந்து குருதிக் கொடை வழங்குமாறு கேட் கப்பட்டுள்ளனர். (வ-8)

# கொல்கத்தா சந்தையில் தீ

## 18 பேர் கருகிச் சாவு; 30 பேர் காயம்



கொல்கத்தா, பெப்.28

மேற்கு வங்காளத்தில் கொல்கத்தா, பல்கலைக் கழகத்துக்கு அருகே உள்ள சந்தை வளாகக் கட்டடப் பகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்ததுடன் பல கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின.

கொல்கத்தாவின் சீல்டா பகுதியில் இருக்கும் சூர்யா சென் சந்தையில் நேற்று அதிகாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அதில் அவ்வேளை சந்தையில் இருந்த பலரும் சிக்கிக் கொண்டனர். தீயில் சிக்கி 4 பேர் உயிரிழந்ததாக முதலில் தகவல் வெளியாகியது.

எனினும் தற்போது சாவு எண்ணிக்கை 18 ஆக உயர்வடைந்துள்ளது. மேலும் பலர் மரக்கறிச் சந்தைக் கட்டடத்துக்குள் சிக்கியிருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. சம்பவ இடத்துக்கு 25 தீயணைப்பு வாகனங்கள் விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன.

தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்ட நிலையில் தற்போது மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. விபத்தில் படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் ஜாவேத்கான் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று அவதானித்தார். சந்தையில் தீயணைப்புத் தடுப்புக் கருவிகள் எதுவும் இல்லாததே உயிரிழப்புக்குக் காரணம் என்று கூறினார். இதற்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் குறிப்பிட்டார்.

**மம்தா உத்தரவு:**

இதனிடையே தீவிபத்து குறித்து 3 தினங்களுக்குள் பொலிஸார் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று முதல்வர் மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார். (வ)

## உறையவைத்த இரத்தத்தில் ஜெயலலிதாவின் சிலை

### அவரின் பிறந்தநாளை முன்னிட்டு



தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 65 ஆவது பிறந்த தினத்தைமுன்னிட்டு, கராத்தே வீரர் ஹுசைனி உறைய வைத்த இரத்தத்தில் முதல்வர் ஜெயலலிதாவின் சிலையைச் செய்து சாதனை படைத்துள்ளார். சென்னை, ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவின் 65 ஆவது பிறந்த தினத்தை அ.தி.மு.கவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடினர். இந்தநிலையில் கராத்தே வீரர் ஹுசைனி, முதல்வரின் பிறந்தநாளை முன்னிட்டு 11 லீற்றர் இரத்தத்தை உறைய வைத்து அதில் ஜெயலலிதாவின் சிலையை உருவாக்கியுள்ளார்.

## அணு உலைக்கு எதிராக மார்ச் 11 இல் போராட்டம்

### போராட்டக்குழுத் தலைவர் அறிவிப்பு

கூடங்குளம் அணு உலையை மூடக்கோரி எதிர்வரும் 11 ஆம் திகதி அணு உலையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும் என்று உதயகுமார் அறிவித்துள்ளார்.

அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கப் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் இது குறித்துக் கூறுகையில்,

நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நேற்று முற்றுகைப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கன்னியாகுமரியில் பகவதி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதால் முற்றுகைப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

அதையடுத்து, இடிந்த கரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், புகுஷிமா அணு உலை விபத்து நினைவு தினமான மார்ச் 11 ஆம் திகதி கூடங்குளம் அணு உலையை கடல் வழியாகச் சென்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது-என்றார்.(வ)

## தமிழக விஞ்ஞானிக்கு தேசிய விருது

ஹைதராபாத், பெப்.28

கல்பாக்கம் அணுமின் நிலைய விஞ்ஞானி டேனியல் செல்லப்பாவுக்கு இந்திய மக்கள்தொடர்பு பேரவை சார்பில் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தொடர்புப் பேரவை சார்பில் 7 ஆவது சர்வதேச தகவல் தொடர்பு மாநாடு ஆந்திர தலைநகர் ஹைதராபாத்தில் அண்மையில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில், தமிழகத்தைச் சேர்ந்த மூத்த அணு விஞ்ஞானி ஜெ.டேனியல் செல்லப்பாவுக்கு சிறந்த மக்கள் தொடர்பு பணி சேவைக்கான தேசிய சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இந்திய தேர்தல் ஆணையாளர் எச்.எஸ். பிரம்மா விருதை வழங்கிக் கௌரவித்தார். விழாவில், ஆந்திர மாநில முன்னாள் சிறப்பு தலைமைச் செயலாளர் ஏ.கே.கோயல், பேராசிரியர் அருண் திவாரி உட்பட பலர் பங்கேற்றனர். (வ)

## இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும்

### பிரிட்டன் தமிழர் பேரவை வலியுறுத்து



டில்லி, பெப்.28

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று பிரிட்டன் தமிழர்கள் பேரவையின் மனித உரிமைப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் க. நிர்மலன் வலியுறுத்தினார்.

இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் நோக்கில் மனித உரிமைப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் நிர்மலன் மற்றும், 'இனப் படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பு' நிர்வாகி ஹென்ட்ரிட்டா பிரிஸ்கோ ஆகியோர் இந்தியா வந்துள்ளனர்.

டில்லியில் செய்தியாளர்களுக்கு நிர்மலன் அளித்த பேட்டியின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

தொப்புள்கொடி உறவைப் புறக்கணிக்கக்கூடாது. இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஐ.நா. சபையின் 22 ஆவது மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வரவுள்ளது.

அந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வலுச்சேர்க்க வேண்டும். இலங்கையில் தற்போதுள்ள நீதிமுறையால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது- என்றார்.



சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தின விழா தமிழ்நாடு முழுவதும் நேற்றுக் கொண்டாடப்பட்டது. தமிழக முதல்வர் ஜெயலலிதா விவேக ஜோதியை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

## கோழிக்கோடு மாவட்டத்தில் இலேசான நில அதிர்வு

கேரளமாநிலம், கோழிக்கோடு மாவட்டப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு இலேசான நில அதிர்வு ஏற்பட்டது.

பெரோகி, கடலுண்டி, பெய்போர், ராமநாட்டுக்காரா, கல்லாயி மற்றும் திருவண்ணூர் ஆகிய பகுதிகளில் இந்த அதிர்வு உணரப்பட்டது. அதிர்வு சில நொடிகள் நீடித்தது. எனினும் மக்கள் பீதியில் வீட்டை விட்டு வெளியே வந்ததாகக் கூறப்படுகிறது. நில அதிர்வு ஏற்பட்டவுடன் மக்கள் முதலில் ஏதோ இடி இடித்தது என்று நினைத் துள்ளனர். பின்னர்தான் அது நில அதிர்வு என்பதைப் புரிந்து கொண்டனர். உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

### இலங்கைக்கு எதிராக இந்தியா தீர்மானம் நிறைவேற்றக்கோரி

# தமிழகக் கட்சிகள் ஒன்றாக இணைந்து டில்லியில் போராட்டம் நடத்த வேண்டும்

### ஆர்ப்பாட்டத்தில் அன்புமணி வலியுறுத்து




வேலூர், பெப்.28

இலங்கைக்கு எதிராக இந்திய அரசு கண்டனத் தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தி தமிழகத்தில் உள்ள கட்சிகள் ஒன்றுபட்டு டில்லியில் போராட்டம் நடத்த வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி வலியுறுத்தினார்.

இலங்கைத் தமிழர் படுகொலைகள் மற்றும் பிரபாகரனின் மகன் பாலசந்திரன் படுகொலையைக் கண்டித்தும், போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கக் கோரியும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் வேலூர் தலைமை தபால் நிலையம் அருகில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மேற்படி ஆர்ப்பாட்டத்துக்கு முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி ராமதாஸ் தலைமை வகித்தார். அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட வெளிநாடுகள் எல்லாம் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

ஆனால் இந்திய அரசு மௌனமாக உள்ளது. இந்திய அரசு இலங்கைக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டும். இதற்கு தமிழகத்தில் உள்ள கட்சிகள் ஒன்றுபட்டு, இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்கள், ஒன்றுபட்டு டில்லியில் போராட்டம் நடத்த வேண்டும்.

'டெசோ' என்றாலே மக்கள் சிரிக்கின்றனர் தி.மு.க. ஆட்சியில் இருக்கும்போது காவிரி பிரச்சினை முல்லைப் பெரியாறு பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை ஆகியவற்றைக் கண்டுகொள்ளவில்லை. இதற்குத் தீர்வுகான தமிழக அரசு அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். இலங்கையில் தொடர்ந்து தமிழ் பெண்கள் பாலியல் தொல்லைக்கு ஆளாகுகின்றனர்.

அடுத்த மாதம் 22 ஆம் திகதி ஜெனிவாவில் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபை கூட்டம் நடைபெறுகிறது. அதில் கலந்து கொள்ள எனக்கு அழைப்பு வந்தது. அதில் நான் கலந்து கொள்கின்றேன்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க., தமிழக மீனவர்கள் படுகொலையை இவ்வளவு காலமும் கண்டு கொள்ளவில்லை.

தற்போது திடீர்ப் பாசம் ஏற்பட்டு மு.க.ஸ்டாலின் கச்சதீவு பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசுகிறார்- என்றார். (வ)

# அணு ஆயுதத் திட்டம் கைவிடப்பட்டால் பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும்

## ஈரானை அறிவுறுத்துகின்றன வல்லரசு நாடுகள்

அலமாட்டி, பெப்.28

அணு ஆயுதத் திட்டங்கள் கைவிடப்பட்டால் ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று உலக வல்லரசு நாடுகள் அறிவித்துள்ளன.

ஈரானின் சர்ச்சைக்குரிய அணு ஆயுத சோதனைத் திட்டங்களால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அந்த நாட்டுடன் உலக வல்லரசு நாடுகள் பேச்சுக்களைத் தொடங்கியுள்ளன. இரண்டு நாள் நடக்கும் இந்தப் பேச்சுக்கள் கஜகஸ்தான், அலமாட்டி நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

ஈரானின் முக்கிய அரசியல் பிரமுகர் சயீத் ஜலிலி தலைமையிலான பிரதிநிதிகளுடன், ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள 5 வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

பேச்சுக்களின்போது அணு ஆயுத திட்டங்களைக் கைவிடும் பட்சத்தில் ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும் அதுகுறித்து ஈரான் எந்த வித உத்தியோகபூர்வ முடிவையும் தெரிவிக்கவில்லை

தற்போது யுரேனியத்தை செறிவூட்டும் நடவடிக்கைகளில் ஈரான் ஈடுபட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அதனால் அடுத்து ஈரான் அணு ஆயுத தயாரிப்பு முயற்சிகளில் இறங்கலாம் என்ற அச்சம் வல்லரசு நாடுகளிடம் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து பேச்சுக்களின் மூலம் தீர்வு காணும் முயற்சியில் உலக நாடுகள் இறங்கியுள்ளன.(ற)



## அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் சக் ஹெகெயில்

### பரிந்துரைத்தார் பராக் ஒபாமா

நியூயோர்க், பெப்.28

அமெரிக்காவின் அடுத்த பாதுகாப்பு அமைச்சராக சக் ஹெகெயிலை பரிந்துரைத்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டாவின் பதவிக் காலம் முடிவடைய உள்ள நிலையில் சக் ஹெகெயிலைப் பரிந்துரைத்துள்ளார் ஒபாமா.

அவரின் பரிந்துரைக்கு அமெரிக்காவின் செனட் சபையில் முக்கிய எதிர்க்கட்சியான குடியரசு கட்சி நேற்று ஒப்புதல் வழங்கியது. விரைவில் செனட் சபையின் முழு ஒப்புதலையும் அவா பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வியட்நாம் போரில் பங்கு கொண்ட சக் ஹெகெல் முன்னாள் குடியரசு கட்சியின் சபை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## ரஷ்ய விண்கல்லின் மிகப் பெரிய பாகம் கண்டுபிடிப்பு

மொஸ்கோ, பெப்.28

ரஷ்யாவின் யூரல் மலைப் பகுதியில் வெடித்துச் சிதறிய விண்கல்லின் பெரிய பாகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விண்கல் விழுந்ததால் செபார்க்குல் ஏரியில் ஏற்பட்ட 25 அடி அகலமான குழியில் கண்டெடுக்கப்பட்ட சுமார் 100ற்கும் அதிகமான துண்டுகளில் இதுவே மிகப்பெரியது என்று கூறப்படுகிறது.

விண்கல்லின் சிதறிய பாகங்கள் யூரல் மத்திய பல்கலைக்கழகத்தினால் 50 கிலோ மீற்றர் தூரம்வரை தேடிக் கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# வெப்பக்காற்று பலூன் தீப்பற்றியது நடுவானில்

## எகிப்தில் 19 சுற்றுலாப் பயணிகள் சாவு

கெய்ரோ, பெப்.28

சுற்றுலாப் பயணிகள் பயணித்த பலூன் தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் எகிப்தில் 19 பேர் உயிரிழந் தனர்.

லக்ஸார் நகரத்தில் நேற்று முன்தினம் காலை வெப்பக் காற்று பலூனில் 21 சுற்றுலாப் பயணிகள் பயணித்தனர். ஆயிரம் அடி உயரத்தில் பலூன் பறந்தபோது, எதிர்பாராத விதமாகத் தீப்பிடித்து விபத்துக்குள்ளானது. அதில் 19 பேர் உயிரிழந்தனர்.

பலூனை இயக்குபவர் மற்றும் சுற்றுலாப் பயணி ஒருவர் பலூன் தரையில் மோதுவதற்கு முன்னர் கீழே குதித்து உயிர் தப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.



உயிரிழந்தவர்கள் ஜப்பான், கொரியா, பிரிட்டன் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் சூரியோதயத்தைக் காண்பதற்காகவே அதிகாலை பலூன் பறப்பில் ஈடுபட்டனர் என்றும் கூறப்படுகிறது.

விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு சிரிய புரட்சியாளர்கள் சம்மதம்

### அமெரிக்கா, பிரிட்டன் வழங்கிய உறுதிமொழிகளை அடுத்து

டமாஸ்கஸ், பெப்.28

சிரியப் புரட்சியாளர்கள் பேச்சுக்களில் ஈடுபடுவதற்குத்தாம் தயார் என்று அறிவித்துள்ளனர். பிரிட்டனும், அமெரிக்காவும் உதவிகளை வழங்குவதாக உறுதியளித்ததனைத் தொடர்ந்தே பேச்சுக்களில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டதாக அவர்கள் கூறியுள்ளனர்.

சிரியாவில் இடம்பெற்று வரும் வன்முறைகள் தொடர்பில் சர்வதேசம் மௌனம் காத்து வருகின்றது என்றும், அதனால் பேச்சுக்களைப் புறக்கணிக்கப் போவதாகவும் புரட்சியாளர்கள் முன்னர் அறிவித்திருந்தனர்.

இந்தநிலையில் புரட்சியாளருக்கு ஆதரவு வழங்கப்படும் என்று பிரிட்டனும், அமெரிக்காவும் உத்தியோகபூர்வமாக உறுதிமொழிகள் வழங்கியுள்ளன. அதனைத் தொடர்ந்தே பேச்சு மேசைக்குத் திரும்பத் தயார் என்று புரட்சியாளர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிரியாவில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் இதுவரையில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

(ற)

## தற்கொலைத் தாக்குதல்

### மாலியில் 7 பேர் சாவு



பாமகா, பெப்.28

மாலி, கிடால் நகரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிடால் நகரில் வீதிச் சோதனையின் போது கார் ஒன்றைச் சோதனையிட முற்பட்டவேளை குண்டு வெடிக்க வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. அதில் பொதுமக்கள் 7 பேர் உயிரிழந்தனர்.

கிடால் நகரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள பிரான்ஸ் தலைமையிலான மாலி படையினர் அங்கு நிலைமைகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பதுங்கியுள்ள தீவிரவாதிகள் தீடீர்த் தாக்குதல்களை மேற்கொள்வதுடன் வெடிகுண்டுத் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர்.

பொதுமக்களுடன் கலந்திருக்கும் தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து அழிக்கும் நடவடிக்கை பிரான்ஸ் தலைமையிலான மாலிப் படைகளுக்கு தலையிடியைக் கொடுக்கும் செயற்பாடாகவே மாறியுள்ளது.

சிலநாள்களுக்கு முன்னர் அதேநகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 5 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## ஏலதுக்கு வரும் நோபல் பரிசு

நியூயோர்க், பெப்.28

'டி.என்.ஏ' வடிவமைப்பைக் கண்டறிந்தமைக்காக வழங்கப்பட்ட நோபல் பரிசு ஏலத்துக்கு விடப்படவுள்ளது.

பிரான்சிஸ் கிரிக், ஜேம்ஸ் டி வாட்சன் ஆகியோர் 1953 ஆம் ஆண்டு 'டி.என்.ஏ' வடிவமைப்பைக் கண்டறிந்து ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டனர். அவர்கள் இருவருக்கும், மற்றொரு ஆய்வாளரான மௌரீஸ் வில்கின்ஸனுடன் இணைந்து 1962ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

தற்போது பிரான்சிஸ் கிரிக்கின் பேர்த்தி கின்ட்ரா கிரிக் அந்த நோபல் பரிசை ஏலத்துக்கு விட முடிவு செய்துள்ளார். டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த ஏல நிறுவனம் வரும் ஏப்ரல் 10ஆம் திகதி இந்த நோபல் பரிசுக்கான பதக்கம் மற்றும் சான்றிதழை ஏலம் விடவுள்ளது என்று கூறப்படுகிறது. (ற)

## ராடரால் கண்காணிக்க முடியாத

# அதிநவீன போர்க் கப்பலை படையில் இணைத்தது சீனா

பீஜிங், பெப்.28

புதிதாகத் தயாரிக்கப்பட்ட அதிநவீன போர்க்கப்பல் ஒன்றை கடற்படையில் இணைத்துள்ளது சீனா. 056 எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தப் போர்க்கப்பல் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மற்றும் தென் கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகத் தனது கடற்படையை வலுப்படுத்தி வருகிறது சீனா. அதன் ஒரு நடவடிக்கையாகவே இந்த அதிநவீன போர்க் கப்பலையும் கப்பற்படை யில் இணைத்துள்ளது.

அந்தப் போர்க்கப்பல் ராடரால் எளிதல் கண்டுபிடிக்க முடியாதவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் அது போன்று மேலும் 20 கப்பல்கள் தயாரிக்கப்படுகின்றன என்றும் சீனா தெரிவித்துள்ளது.

(ற)

# வலுவடையும் எதிர்க்கட்சிகளின் போராட்டம் கடும் நெருக்கடியில் எகிப்திய ஜனாதிபதி

கெய்ரோ, பெப்.28

எகிப்து ஜனாதிபதி முகமது மூர்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடத்திவரும் ஒத்துழையாமை போராட்டம் வலுவடைந்து வருகிறது. நாடு முழுவதும் போராட்டம் பரந்து விரிந்துள்ளதால் மூர்சிக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பல்வேறு மாகாணங்களில் உள்ள ஆளுநர் அலுவலகங்களை முற்றுகையிட்டுள்ள பொதுமக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர். அதேவேளை, மூர்சியின் ஆதரவாளர்களும் அங்கு கூடி எதிர்க்கட்சியினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அதனால் ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே பல்வேறு இடங்களில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எகிப்தின் முக்கிய வர்த்தக நகரங்களில் ஒன்றான கிசாவில் ஆளுநர் அலுவலகத்துக்குச் செல்லும்அனைத்துவீதிகளையும் அரசு எதிர்ப் பாளர்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் நகரின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அதையடுத்து எகிப்தில் மீண்டும் கொந்தளிப்பு நிலை தோன்றியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

adv t@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
28ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று [M.Ed. (Merit)]
கல்வி முதுமாணிப் பட்டத்தில் சிறப்பு தேர்ச்சி
பெற்று கௌரவிக்கப்படும்



**சுப்பிரமணியம் தர்மரத்தினம்**
[ B.A. (Hons), M.A. PGDE (Merit)
PGDEM (Merit) M.Ed (Merit)
SLPS-2-I ]
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்
- பூநகரி)

அவர்களின் கல்வியுயர்வைப் பாராட்டுவதில்
கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலைக்
கல்விச் சமூகம் உவகை அடைகின்றது.

அதிபர், ஆசிரியர்கள்,
கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலை.

(33558) (10.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் மு.யோகலிங்கம் அவர்களின் அன்பு மகன்

**யோகலிங்கம் பூட்நிசாந்தன்**

அவர்கள் 26.02.2013 ஆம் திகதி காலமாகிய செய்தி கேட்டு நாம் அதிர்ச்சி அடைந்துள்ளதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், வட்டக்கச்சி.
துயர் பகிர்வோர்: பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

(c/)(2427)(6.11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10.07.1923
மறைவு 29.01.2013

(முன்னாள் இயந்திர சாரதி -
இலங்கை புகையிரத திணைக்களம்)

அமரர்
**சின்னத்துரை வீரசிங்கம்**
(வடிவேல்)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(28.02.2013)வியாழக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (02.03.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரிசாட்டி,
சூராவத்தை, சுன்னாகம்.
(33879)(5.6)
குடும்பத்தினர்.

## அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை (01.03.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 5.30 மணியளவில் தேவஸ்தானத்தில் நடைபெற உள்ளது. அடியார்கள்,உபயகாரர்கள்,தொண்டர்சபையினர் அனைவரும் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். தேவஸ்தான திருத்தத் திருப்பணி விடயமும் நடப்பாண்டு நிர்வாகத் தெரிவும் பிரதானமாக இடம்பெறும்.

ஏழாலை வடக்கு, ஏழாலை. (33848)(5-6) தலைவர்.

## நல்லூர் பிரதேச சபை- கொக்குவில் உப அலுவலகம் ஆதன பெயர் மாற்றம்

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகப் பிரிவில் அமைந்துள்ள 4 ஆம் வட்டாரம், புகையிரத நிலைய வீதியில் 159 இலக்க, ஆதனம் எமது பதிவேட்டில் தகடிட்ட வேய்ந்தது மான உறை விடமும், தோட்ட நிலமும் என குறிப்பிடப்பட்டுள்ளது. உரிமையாளர் S.இராசேந்திரம் என கூறப்படுகின்றது.

மேற்படி விடயம் தொடர்பாக யோ.சத்தியநாதன் எழுதிய உறுதி இல.580 மூலம் 18.11.2003 ஆம் திகதி ஆட்சியுரிமை என சுப்பிரமணியம் குணபாலசிங்கம் வெளிப்படுத்தல் செய்துள்ளார். இவ் ஆதனத்தை சுப்பிரமணியம் குணபாலசிங்கம் என்னும் பெயருக்கு ஆதன பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர்.

ஆகவே இந்த ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் 21 நாள்களுக்கு முன்பாக எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு ஆட்சேபனை இல்லாதவிடத்து இவ் ஆதனம் சுப்பிரமணிம் குணபாலசிங்கம் என்பவரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**ப.வசந்தகுமார்,**
**தவிசாளர்,**
**பிரதேச சபை, நல்லூர்.**

(C/6669)(6.11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**K.KAJEEPARAN**
BBA(Hons)Fm.Spl.



இன்று (28.02.2013) யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பொதுப் பட்டமளிப்பு விழாவில் முகாமைத்துவ வணிக மாணிப் பட்டம் பெறும் எமது ஆசிரியர் க.கஜீபரன் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best wishes ஆசிரியரின் மாணவர்கள்.

(24272)(5.6)

## வியாபாரக் கட்டடம் வாடகைக்கு

யாழ். நகர் மத்தியில் கஸ்தூரியார் வீதியில் அமைந்த அகலமான கடைக் கட்டடம் வாடகைக்கு.

(33882)(5.6) தொடர்பு: 077 4316 197

## கார் விற்பனைக்கு

13SRI xxxx Mitsubishi Lancer கார் விற்பனைக்கு உண்டு.

(33884)(5.6) தொடர்பு: 077 128 4351

## மணமகன் தேவை

யாழ்.இந்துகௌரவகுடும்பம் 1982.11.08 அனுஷம் (36½)பாவம் செவ்வாய் குற்றமற்ற 5அடி உயரமுள்ள அழகிய பெண் பிரான்சில் சகோதரர்களுடன் வசிக்கின்றார். இவருக்கு பெற்றோர் PR உள்ள வரனை பிரான்சில் தேடுகின்றார்கள்.

(33882)(5.6) தொடர்பு: 075 417 3899

உடற் பருமனா ?
ஆலோசனையும் சிகிச்சையும்.

**லாவா வைத்தியசாலை**
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :021-2224333

## பதவி வெற்றிடம்

### பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம், வவுனியா.

**சாயி சிறுவர் இல்லம்**
(ஆண்கள் பகுதி) கூமாங்குளம், வவுனியா

### சாயி சிறுவர் இல்ல ஆண் காப்பாளர்

வவுனியா, கூமாங்குளத்தில் அமைந்துள்ள சாயி சிறுவர் இல்லத்தில் ஆண்கள் பகுதிக்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

01) 40 வயதிற்கு குறையாமலும் 65 வயதிற்கு மேற்படாமலும் இருக்கும் ஆண்.
02) ஆண் காப்பாளராக கடமையாற்றிய (Gent Warden) அனுபவம் உள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.
03) சிறந்த நல்லொழுக்கமும்,தேக ஆரோக்கியமும், இரக்க சுபாவமும் சேவை மனப்பான்மையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
04) க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடைந்திருப்பதுடன் ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத்தக்கது.
05) சிறுவர் இல்லத்தில் நிரந்தரமாக தங்கி இருந்து கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
06) சத்ய சாயி நிலையங்களின் ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
07) சாயி அடியவராக இருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சாயி சிறுவர் இல்லம், கூமாங்குளம், ஆண் காப்பாளர் பதவிக்கு ஆள் சேர்ப்பதற்கான விண்ணப்பம்" என தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

தயவு செய்து சுய விவரங்களுடன் கூடிய விண்ணப்பங்களை (Bio Data) *10.03.2013* க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

தொ.பே இல-
024 222 2492,
071 8457257

முகவரி:"President"
Bhagavan Sri Sathya SaiSeva Centre
Vavuniya.

(27669)(6.11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று நடைபெறும் யாழ் பல்கலைக்கழக 28 வது பட்டமளிப்பு விழாவில் சமூகவியல் சிறப்புக்கலை பட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்

**செல்வி வானதி**
**பாலச்சந்திரன்** அவர்கள்

மேலும் பல பட்டங்களும் பதவி உயர்வுகளும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
சித்தப்பா, சித்தி
தங்கையர் சர்மினி, சஜீபா , தம்பி மயூரன்

## 1st in Com G.A.Q யாழ்ப்பாணம் - பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- A/L இல் கலை, வர்த்தகம்,கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்.
- புதிய பிரிவுகளுக்கான பதிவுகள், விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

குறிப்பு
1) B.A Part 1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

B.A Part 11(FINAL) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- விரிவுரைகள் ஆரம்பம்: 02.03.2013 காலை 8 மணி

(C/6678)(6.7.11)

**விவரங்களுக்கு S.அருள் நங்கை (நிர்வாகி)**
**புதிய உயர்கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

# பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்று
யாழ்.பல்கலைக்கழகத்தில்
M.Ed பட்டம் பெறும் எமது
அதிபர் திருமதி
**வரதலட்சுமி கதிரேசபிள்ளை**
அவர்களையும் M.B.B.S
பட்டம் பெறும் அதிபரின்
மகன் **க.தர்ஸனன்**
அவர்களையும் மேலும் பல
பட்டங்கள் பெற்று நீடூழி
காலம் வாழ்கவென
மனமகிழ்வுடன்
வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/இணுவைதம்பி இந்து வித்தியாலயம்

(33872)(3.6)


# தென்மராட்சி சந்தைகளில் தேங்காய் விலை அதிகரிப்பு

தென்மராட்சி பிரதேச சந்தைகளில் தேங்காயின் விலை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துக் காணப்படுகிறது. அதே வேளை உச்ச விலையில் விற்பனை செய்யப்பட்ட வெங்காயம் திடீரென விலையில் வீழ்ச்சி கண்டுள்ளது.

கொடிகாமம் சந்தைக்கு தேங்காய்களின் வரவு வீழ்ச்சியடைந்துள்ளதையடுத்து 30ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தேங்காய் விலை 60 ரூபாவைத் தாண்டியுள்ளது. நெல் அறுவடைக் காலத்தில் தேங்காயின் விலை அதிகரிக்கின்ற போதிலும் இந்த வருடமே 60 ரூபாவுக்கு மேல் தேங்காய் கொள்வனவு செய்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதேவேளை கிலோ 180 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. நேற்று முன்தினம் சந்தையில் 50 - 30 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனிடையே சந்தைகளில் பயிற்றங்காய் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளின் விலையும் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## நவரட்ணம் கிருஷ்ணகுமார்
(SP.Tr.Maths,BA)



இன்று (28.02.2013) வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டப் பின் டிப்ளோமா பட்டம் பெறும் நவரட்ணம் கிருஷ்ணகுமார் (SP.Tr.Maths,BA) அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

12, நோத்தாரிஸ் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.
0774913104

வாழ்த்துவோர்:
மனைவி: K.ஜெயந்தினி,
மகன்: சஹானன், மகள்: சயானி,
மருமக்கள்: R.விஜயதர்சினி,
விஜயந்தினி, அனுசா, வனிதா, கோகுலன்
பெறாமக்கள்: உதயவாணி, லக்சி, சனா, பாலநந்

(27765)(6.11)


# மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

### காவல் சேவை, சுத்திகரிப்பு சேவை, சமைத்த உணவு வழங்கல் சேவை - 2013/14

1.மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கும் மூலிகை தோட்டத்திற்கும் தேவையான காவல் சேவை, சுத்திகரிப்பு சேவை, சமைத்த உணவு வழங்கல் சேவை ஆகிய சேவைகளுக்கான சேவையாளர்களிட மிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| S.No | Reference No | Details of Service | Quantity (Nos) | Bid Bond Rs. |
|---|---|---|---|---|
| 01. | NP/22/02/SC/JF/FP2/ 01/2013 | காவல் சேவை- 2013 | 03 | 15,000.00 |
| 02. | NP/22/02/CL/JF/FP2/ 01/2013 | சுத்தம் செய்தல் சேவை-2013 | 15 | 15,000.00 |
| 03. | NP/22/02/DI/JF/FP2/ 01/2013 | சமைத்த உணவு வழங்கல்- 2013 மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலை, குருநகர் | - | 5,000.00 |
| 04 | NP/22/02/DI/JF/FP2/ 02/2013 | சமைத்த உணவு வழங்கல் -2013 கிராமிய ஆயுள் வேத வைத்தியசாலை, பண்டத்தரிப்பு. | - | 15,000.00 |
| 05 | NP/22/02/DI/JF/FP2/ 03/2013 | சமைத்த உணவு வழங்கல்-2013 கிராமிய ஆயுள் வேத வைத்தியசாலை, தெல்லிப்பளை. | - | 15,000.00 |
| 06 | NP/22/02/DI/JF/FP2/ 04/2013 | சமைத்த உணவு வழங்கல்-2013 கிராமிய ஆயுள் வேத வைத்தியசாலை, கரவெட்டி. | - | 5,000.00 |

2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக ரூபா 500.00 காசாக செலுத்தி தமிழ் மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 28.02.2013 தொடக்கம் 15.03.2013 வரையான காலப் பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரையான (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. பொருத்தமான கேள்வி வைப்பு பணம் ஆவணம் பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. "சேவையின் விபரம் ..............., **Reference No.** ...................." போன்ற விபரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
5. விலைக்கேள்விகள் 18.03.2013ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விகள் அனைத்தும் அன்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.
6. எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.
7. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள சேவையாளர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் இத் (021-222-0824) திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
9. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம்.

**சி.துரைரட்ணம்,**
**தலைவர், மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பெறுகைகள் குழு**
**வட மாகாணம்.**
**2ஆம் மாடி சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி : 021-222-0824**
**தொலைநகல் : 021-222-0822**
**மின்னஞ்சல்:** Accountantpdim@gmail.com

(c/6697) (10.6)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



மகாஜனக்கல்லூரி,
வைத்தீஸ்வராக்கல்லூரி ஆகியவற்றின்
பழைய மாணவனும் வவுனியா
தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளருமான
**பாலகிருஷ்ணன் பார்த்தீபன்**
(SLTES-Class-III)B.com(Acc.spl),
PG.Dip.in.Edu(Distinction),M.Ed(distinction)
இன்று (28.02.2013) வியாழக்கிழமை
யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு
விழாவில் முதுகல்விமாணி (அதிவிசேடம்)
பட்டம் பெறுவதையிட்டு மனதாரப்
பாராட்டி வாழ்த்துவதோடு அவர்
மேன்மேலும் பல உயர்வுகளைப்பெற
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

திரு. திருமதி திருநாவுக்கரசு
குடும்பம்.
டச்சு றோட், உடுவில்.

(33876)(3.6)


# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் ஆத்திசூடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் பொருளாளரின் அன்பு மனைவி

**திருமதி**
**சுந்தரலிங்கம் மங்கையர்க்கரசி**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானம்,**
**கந்தர்மடம்.**

(33881) (10.6)

# மரண அறிவித்தல்

**திருமதி**
**மங்கையர்க்கரசி சுந்தரலிங்கம்**



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையர்க்கரசி சுந்தரலிங்கம் (தேவி) 26.02.2013 சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வ.தம்பிராஜா-சுந்தரம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், த.சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர்), தில்லைராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசரத்தினம், விஜயலட்சுமி, தனலட்சுமி, சிவநாதன் (உபதபால்அதிபர் கோயில் குளம்) ஆகியோரின் பாசமிகு அண்ணியும், பரமகுருநாதன், பொன்னம்பலவாணர், இந்திராதேவி (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), கிருஷ்ணமூர்த்தி (யாழ் மாநகரசபை) ஆகியோரின் மைத்துனியும், Dr. மயூரேசனின் (களுபோவில போதனா வைத்தியசாலை) சிறிய தாயும், திவ்யா, சௌமியா ஆகியோரின் பெரிய தாயும், ம.லாவண்யா (ஆசிரியை- கொழும்பு, றோயல் கல்லூரி), மாதங்கி, நர்த்தனன், வித்தகன், சுபாங்கி, நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2013) பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**சுந்தரலிங்கம் (கணவர்)**

**இல.45, இந்துமகளிர் வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**0212223251**

(33880) (10,6,7)

# நானும் மனிதன் தான்



என்னுடலில் ஓடுவதும்...
சிவப்பு நிற இரத்தம் தான்..
நான் மட்டும் ஏன்...
ஏழை என்று பெயரெடுத்தேன்...
மனதற்ற மனிதர் குலம்...
நம்மை மட்டும் புறம் தள்ளி...
தாம் மட்டும் வாழ்கிறது...
உழைப்பினால் எம்மேனி வாடுகையில்...
சொகுசான அவர் வாழ்வில்
சொர்க்கம் தெரிகிறதாம்...
எம் ஏழ்மையால் புறம்தள்ளி நம்மை...
சாகடிக்கப் பார்க்கிறார்...
செய்யும் தொழிலை வைத்து...
பிரிவு பல வகுக்கிறார்
நாம் செய்யும் தொழிலாலே...
அவர் அங்கே வாழ்கின்றார்...
இதை அறியாமல் வாழ்வான் அவன்
அங்கே...
தங்க இடமின்றி நாமிங்கே தத்தளிக்க...
தங்கத் தட்டில் பாற்சோறு உண்கின்றார்...
பட்டினியால் நாம் இங்கே பசி கிடக்க...
பஞ்சு மெத்தையில் பசிக்களைப்பை
போக்குகின்றார்...
பாவப்பட்ட எம்பிறப்பை...
பாட வந்த பாரதியும்
பாதியிலே போய் விட்டான்...
இனி நமக்கென்று பிறப்பெடுப்பார்...
எவர் இங்கே...
நாளை பிறப்பெடுக்கும் என் குழந்தை...
என்ன பிழை செய்ததென்று நீ அறிவாய்...
பிறக்கையிலே ஏன் அதற்கு ஏழ்மை நிலை...
அது பிறந்த பின்பும் ஏழ்மையின்
பெயர்சொல்லி...
பட்டம் கொடுக்கிறது இவ்வுலகம்...
படைத்தது படைக்கின்றாய் இறைவா...
அனைவரையும் ஒரு வகையாய்
படைத்திட்டால் குறை உண்டோ....?

விமலராஜ்,
சிறுப்பிட்டி மேற்கு.

ஓர் ஏழையின் புலம்பல்..!

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது ஆண்களே...



நமது ஆண்களின் வாழ்வு எதைப் பார்த்து மாற்றம் அடைந்ததோ? புரியவில்லை. ஆண்களது தலை முடியை எடுத்துக் கொண்டால், அதில் எத்தனை மாற்றங்கள்? பெண்களைப் போல் சிகையினை அலங்காரம் செய்வதும் அதனைப் பின்னித் தம்மை அழகுபடுத்துவதும் அவர்களது வேலையாகி விட்டது.

இன்றைய நவீன உலகில் நவ நாகரிகத்தை அதிகம் விரும்புவது ஆண்கள் தான். ஏனெனில் கடந்த ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன் இளைஞர்கள் வாழ்ந்த வாழ்வும், தற்போது வாழும் வாழ்க்கையும் நம்மை வியக்க வைத்துள்ளது.

நமது ஆண்களின் வாழ்வு எதைப் பார்த்து மாற்றம் அடைந்ததோ புரியவில்லை. ஆண்களது தலை முடியை எடுத்துக் கொண்டால், அதில் எத்தனை மாற்றங்கள்? பெண்களைப் போல் சிகையினை அலங்காரம் செய்வதும், அதனைப் பின்னித் தம்மை அழகுப்படுத்துவதும் அவர்களது வேலையாகி விட்டது.

அது மட்டுமா? பேருந்தில் பெண்கள் செல்ல முடியவில்லை. அவ்வளவு மாற்றம். பேருந்தில் பயணிகளின் நெருக்கம் கூடுதலாக இருந்தால் போதும். நம் ஆண்களுக்கு புதுத் தெம்பு வந்து விடும். உடனே பெண்கள் மீது உரசுவதும், கலாட்டா பண்ணுவதுமாக பேருந்தில் செல்கின்றனர். நம் பெண்கள் தான் என்ன செய்யலாம்?



மாயையான திரைப்படங்களைப் பார்த்துப் பழகி விட்டனர் நம் இளைஞர்கள். கொஞ்சம் தவறி புன்னகைத்து விட்டால் போதும் உடனே தமது தொலைபேசி எண்ணைக் கட்டாயப்படுத்தி திணித்து விடுகின்றனர்.

இதனைத் தட்டிக் கேட்கும் உரிமை படித்த, பண்பான நம் தமிழ் இளைஞர்களுக்கு உண்டல்லவா? ஆனால் அவர்கள் இதனைக் கண்டும் காணாதவர் போலல்லவா உள்ளனர். இது எங்கே சென்று முடியப் போகிறதோ? தெரியவில்லை.

சரி நம் இளைஞர்கள் தான் இப்படி என்றால் சிறுவர்களும் அதே போலல்லவா உள்ளனர். எங்கு அவர்கள் சென்றாலும் சரி அவர்களது கைகளில் தொலைபேசி காணப்படும். அதனை வைத்து எத்தனை குளறுபடிகளைச் செய்கின்றனர். இவர்கள் நம் நாட்டின் முதுகெலும்புகள் அல்லவா? இவர்களே இப்படி என்றால்? இனி வரும் சந்ததி எப்படி இருக்கப் போகிறது. சற்றே சிந்தியுங்கள்.

எஸ்.எஸ்தர், ஜெயபுரம்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................................

முகவரி :-..........................................................

..........................................................

......................... திகதி

......................... கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மௌனச் சூழல்



சி.நித்யா

நீ தொடர்ந்து
செய்யும் மௌனச் சமரில்
நான் இழக்க
இருப்பது என்
அமைதியை என்று
தெரிந்தும் அமைதியாய்
ஓடும் அருவிபோல
சென்று
கொண்டிருக்கிறாயே

உன் அமைதிக்குள்
இருக்கும் மாயச் சூழலில்
சிக்கிக் கொண்டு
தவிக்கும் என்
இதயத்திற்கு மட்டும்
தான் தெரியும்..
உன் மௌனச் சூழலின்
வலிமை என்ன என்று...

## துள்ளல் குருவியும் துஷ்டச் சாவும்...



சில்லென்று ஒரு குருவி-பெரும்
சிருங்காரம் புரியுதே-அதன்
சின்ன விழிகளிலும் எதிர்கால
சிறப்பு தெரிகிறதே

சிறகு குளிர்ந்தது போல் அதன்
சிந்தை குளிர்கிறதே திண்ணைப்
பக்கம் வந்த காற்று அதனை
தூக்கம் பக்கம் அழைக்குதே

பூஞ்சோலை நடுவினிலே-அந்த
பூக்களின் தேனினையே-அது
புரிந்து உண்டிடவே-அந்தப்
பூக்களும் மெய் சிலிர்க்குதே

பூஞ்சோலை வந்த சிறுவன்-அந்த
சிட்டுக்குருவிதனை-எட்டிப் பார்த்து
சின்னக் கல்லொன்றை வீசுகிறான்
கல்லுப் பட்ட குருவி பூவிதழில் விழுந்ததுவே


அதன் சின்ன விழிகளையும் -சிறு
துளிகள் நனைக்கிறதே-அதன்
பூமேனியில் பட்ட இரத்தம்-புத்தம்புது
பூக்களில் படிகிறதே

பலநாள் சிரித்த குருவி-ஏனோ
சிலநிமிடத்தில் மரித்ததுவே-அதைக்கண்ட
சிறுவனோ அதைப் பெரும்
பற்றைக்குள் வீசிவிட்டான்
தாய்க்குருவியின் அலறலை-அந்த
சிறுவன் அறிவானோ-
சிறுகுருவியின் ஆசைகள் ஏனோ
நிராசைகளாகினவே-அதன்
சொந்த வாழ்வு ஏனோ சோகத்தில்
கருகியதே

இ.இசைப்பிரியன்
உடுத்துறை

# தென்னமரவாடி மக்களின் அவலம் தீருமா....?

சுதன்,
திருமலை




தென்னன் மரபு அடி; தென்னன் மரபடி என்று வழங்கி வந்த அந்தப் பெயர், பின்னர் தென்னமரவாடியாகத் திரிந்து வழங்கி வருகின்றது. தென்னன் என்பது பாண்டிய மன்னர்களைக் குறிக்கும் பொதுப்பெயர். பண்டைய காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த தென்னவன் என்ற அரசன், இந்தப் பிரதேசத்தை ஆட்சி செய்ததாகவும், அவனுடைய பெயர் ஊரின் பெயராக மாறியதாகவும், அந்தக் கிராம மக்களின் கதைகளினூடாக அறிய முடிகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தென்னமரவாடி கிராமம், திருகோணமலைப் பட்டணத்திலிருந்து 73 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. 1984 ஆம் ஆண்டு போரினால் இடம்பெயர்ந்த தென்னமரவாடி மக்கள் 2011 ஆம் ஆண்டு ஆவணி மாதம் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீள் குடியமர்த்தப்பட்ட அம்மக்கள் இன்று வரை எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி, தகரக் கொட்டில்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அங்குள்ள மக்களைச் சந்தித்த போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

தென்னமரவாடி கிராமத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் ஒருவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:-

“1984 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி எமது கிராமத்தின் மீது சிங்கபுர இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினரும், இனவாத சிங்களவர்களும் இணைந்து தாக்குதல் நடத்தினார்கள். அவர்கள் நடத்திய அந்தத் தாக்குதலினால் எமது கிராமத்தில் பலர் உயிரிழந்தார்கள். இராணுவத்தினரின் தாக்குதல் அச்சத்தினால் நாம் அன்றைய தினமே எமது கிராமத்தை விட்டு கையில் அகப்பட்ட பொருள்களுடன் வடக்கே உள்ள கொக்குத் தொடுவாய்க்கு சென்றோம். அங்குள்ள பாடசாலையில் 21 நாள்கள் தங்கியிருந்தோம். அங்கும் தாக்குதல் தொடர்ந்ததால் அங்கிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் குடியமர்ந்தோம்.

2002 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் போது சம்பந்தன் ஐயா எடுத்த முயற்சியினால் எமது கிராமத்தைச் சென்று பார்வையிட மட்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. கொக்குத்தொடுவாயிலிருந்து கால்நடையாக நடந்து வந்து எமது கிராமத்தை பார்த்துவிட்டு நாம் மீண்டும் முல்லைத்தீவு சென்றுவிட்டோம். அதன் பிறகு 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி எமது கிராமத்தில் மீள்குடியமர எமது அரசு அனுமதி வழங்கியது.

பற்றைக்காடுகளை வெட்டித் தான் எமது கிராமத்திற்கு வந்தோம். எமது ஊர் ஒரே காடாக இருந்தது. வீடுகள், பாடசாலைகள், கோயில் என அனைத்தும் அடியோடு அழிக்கப்பட்டிருந்தன. யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினர் எமக்கு தற்காலிக கொட்டில்கள் அமைத்துத் தந்தார்கள். அந்தக் கொட்டில்கள் 6 மாதத்திற்குரிய தற்காலிக கொட்டில்களே எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை நிரந்தர வீடுகள் எமக்குக் கிடைக்கவில்லை. அரசு எந்தவித நிவாரணங்களையும் வழங்கவில்லை. உலக உணவுத் திட்டத்தின் கீழ் 6 மாதங்கள் நிவாரணம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்களும் நிவாரணத்தை நிறுத்தி விட்டார்கள். எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ நேர்ந்துள்ள போதிலும் எமது சொந்த மண்ணிலே வாழ்கின்றோம். என்ற திருப்தியுடன் வாழ்நாளைக் கழிக்கின்றோம் என்றார்.

> “எமது கிராம மக்களுடைய 300 ஏக்கருக்கும் கூடுதலான வயல் காணிகளை அவர்கள் ஆக்கிரமித்திருக்கின்றார்கள். “வயலுக்கு போமிட் இருக்கின்றதா என்றுஎங்களிடம் அவர்கள் கேட்கிறார்கள். எங்களது பரம்பரைக் காணிக்கு அவர்கள் உரிமை கொண்டாடப் பார்க்கின்றார்கள்.”

இது குறித்து மேலும் விவரிக்கையில், “துவரம் முறிப்புப் பகுதியில் எமக்கு வயல்கள் இருக்கின்றன. எமது வயலை புல்மோட்டை இளைஞர்களால் உழவு இயந்திரம் மூலம் துப்புரவு செய்த போது சிங்களத்தில் பேசியபடி இருவர் எமது வயலுக்கு அருகில் வந்து ஏன் வயலை துப்புரவு செய்கிறாய்?” என என்னிடம் கேட்டார்கள். அதைக் கேட்பதற்கு நீங்கள் யார்? என்று நான் திருப்பிக் கேட்டேன். ‘இது எங்களுடைய வயல்’ என இரண்டு சிங்களவர்களும் கூறினார்கள்.

1975 ஆம் ஆண்டு முதல் இங்கு வயல் செய்திருக்கின்றோம். போர் காரணமாக இடம்பெயர்ந்த பின் எமது வயல் காணிகளை சிங்களவர்கள் பிடித்து வயல் செய்து உழைத்ததால் இப்போதும் எமது காணியை விட அவர்களுக்கு விருப்பம் இல்லை. இந்த விடயத்தை புல்மோட்டை பொலிஸாரிடம் முறையிட்ட போது, எங்களை விசாரித்துவிட்டு எம்மை வயல் செய்வதற்கு அனுமதித்தார்கள். ஆயினும் இப்போதும் எமது வயல் காணிகளை அவர்கள் விடுவதாக இல்லை. இந்த முறையும் பிரச்சினை ஏற்படுத்துவார்கள்.

எமது கிராம மக்களுடைய 300 ஏக்கருக்கும் கூடுதலான வயல் காணிகளை அவர்கள் ஆக்கிரமித்திருக்கின்றார்கள். “வயலுக்கு போமிட் இருக்கின்றதா என்றுஎங்களிடம் அவர்கள் கேட்கிறார்கள். எங்களது பரம்பரைக் காணிக்கு அவர்கள் உரிமை கொண்டாடப் பார்க்கின்றார்கள். இந்த முறை நாம் விடமாட்டோம்.

எல்லாவற்றையும் இழந்தும் எமது காணியில் வயல் செய்ய முடியவில்லை என்றால் ஏன் நாங்கள் இங்கு வர வேண்டும். இந்தமுறை எமது வயல்காணிகளை நாம் அவர்களுக்கு விடமாட்டோம்” என உறுதியுடன் கூறினார் அவர்.

தங்கள் ஊரில் என்ன வளங்கள் தான் இல்லை. 1984 ஆம் ஆண்டு போரினால் இடம்பெயர்வதற்கு முன்னர் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை பற்றியும் இடம் பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட பின்னர் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் பற்றியும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள்.

“போரினால் இடம்பெயர்வதற்கு முன்னர் 222 குடும்பங்கள் தென்ன மரவாடியில் வசித்து வந்தோம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 40 தொடக்கம் 50 பசு மாடுகள் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் எப்போதும் நெல் மூடைகள் அடுக்கப்பட்டு இருக்கும். பசுநெய், பசுப்பால், தயிர் என்பனவற்றை எங்கள் ஊரில் வாங்குவதற்கு புல்மோட்டையிலிருந்து கூட மக்கள் வருவார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர்கள் தான் எங்கள் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க வந்தார்கள். வந்தவர்கள் பலர் இங்குள்ள வளத்தை கண்டு இங்கேயே தங்கிவிட்டார்கள். எமது ஊர் தண்ணீருக்கு என்று தனிச் சிறப்பு உண்டு. குடிக்கக் குடிக்க குடித்துக் கொண்டே இருக்கலாம்.

அவர்கள் கூறிய விடயம் உண்மையே. எத்தனை வளங்கள்? கடல் வளம், வயல் வளம், மண் வளம். மிகவும் வசதியாக வாழ்ந்த மக்களை இராணுவத்தினர் 1984 ஆம் ஆண்டு வெளியேற்றினார்கள். வெளியேறிய மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களில் வாழ்ந்த நிலையில் போர் முடிவடைந்தும் 2011 ஆம் ஆண்டு மீள் குடியமர்வு என்ற பெயரில் சொந்த இடத்தில் மீள் குடியமர்ந்தார்கள்.

27 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் வாழ்வது என்பது அந்த மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. மக்கள் வாழ்ந்த தற்கான அடையாளமின்றி காடாகக் காட்சியளித்த தென்னமரவாடியில் காடுவெட்டி மீள்குடியமர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் தற்காலிக கொட்டில்கள் வழங்கப்பட்டன. அரசினால் எந்தவித உதவிகளும் தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. மீள்குடியமர்த்தப்பட்ட ஏனைய இடங்களில் அரசினால் வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கூட தமக்கு வழங்கப்படவில்லை எனவும், தாம் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்வதாகவும் அக்கிராம மக்கள் குறிப்பிட்டனர்.

மீளக்குடியமர்ந்த பின்னர் ஐந்து தடவை பெருவெள்ளம் ஏற்பட்ட போதிலும் அரச உயர் அதிகாரிகள் எவரும் தங்களை வந்து பார்க்கவில்லை எனவும் குறிப்பிட்டனர். மீளக் குடியமர்ந்த ஆரம்பத்தில் பஸ்சேவை நடத்தப்பட்ட போதும் கடந்த நான்கு மாதங்களாக பஸ்சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 18 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் புல்மோட்டைக்கு செல்லவேண்டியிருக்கின்றது. கர்ப்பிணிப் பெண்களைக் கூட வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதாக இருந்தால் 18 கிலோமீற்றர் தூரம் சைக்கிளில் தான் கொண்டு செல்ல வேண்டியுள்ளது எனக் கண்ணீர் வடித்தார்கள்.

இரவில் காட்டு யானைகள் ஊருக்குள் வருவதால் நித்திரையின்றி கண் விழிப்பதாகக் கூறும் இந்த மக்கள் தங்களது அடிப்படைப் பிரச்சினைகளைக் கூட தீர்த்து வைப்பதற்கு யாரும் முன் வருவதாக தெரியவில்லை. எனவே எங்களது பிரச்சினையை வெளி உலகுக்கு வெளிப்படுத்துங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள்.

தென்னமரவாடி மக்களின் பிரச்சினைகள் குறித்து குச்சவெளியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவரிடம் கேட்ட போது:-

“வயல் நிலங்களைச் சிங்கள மக்கள் ஆக்கிரமித்திருக்கின்றார்கள். தென்னமரவாடி காணிகளின் எல்லை எது என்று கூடத் தெரியாமல் இருக்கின்றது. எல்லைகள் கூட மாற்றியமைக்கப்பட்டு இருக்கின்றன. தொல்பொருள் என்ற பெயரில் அரசினால் காணிகள் சூறையாடப்படுகின்றன. இந்த நிலை தொடருமானால் நாட்டில் மீண்டும் பிரச்சினை உருவாகும்” எனக் குறிப்பிட்டார். ★

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். கடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கடகம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**சிங்கம்:** எதிலும் நிதானம் அவசியம். பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** ஒரேநாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். சிறுசிறு அவமானம் ஏற்படக் கூடும். முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**நாளை**

மாசி- 17 வெள்ளிக்கிழமை 01.03.2013

திதி: சதுர்த்தி மு.இ. 11.03 வரை

நட்சத்திரம்: சித்திரை பி.இ. 01.29 வரை

சுபநேரம்: 06.27- 07.57 வரை

இராகுகாலம்: 10.57- 12.27 வரை

**துலாம்:** தேவையற்ற அலைச்சலுக்கு ஆட்படுவீர்கள். ஒரு விடயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் கடன் வாங்க வேண்டி வரும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை துளிர் விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரச விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**மகரம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். நிறைவேறாத வேலைகள் முடியும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிட்டும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் கொடுக்க வேண்டாம். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 9 | | | | 8 |
| 4 | 2 | 9 | 8 | 3 | | | | 7 |
| | | 3 | | 5 | | 2 | 6 | |
| 2 | | 4 | | 1 | | | 9 | |
| 9 | 5 | | | | | | 8 | 3 |
| | 1 | | | 8 | | 4 | | 2 |
| | 9 | 2 | | 6 | | 8 | | |
| 1 | | | | 2 | 4 | 7 | 5 | 6 |
| 6 | | | | 7 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 8 | 3 | 4 | 7 | 9 | 1 | 5 |
| 9 | 1 | 4 | 8 | 2 | 5 | 6 | 3 | 7 |
| 3 | 7 | 5 | 1 | 9 | 6 | 2 | 4 | 8 |
| 2 | 6 | 9 | 5 | 1 | 3 | 7 | 8 | 4 |
| 4 | 8 | 1 | 6 | 7 | 2 | 5 | 9 | 3 |
| 5 | 3 | 7 | 9 | 8 | 4 | 1 | 2 | 6 |
| 7 | 9 | 6 | 4 | 3 | 1 | 8 | 5 | 2 |
| 1 | 5 | 3 | 2 | 6 | 8 | 4 | 7 | 9 |
| 8 | 4 | 2 | 7 | 5 | 9 | 3 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
14.07.1960

மறைவு
29.01.2013

## அமரர் கணேசரட்ணம் ஞானரட்ணம்

கடந்த (29.01.2013) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைத் தொடர்புகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.03.2013) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் அவரின் இல்லத்தில்நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய், கரவெட்டி.
077 2487 830

குடும்பத்தினர்.

(27762) (45.6.7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சைவப்புலவர்

**சண்முகலிங்கம் முகுந்தன்** (இணுவில் கிழக்கு)

(Dip.Teach,B.A. M.A.)

Best Wishes

இன்று யாழ். பல்கலைக்கழக
பொதுப் பட்டமளிப்பு
விழாவில்

**சைவசித்தாந்த முதுகலைமாணி**
**பட்டம் பெறும்** வேளையில்

தண்டமிழ் மொழி விரும்பும் மேலான சைவநெறி
மீதான ஆர்வமும் கொண்டதன் விளைவால் உயர்ந்தீர்!
அறிவு மேம்பட ஆழ் புலமைப் பட்டங்கள் சேரல்போல்
மேன்மேலும் சாதனை படைக்க சரித்திரனாய் மிளிரயாம்
வாழ்த்துகின்றோம்
வாழிய வாழிய வாழியவே

**வாழ்த்துவோர்**

செல்வநாயகி சண்முகலிங்கம் (அம்மா)
Dr. சுகந்தன் – Dr. சிவகௌரி,
நித்திலா (அண்ணா – குடும்பம்),
திலகராஜ் – நாகதாரிணி,
திலக்சயன் (அக்கா – குடும்பம்).

சுகந்தம்
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(35557) (45.6)

## இலங்கையில் வெப்பமான காலநிலை

கொழும்பு,பெப்.28

ஈரப்பதன் குறைவடைந்து வெப்பநிலை அதிகரித்து வருகின்றமையால் எதிர்வரும் நாள்களில் இலங்கையில் வெப்பமான காலநிலை நிலவும்.

இந்தத் தகவலை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல பகுதிகளில் வெப்பநிலை உயர்வடைந்து காணப்படுகின்றது.

இரத்தினபுரியில் 34 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. (ச)



சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியின் சொந்த நிதியில் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கட்டப்பட்ட கட்டடத்தை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

## தனியார் பஸ்களுக்கு எரிபொருள் மானியம்

### இரு வாரங்களில் இறுதி முடிவு

கொழும்பு,பெப்.28

தனியார் பஸ்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவது தொடர்பில் இரு வாரங்களில் இறுதி முடிவு எடுக்கப்படும். தனியார் போக்குவரத்து அமைச்சருக்கும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சில் மேற்குறித்த இணக்கம் காணப்பட்டது.

அதுவரை எதுவித தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை என்று பஸ் உரிமையாளர் சங்கங்கள் உறுதியளித்துள்ளன என்று தனியார் போக்குவரத்து அமைச்சின் செயலர் விக்டர் சமரவீர தெரிவித்தார்.

எரிபொருள் விலை உயர்வடைந்ததை அடுத்து பஸ் கட்டண உயர்வுக்குப் பதிலாக எரிபொருள் மானியம் வழங்குமாறு 4 பஸ் சங்கங்கள் கூட்டாகக் கோரியுள்ளன. அது தொடர்பில் நேற்றுமுன்தினம் இருதரப்பினருக்கும் இடையில் தனியார் போக்குவரத்து அமைச்சில் பேச்சு இடம்பெற்றது.

பஸ் கட்டண உயர்வுக்குப் பதிலாக குறுந்தூர பஸ்களுக்கு 20 ஆயிரம் ரூபா முதல் 22 ஆயிரம் ரூபாவும், நீண்ட தூர பஸ்களுக்கு 40 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபாவும் மானியம் வழங்குமாறு பஸ் சங்கங்கள் கோரியுள்ளன. மானியம் வழங்கப்படுமானால் பஸ் கட்டணத்தைக் குறைக்கவும் தயார் என்று பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பஸ் சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து நிதி அமைச்சுடனும் ஜனாதிபதியுடனும் பேச்சு நடத்தி இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்று தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்னாயக்க கூறினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், அகில இலங்கை தனியார் பஸ் சங்க சம்மேளனம், அனைத்து மாகாண பஸ் உரிமையாளர் சங்கம், தென் மாகாண பஸ் உரிமையாளர் சம்மேளனப் பிரதிநிதிகள், தேசிய போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகள், தனியார் போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# இலங்கைக்கு சிக்கல் வந்தால் அதற்குப் பொறுப்பு மஹிந்தவே

### இந்தியா நம்பிக்கை இழந்துவிட்டது என்கிறார் திஸ்ஸ

கொழும்பு,பெப்.28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை சிக்கலுக்குள் தள்ளப்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் மஹிந்த ராஜபக்ஷ அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்துஅவர் நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் 22 ஆவது மாநாட்டில் இலங்கைக்கு சிக்கல்-நெருக்கடி வந்தால் அதற்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசே ஏற்க வேண்டும். அத்தோடு கடந்த மனித உரிமைகள் சபை அமர்வில் சர்வதேசத்துக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் ஏற்க வேண்டும்.

தற்போதைய தகவல்படி இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை கொண்டு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதற்கு இந்தியா ஆதரவு வழங்கும் என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சர்வதேசத்தின் தேவைக்கேற்ப அவர்கள் முன்னிலையில் மண்டியிடும் நாடு இலங்கை அல்ல என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார். உண்மையை மறைத்து மக்கள் மத்தியில் அரசு வீராப்பு பேசுவது தெளிவாகிறது. ஆனால் உண்மை நிலையை அறிய பொது மக்களுக்கு எல்லாவித உரிமையும் இருக்கிறது.



கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று 2012 ஆம் ஆண்டில் பிரேரணை முன்வைத்து அமெரிக்கா வலியுறுத்தியது. மஹிந்த சமரசிங்கவும் அறிக்கை பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்தார். ஐ.நா. கூட்டத்தில் ஜீ.எல்.பீரிஸும் வாக்குறுதியை அளித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறை, வடக்கு தேர்தல் என்பவற்றை உடன் செயற்படுத்துமாறு இந்தியா வலியுறுத்தியது. எனினும் இலங்கை அதனை செய்யத் தவறியதால் இந்தியா இலங்கை மீது நம்பிக்கை இழந்துள்ளது.

அதனால் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்கவுள்ளது. எனவே இந்தியாவுக்கு பொய் வாக்குறுதி அளித்த அரசு அதனை பொறுப்பேற்க வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## சமுர்த்தித் திட்டத்தை நிறுத்தப் போவதில்லை

### ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு,பெப்.28

யார் என்ன சொன்னாலும் சமுர்த்தி திட்டத்தை நிறுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் இன்று நாட்டை அபிவிருத்தி செய்து வருகின்றோம். துறைமுகம், அதிவேக நெடுஞ்சாலை, விமான நிலையம் போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு பகுதிக்கு மட்டும் நாம் அபிவிருத்தியை மட்டுப்படுத்தவில்லை. தெற்கிலிருந்து வடக்கு வரை அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே யார் என்ன சொன்னாலும் சமுர்த்தித் திட்டத்தை அரசு ரத்துச் செய்யப் போவதில்லை.-என்றார். (ச)

## போதைபொருளுக்கு அடிமையானோரை சிறைச்சாலைக்கு அனுப்பாது புனர்வாழ்வு

### விரைவில் புதிய சட்டங்கள் என்கிறது புனர்வாழ்வு அமைச்சு

கொழும்பு,பெப்.28

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான புதிய சட்டங்களை விரைவில் உருவாக்க சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை சிறைக்கு அனுப்பாது புனர்வாழ்வளிப்பதற்கான புதிய சட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன என்று அமைச்சின் செயலர் விதானகே தெரிவித்தார்.

அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

எதிர்காலத்தில் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி நீதிமன்றத்தின் உத்தரவு மூலம் அவர்களை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்புவதற்கு புதிய சட்டங்களின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

**எதிர்காலத்தில் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி நீதிமன்றத்தின் உத்தரவு மூலம் அவர்களை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்புவதற்கு புதிய சட்டங்களின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது**

## ஹலால் சான்றிதழ் வழங்கும் உரிமை அரசே பொறுப்பு ஏற்க வேண்டும்

### உலமா சபை அறிவிப்பு

கொழும்பு,பெப்.28

ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை அரசு பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது. அதேவேளை, இதுவிடயத்தில் அனைத்து சமூகங்களும் ஏற்கும் விதமான ஒரு பொறிமுறையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை நாம் தொடர்ந்து மேற்கொள்வோம். எனினும் இந்தச் செயற்பாட்டை அரசு பொறுப்பேற்குமாறு அரசுக்கு ஆலோசனை வழங்குகிறோம் என்று உலமா சபை குறிப்பிட்டுள்ளது.

ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை தொடர்பான இறுதித் தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே உலமா சபை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அங்கு உலமா சபை மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் நாம் தெரிவித்து வருகின்றதையே இன்றும் தெரிவிக்கின்றோமே தவிர புதிதாக எவற்றையும் கூறவில்லை. அதனால் ஹலால் சான்றிதழ் செயற்பாட்டை அரசு பொறுப்பேற்று அனைத்து சமூகங்களும் ஏற்கும் விதமான ஒரு பொறிமுறையை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

இந்த ஆலோசனையை அமைச்சரவை உப குழுவிடம் சமர்ப்பித்துள்ளோம். அதனால் அவர்கள் எடுக்கும் தீர்மானத்துக்கு கட்டுப்படுவோம்.

இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு அரசால் எந்தவிதமான அழுத்தங்களும் எமக்கு பிரயோகிக்கப்படவில்லை. என்றும் தெரிவித்துள்ளது.

ஹலால் சான்றிதழைப் பெற்ற ஓரிரு நிறுவனங்கள் மாத்திரமே அந்தச் சான்றிதழை வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளன. ஏனைய எந்தவொரு நிறுவனமும் வாபஸ் பெறுவது தொடர்பில் இதுவரை அறிவிக்கவில்லை.

ஹலால் சான்றிதழைப் பெற்ற நிறுவனங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்பது எமக்குத் தெரிந்த விடயமேயாகும். முஸ்லிம்களுக்கு மாத்திரமே ஹலால் சான்றிதழ் என்ற நிலைப்பாட்டிலேயே உலமாசபை உள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்வோம். ஹலால் சான்றிதழை வழங்கும் செயற்பாட்டை இரண்டு வகையில் மேற்கொள்ள முடியும். முதலாவது அரசினூடாக மேற்கொள்வது. இரண்டாவது தனியார் நிறுவனமொன்றினூடாக மேற்கொள்வது.

தற்போது நாங்கள் இந்த ஹலால் சான்றிதழ் வழங்கும் முறையை அரசு மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளோம்.


பொதுபலசேனா அமைப்பை நாங்கள் கவனத்தில் கொள்ளவில்லை. அந்த அமைப்பை கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளவுமில்லை. எனினும் நாட்டில் இன ஒற்றுமை, சமாதானம் சகவாழ்வு நிலவ வேண்டும் என்பதற்காகவே நாம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டோம் .- என்று தெரிவித்துள்ளது. (ச)

# மரண அறிவித்தல்

## விஸ்வலிங்கம் கனகரத்தினம்

**(C.T.B மணியம்)**

(ஓய்வுபெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சேவை சாரதி)



பெரியமாவடி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், இல.11 ¼ ஏக்கர் குமரபுரம், பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கனகரத்தினம் (C.T.B. மணியம்) 26.02.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், பூம்பிள்ளையின் அன்புக் கணவரும், சசிகலா (கலா), கணேஸ்வரன் (ராசன், கரைச்சி வடக்கு, பல.நோ.கூட்டுறவு சங்கம், பரந்தன்), குகணேஸ்வரன் (குவா, ¼ ஏக்கர் குமரபுரம்) விக்கினேஸ்வரன் (வரதன், டாஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு - பரந்தன்), யோகேஸ்வரன் (இந்து-கரைச்சி வடக்கு பல.நோ.கூட்டுறவுச் சங்கம், பரந்தன்), காலஞ்சென்ற பிறேமலதா (லதா), விமலேஸ்வரன் (விமல், உருத்திரபுரம்), கமலேஸ்வரன் (கமல், வறுமையின் கரங்கள் ஆய்வு முகாமையாளர், பரந்தன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலேஸ்வரன் (மாமா, ¼ ஏக்கர் குமரபுரம்), சந்திர பிரபாகரன் (மெக்கானிக் பிரபா, பரந்தன்), தாரணி (உருத்திரபுரம்), நகுலேஸ்வரி (¼ ஏக்கர், குமர புரம்), சந்திரிக்கா (ஜேந்தா), விக்னேஸ்வரி, பத்ம றஞ்சினி, நிர்மலா ஆகி யோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ¼ ஏக்கர், குமரபுரம், பரந்தனில் உள்ள இல்லத்தில் நடைபெற்று இன்று (28.02.2013) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பரந்தன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**¼ ஏக்கர், குமரபுரம்,**
**பரந்தன்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(24274) (10.6)

advt@uthayan.com
0215671111

மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி வினோதா சிவராமச்சந்திரன்

இன்று (28.02.2013) வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில்

கலைமாணி சிறப்புப் பட்டம்

(ஆங்கில இலக்கியம்) பெறும்

எமது அன்புச் சகோதரி

திருமதி வினோதா சிவராமச்சந்திரன்

அவர்களை மனமகிழ்வுடன் வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பட்டங்களைப் பெற்றுச் சகல சௌபாக்கியங்களும் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்
அண்ணன்மார், அண்ணிமார்,
அக்காமார், அத்தான்மார், தங்கை.

சுன்னாகம்.

(சு/ 6698)(15.6.

IMMEDIATE

We are one of the leading pharmaceutical distributers and are having two immediate Vancies at our computer Counter to work as Computer Operators.
Ideal candidates may walk- in confidentially for an interview from now during any week days between 08.30 am- 10.00am or 03.00-05.00pm.

Vanikaa Medicals
NO.203, Hospital Road, Jaffna.
Tel: 021 221 9700/ 021 222 6291
Fax: 021 222 2445
E.mail: vanikaa@sltnet.lk

(33867)(6.7.11)

# மரண அறிவித்தல்



திருமதி

## பொன்னம்மா சந்திரசேகரம்

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும், கோயிலாக்கண்டி, கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா சந்திரசேகரம் நேற்று (27.02.2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சந்திரசேகரம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் சிவபாக்கியம், சந்திரவதனி, தனலட்சுமி (ஓய்வுபெற்ற மனைப்பொருளியல் ஆசிரிய ஆலோசகர், சாவகச்சேரி கல்வி வலயம்), சிறிகாந்தன் (ஓய்வுபெற்ற மாநகர சபை தீ அணைப்புச்சேவை சாரதி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான உலகையா -வள்ளிப்பிள்ளை, சின்னையா-சின்னம்மா, சிவகுருதம்பி ஆகியோரின் சகோதரி யும் கணபதிப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, சிவஞானசுந்தரம் (ஞானி), யோகம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற தியாகரா சாவின் மைத்துனியும், காலஞ்சென்ற சரஸ்வதிதேவியின் அன்பு மைத் துனியும், துசிகரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), கவிதா, வருணன் (பிரான்ஸ்), வசிதரன் (சிற்றி ரெக்ஸ் உரிமையாளர், யாழ்ப்பா ணம்), சரணியா (லண்டன்), சுமுகன் (சிற்றி ரெக்ஸ், யாழ்ப்பாணம்), கரிஸ், கரினி, கனிசா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும், நிர்மலரூபினி (பிரான்ஸ்), புவனலோஜினி (பிரான்ஸ்), வசந்தன் (நீர்வழங்கல் சபை, யாழ்ப்பாணம்), துசாகரன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2013) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிற்றி ரெக்ஸ்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பேரன்-சி.வசிதரன்.**

(33855) (10.6.7)

## கிழக்கில் சமாதான நீதிவான்களின் நலன் பேணுவதற்கு அமைப்பு

மட்டக்களப்பு,பெப்.28

கிழக்கு மாகாணத்தில் உள்ள சமாதான நீதிவான்களை ஒன்றிணைத்து அவர்களின் நலன் பேணும் அமைப்பொன்றை ஏற்படுத்துவது வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஓய்வு பெற்ற காணி அதிகாரியும், அகில இலங்கை சமாதான நீதிவானும், உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சின் இணைப்புச் செயலாளருமான கீர்த்திசிறி ஏ.பி.தாவூட் தலைமையிலான குழுவினர் இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை

**இந்த அமைப்பில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சமாதான நீதிவான்கள் இணைந்து கொள்ள முடியும்.**

மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த அமைப்பில் அம்பாறை, மட்டக்களப்பு , திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சமாதான நீதிவான்கள் இணைந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொத்துவில் அல்- அக்ஷாவுக்கு 3 ஆசிரியர்கள் உடன் நியமனம்

### பெற்றோரின் கவனவீர்ப்புப் போராட்டத்தை அடுத்து

பொத்துவில், பெப்.28

பொத்துவில் அல்.அக்ஷா வித்தியாலயத்துக்கு உடனடியாக 3 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து, நேற்று புதன்கிழமை பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தந்துள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் எம். ஏ.சி.எம். ரஹ்மதுல்லா தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையிலிருந்து இடமாற்றப்பட்ட 15 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு கோரி, பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து கடந்த வியாழக்கிழமை கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு தமது கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்புவதில்லையென்று பெற்றோர்கள் முடிவு செய்திருந்தனர். அதனடிப்படையில் அல் அக்ஷா வித்தியாலயத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் மாணவர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை. இந்நிலையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அல் அக்ஷா வித்தியாலயத்துக்கு அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல். எம்.காசிம், உடனடியாக ஆசிரியர் மூவரை நியமித்துள்ளார். பொத்துவில் பாடசாலைகளில் கற்பித்து வந்த ஆசிரியர்களில் மூவரையே அல் அக்ஷா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் மூலம் அவர் புதிதாக நியமனம் வழங்கியுள்ளார் என்று பாடசாலையின் அதிபர் கூறினார். (ச)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# மணல் அகழ்வை உடன் தடுத்து நிறுத்துங்கள்

### துரைரெட்ணம் வேண்டுகோள்

எருவில்,பெப்.28

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்அகழ்வைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

மணல் அகழ்வால் ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் குறித்து பிரதேச அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதையடுத்து, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்தணமடு ஆற்றுப் பகுதி, தும்பாலை ஆற்றுப் பகுதிகளில் நீண்டகாலமாக சிலர் மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.


மண் அகழ்வால் ஆறுகள் அகலமாக்கப்படுவதும், வீதிகள் பாதிப்படையும் சூழ்நிலையும் ஏற்படுகின்றன. ஆறுகள் அகலமாக்கப்படுவதால் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சப்படும்போது சிரமம் ஏற்படுகிறது. வயல் நிலங்கள் உயரமாகவும் மாறுகின்றன என்று மக்கள் பல முறைப்பாடுகளைத் தெரிவித்தபோதும், மண் அகழ்வு நிறுத்தப்படவில்லை.

கடந்த காலத்தில் இந்தப் பிரதேசங்களில் மண்அகழ்வு காரணமாக வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது.

மட்டக்களப்பு , வெல்லாவெளிப் பிரதேசத்தில் வேத்துச்சேனை, வந்தாறுமூலை, மயிலவெட்டுவான், சித்தாண்டி ஆகிய பிரதேசங்கள் அடிக்கடி வெள்ள நீரில் மூழ்கி வருகின்றன.

அரசு விவசாய அமைப்புக்களிடம் எவ்வித ஆலோசனையும் பெறாமல் தனிப்பட்ட நலனுக்காக மண் அகழ்வுக்கு அனுமதி கொடுப்பதால் முழு சமூகமுமே பாதிப்பு அடைகின்றது. எனவே சமூக நலன்களைக் கருத்தில் கொண்டு விவசாயச் செய்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்தாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்டோர் மண்அகழ்வை நிறுத்த வேண்டும்.

அபிவிருத்திக்கு மண் கட்டாயத் தேவையாகும். எனவே பாதிப்புக்களை ஏற்படுத்தாமல் இருப்பதற்கு மண் அகழ்வை தடுக்க வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-31)



சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் அதிபர் எம்.ஸ்ரீபன் மத்தியூ தமிழ்த் தாய்க்கு மலர் மாலை அணிவிக்கின்றார். (31)

## தேசத்துக்கு மகுடத்தை முன்னிட்டு போக்குவரத்துப் பிரச்சினைக்கு தீர்வு

திருகோணமலை, பெப்.28

தேசத்துக்கு மகுடம் நிகழ்வை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் நிலவும் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அடுத்த மாதம் கிழக்கு மாகாணத்தை மையமாக வைத்து ஆரம்பமாகவுள்ள தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தித் திட்டம், கண்காட்சி என்பவற்றை அடுத்தே கிழக்கில் நிலவும் போக்குவரத்து தொடர்பான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவுள்ளது.

**கிழக்கில் பயணிகளின் நலன்கருதி பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன**

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் ரயில் சேவை என்பனவற்றில் நிலவும் குறைபாடுகள் பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கிழக்கில் பயணிகளின் நலன்கருதி பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## தொழிலாளர் மீது குளவிகள் தாக்குதல்

நோர்வூட் , பெப்.28

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலகொலை தோட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை நான்கு தொழிலாளர்களை குளவிகள் தாக்கியுள்ளன.

குளவித் தாக்குதலால் பாதிக்கப்பட்டோரில் இருவர் டிக்கோயா கிளன்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் காலை தேயிலை பறித்துக்கொண்டிருந்த பெண்கள் மீதே குளவிகள் தாக்கின. (ச)

## தோட்டத் தொழிலாளருக்கு நியாயமான சம்பளம்; தொழிற்சங்கங்கள் ஆதரவு வழங்க வேண்டும்

பொகவந்தலாவை,பெப்.28

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க தொழிற்சங்கங்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குவதிலிருந்து பின்வாங்கும் கைங்கரியங்களில் தோட்ட நிறுவனங்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

அடுத்த மாதம் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகவுள்ள கூட்டொப்பந்தத்தைத் தொடர்ந்து புதிய கூட்டொப்பந்தம் தொடர்பான பேச்சுகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று தோட்ட முதலாளிமார் சம்மேளனமும், தொழிற்சங்கங்களும் தெரிவிக்கவில்லை.

அதற்கு மலையகத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின்மீது ஏற்பட்டுள்ள அச்சமே காரணமாகும்.

கூட்டொப்பந்தப் பேச்சின்போது தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வலியுறுத்தும் வகையில் தொழிலாளர் நலன் சார்ந்த தொழிற்சங்கங்கள் இணைந்து ஏற்படுத்தியுள்ள மலையக தொழிற்சங்க கூட்டமைப்பானது தொழிலாளர்களின் பாதுகாப்பு அரணாக மாறியுள்ளது.

தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டமைப்பை சிலர் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். எனினும், தொழிலாளர்கள் மத்தியில் இந்தப் புதிய கூட்டமைப்புக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு அதிகரித்துவருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் கூட்டொப்பந்தம் மேற்கொள்கின்ற காலத்தில் கூட்டொப்பந்தத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வோம் என்று சில தொழிற்சங்கத் தலைவர்கள் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். எனவே, இத்தகைய தலைவர்கள் குறித்து தொழிலாளர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கிரான்- சந்திவெளி ஊடாக 'பாதை' போக்குவரத்து ஆரம்பம்



மட்டக்களப்பு,பெப்.28

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் - சந்திவெளி ஊடான திகிலிவெட்டை கிராமம் உட்பட பல கிராமங்களின் போக்குவரத்து வசதி கருதி 'பாதை' போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பிரதேசசபை பிரிவுக்கு உட்பட்ட திகிலிவெட்டை, பேரலாவெளி, குடும்பிமலை போன்ற கிராமங்களுக்கு ஒரேயொரு தரைவழிப் பாதையே உள்ளது.

வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் அந்தப் பாதை ஊடான போக்குவரத்து தடைப்படுவதால், அந்தக் கிராமங்களுக்குச் செல்லும் மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு கிரான் - சந்திவெளிக் கிராமத்தின் ஊடாக 'பாதை'ச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் முயற்சியால் இந்தப் பாதைச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வி. B.ஜெபடிலோஜினி

இன்று 28.02.2013 இல் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.A பட்டம் பெறும் பாலசுப்பிரமணியம் மேரிநற்குணம் தம்பதியரின் புத்திரி

ஜெபடிலோஜினி

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



திரு.திருமதி. K.நாகமுத்து (சித்தப்பா)
அரியமலர் (அன்ரி) ரஜீவ்
திரு. திருமதி. Jஞானசீலன் பிரதீபா (தீபா)

சுண்டுக்குளி


# மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.28

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும், இன்று வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரையும் கரவெட்டிப் பிரதேசம், சாமியன் அரசடிப்பிரதேசம், கலிகைப்பிரதேசம், யாக்கருப்பிரதேசம், நெல்லியடிப்பிரதேசத்தின் ஒரு பகுதி, இணுவில் மானிப்பாய் வீதி, ஈஞ்சை வைரவர் கோவில் முதல் பாலாவோடை சந்தி வரை, நல்லூர் பின் வீதி, ஆனைப்பந்தி, முத்திரைச்சந்திப் பிரதேசம், வைமன் பிரதேசம், நல்லூர் கோவில் வீதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)


# கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும்
திருமதி நர்மதா பாலச்சந்திரகுமார்
அவர்களின் அன்பு மாமியார்

திருமதி இராஜேஸ்வரி ஏகாம்பரநாதன்

அவர்கள் கடந்த 26.02.2013இல் இறைபதமடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(9213) (8.16)



# நினைவஞ்சலி

| 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி | | | 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி | | |
|---|---|---|---|---|---|
| பிறப்பு 18 * 01 * 1922 |  | இறப்பு 28 * 02 * 2006 | பிறப்பு 05 * 03 * 1986 |  | இறப்பு 28 * 02 * 2009 |

**சிவகுரு மாணிக்கவாசகர்**
திதி-மாசி அமாவாசை

**சிவபாலச்சந்திரன் பிரசாத்**
[பொறியியல் பீட மாணவன் 2007-பேராதனைப்பல்கலைக்கழகம்]
திதி-மாசி சதுர்த்தி

வாழும் காலத்தில் நடமாடும் தெய்வங்களாக உங்கள் செயல்கள் எமக்கு மகிழ்ச்சி தந்தன. வேண்டுவன தரும் கற்பகத்தருவாக வாழ்ந்தீர்கள். உங்கள் நினைவுகள், செயல்கள், திருவுருவங்கள் எங்கள் மனதை விட்டு அகலாது எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எங்கள் துயரங்கள். ஆண்டவன் அடியிலிருந்து அமைதியான வாழ்வை அருளுங்கள். ஆத்மா சாந்தியடைய எங்கள் குல தெய்வங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

32/3,முரசு மோட்டை,
பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.

(24273) (8.16)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் இருந்து 28.02.2013 இன்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் அதிபர், ஆசிரியர்களை

மாரிமுத்து நவநீதமணி அதிபர் M.Ed.
கந்தையா சேதுலிங்கம் ஆசிரியர் Dip.in Edu.
சோதிநாயகம் ஞானமுரளி ஆசிரியர் Dip.in Edu

Best Wishes

மனமுவந்து வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி,
கரவெட்டி.

(27766)(5.6)



உதயன் விளம்பரத் தொடர்புக்கு —
advt@uthayan.com
0215671111



## விற்பனைக்கு

ஜெனரேற்ரர்
12Kw(டீசல்)மற்றும் Steel
வெட்டும் இயந்திரம்
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0215670350,0773296407



## காணி விற்பனைக்கு

யாழ் கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் ஏறத்தாள 1½ பரப்பு காணி கிணற்றுடனும் கட்டடத்துடனும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-0773906790

(33890)(3.6)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று 28.02.2013 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி பட்டப்படிப்பை (M.A , Distinction Pass) தரத்தில் நிறைவு செய்து முதுகலை மாணிப் பட்டத்தைப் பெறும் எமது மகள்

**செல்வி ஜான்சி ராஜநாதன்**
B.A.(Hons) M.A

அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.



Best Wishes

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(33895)(5.6)



# உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமதி சாந்தினி வாகீசன்

கடந்த ஏழுவருடங்களாக பதிலதிபராக கடமையாற்றி தற்போது அதிபர் சேவை தரம் 2-II இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes




புன்னகை முகத்தில் தோன்ற பொலிவுடன் வளையவந்து
துணிவும் அர்ப்பணிப்பும் கொண்டு தூய நிர்வாகியாகி
இன்னல்கள் பல வந்தபோதும் இறையருளால் வெற்றி கொண்டு
எங்கள் வித்தியாலயத்தில் சைவம், தமிழ் வளர்த்திடவும்
சொன்னயத்தால் சமூக உறவுகள் பேணிநின்று
சோம்பலை விரட்டி கல்வி அபிவிருத்தி மேம்படச் செய்து
அதிபராய்ப் பதவி பெற்ற எங்கள் சாந்தினி அம்மாவை
அக மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம் சேவையில் உயர்ந்திடவே.

பாடசாலைச் சமூகம்
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.

(c/6702) (10.6)



## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரை.

# கேள்விப் பத்திரம்

### யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி எரிபொருள் நிலையத்தில் கனப்பி (CANOPY) அமைத்தல்

01.மேற்படி கட்டட வேலைக்கான உறையிலிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 14.03.2013 ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்விப் பத்திர உறைகள் 15.03.2013 ஆம் திகதி பி.ப.3 மணிக்கு கேள்வி கேட்பவர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| திட்டம் | தேவையான ICTAD தர கட்டம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா. | தேவையான கேள்விப் பத்திரபிணைரூபா. | பிணை பெறுமதியான காலம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம்கேகேஎஸ் வீதி எரிபொருள் நிலைய (CANOPY) கனப்பி அமைத்தல். | C7 | 2000/- | 25000/- | 90 நாள்கள் |

02.கேள்வி கோரல் (NATIONAL COMPETITIVE) கேள்வி கோரல் நடைமுறைக்கிணங்க முறைப்படி நடைபெறும்.

03. மேல் குறிப்பிட்ட ICTAD தரத்தினை உடைய பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களே தகுதியுடையவர்கள் ஆவர்.

04. இத்துறை சார்ந்த முன் அனுபவம் கொண்ட ஒப்பந்த காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

05. கேள்விக்கான ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

06. கேள்விப் பத்திரத்துக்கான ஆவணங்களை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க, பொது முகாமையாளரிடம் 13.03.2013 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஒப்பந்தக் காரர்கள் பதிவேடு, பதிவு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் அவர்களது கடிதத் தலைப்பில் தயாரிக்கப்பட்ட கடிதத்தினைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்விக்கான பத்திரங்கள் பிரதியுடன் ஒவ்வொரு கேள்விக்கும் வெவ்வேறு உறையிலிட்டு, உறையின் இடது பக்க மேல் மூலையில் "யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, எரிபொருள் நிரப்பு நிலைய கனப்பி (CANOPY) அமைத்தல்" எனக்குறிப்பிட்டு 14.03.2013 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரை அடையத் தக்கதாக பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப் பத்திரத்தினை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டவாறு தேவையான கேள்விப் பத்திர பிணைப் பணத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

08. மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரிடமிருந்து 13.03.2013 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.




பெரும்பாலும்மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# கைத்தொழில் பொருள் சந்தை வாய்ப்புக்கு அந்தந்தப் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள்

## பிரதேச செயலகங்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.28


யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் கைத்தொழில் பொருள்களை விற்பனை செய்ய அந்தந்தப் பிரதேச செயலகங்களால் வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் கைத்தொழில் சார்ந்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை ஒன்றிணைத்து அவர்களுக்கான பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் பிரதேச செயலகம் வியாபார நிலையத்தை உருவாக்குமாறும் அந் நிலையத்துக்கு மாவட்ட கைத்தொழில் திணைக்களம் உத்தியோகத்தரை நியமிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாபார நிலையத்துக்கான இடவசதி, தளபாட வசதி, பெயர்ப்பலகை வசதி போன்றவை அந்தந்தப் பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் அறவிக்கப்பட்டுள்ளது. (வ)

## நாம் ஆற்றவேண்டிய சாதனை

"நீயே கடவுள், கடவுளே நீ" என்ற உண்மையை உணர்ந்து நீ உன்னை உறுதிப்படுத்திக் கொண்டால் வேறு விதமான ஆத்மீக நடைமுறைகளை அனுசரிக்க வேண்டியதில்லை. நானும் நீயும் ஒன்று என்ற வாக்கிற்கு அமைய நீ வாழ்ந்து கொள்ள வேண்டும். தலைவனாகிய இறைவனின் ஒருமைப்பாட்டு நிலையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு 'நானே நீ,' நீயே நான், நாம் இரண்டல்ல ஒன்று என்பதை நிலைநாட்டிக் கொள்ளவேண்டும். இதுவே என்றும் ஆற்ற வேண்டிய சாதனை.



சாயி சிந்தனை

## மெய்வன்மைப் போட்டி

அச்சுவேலி அருள் நந்தி வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.ராஜவ ரோதயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (முறைசாராக் கல்விப்பிரிவு) மு.இராசநாயகமும் சிறப்பு விருந்தினராக அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி டாக்டர் சி.இராஜலிங்கமும் கலந்து கொள்வர். (வ)

★ ★ ★

தென்மராட்சி, பெப்.28

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் கு.ரவீந்திரா தலைமையில் நடைபெறும் போட்டிக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தனும், சிறப்பு விருந்தினராக தென் மராட்சி கல்வி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமாரும் கலந்து கொள்வர். (வ-9)

★ ★ ★

வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்குவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் ஜேம்ஸ் யூட் மரியரட்ணம் தலைமையில் நடைபெறும் போட்டிக்கு பிரதம விருந் தினராக வலிகாமம் கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச் சந்திரன் கலந்து கொள்வார். (வ)

## குருநகரில் தண்ணீர் தாங்கி வீதி திருத்தியமைக்கும் பணி

குருநகர், பெப்.28

குருநகர் தண்ணீர் தாங்கி வீதி அகலப்படுத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையில் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களாக மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் குறித்த வீதியுடன் இணைந்துள்ள குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்காலின் மேல் உள்ள வீதியில் குழி ஒன்று ஏற்பட்டுள்ளது. இது குறித்து எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-51)

## ஏழைகளை ஏமாற்றாதே

ஓர் ஊரிலே ஒரு செல்வந்தர். நிறைய பணமும், சொத்தும் காணியும் அவருக்கு இருந்தது. ஆனால் இந்தச் செல்வங்கள் எல்லாம் இவர் அநியாய வட்டி வாங்கியும், பிறரிடம், ஏழைகளிடம் ஏமாற்றியும் பெற்றுக்கொண்டவையாகும். அவருக்கு ஒரே மகன், வயதான வாலிபன். அவன்தான் இனி இந்தச் சொத்துக்கெல்லாம் அதிபதி. ஆனால் அவன் பெரும் நோயால் பீடிக்கப்பட்டிருந்தான். எத்தனையோ வைத்தியரைப் பார்த்தும் நோயைக் குணமாக்க முடியவில்லை. அப்போது அவர்களைச் சந்தித்த ஒரு குருவானவர் உன்னுடைய பாவங்கள் தான் உன் மகனை இப்படியாகத் துன்புறுத்துகிறது. எனவே அநியாயமாக ஏழைகளிடம் ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட பணம், காணி போன்றவற்றை அவர்களிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு இறை நம்பிக் கையிலே வாழ்ந்தால் உன் மகன் குணமடைவான் என்றார். வேறு வழியின்றி அவன் அப்படியே செய்தான். மகன் குணம் பெற்றான். அவர்கள் மகிழ்ச்சியான அன்பு வாழ்வை வாழ்ந்தனர்.

நற்செய்தியிலே [லூக்,19:1-10] நாம் காணும் சக்கேயு என்ற மனிதனுடைய வாழ்வு நமது மீட்பு வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

சக்கேயு, ஜெரிக்கோ நகரில் வாழ்ந்த செல்வந்தன். அவர் வரி தண்டுவோருக்கு தலைவன். மற்றவர்களை ஏமாற்றி வரி தண்டிச் செல்வந்தனானவன். இயேசு ஜெரிக்கோ வழியே வந்தபோது இயேசு யார் என்று பார்க்கவிரும்பினார் சக்கேயு. ஆனால் அவர் குட்டையாய், குள்ளமாய் இருந்தார். எனவே தான் மக்கள் மத்தியில் வரும் இயேசுவைப் பார்க்க முடியாது என்று உணர்ந்து அவர் முன்னே ஓடிப்போய் அவரைப் பார்க்க ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக் கொண்டார். இயேசு அங்கு வந்த போது அண்ணாந்து பார்த்து அவரிடம் "சக்கேயுவே, இறங்கிவா இன்று உமது வீட்டில் தங்கவேண்டும்" என்றார். அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சி யோடு இயேசுவை வரவேற்றார். இதைக்கண்ட யாவரும் "பாவியிடம் தங்கப் போயிருக்கிறாரே இவர்" என்று முணுமுணுத்தனர். சக்கேயு எழுந்து நின்று "ஆண்டவரே, என் உடைமைகளை பாதியே ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காக திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றார். இயேசு "இன்று இந்த வீட்டுக்கு மீட்பு உண்டாயிற்று" என்றார்.

தவக்காலச் சிந்தனை

ஒருவன் இறைவனைப் பார்க்க முயலும் போது இறைவனே அவனைச் சந்திக்கிறார். சக்கேயு தனது வாழ்வை இயேசு முன் துறந்தான்.

இலஞ்சம், ஏமாற்று வாழ்வு ஒரு போதும் நிலைக்காது. செல்வம் இருந்தாலும் நமக்கு சமாதானம் இருக்காது. அமைதி வராது. இந்த தவக்காலத்தில் உனது வாழ்வை ஆராய்ந்து சரி செய்து கொள். இயேசுவிடம் ஆர்வத்தோடு வா. அப்போது உனக்கும் குடும்பத்துக்கும் மகிழ்வு வரும்.

-அருட்பணி அ.ம.ஸ்ரீபன்-செ.தா-


டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக்கொடுக்கப்படும்.

மீள்சுழற்சி

Tel: 021 222 8680, 0775925088, 0750407430

(சி/6217)(2.8)

விளம்பரத்துக்கு
021 567 1111

01-03-2013 இல் மாணிக்க விழாவினைக் கொண்டாடும்

1973 - 2013

சிகரமாய் உயர்ந்து விளங்கும்

The Express Institute இனை

வாழ்த்துவதில் நாமும் உயர்வடைகின்றோம்.

மாணிக்க விழாவைக் கொண்டாடும் மகத்தான 'எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்' நிறுவனம் மேலும் மகிமை பெற்று நூற்றாண்டு விழாக் காண மனதார வாழ்த்துகின்றோம்.

கணேஷ் வெல்டிங் வேக்ஸ்,
G.P.S. றோட்,
கல்வியங்காடு.

வாழ்த்துவோர்,
செ. கணேசலிங்கம் குடும்பத்தினர்.

அறை வாடகைக்கு

21/2, கலாசாலை வீதியில், ஆறு அறைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 0776090837 (33862)(10.6)

அறைகள் வாடகைக்குண்டு

No.14, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கில் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. மருத்துவபீட மாணவர்கள் மற்றும் வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0775989231 (33872)(10.6.7)

தவறிவிட்டது

இல.230, சில்வா வீதி, வட்டக்கச்சியில் வசிக்கும், சின்னத்துரை சிவலிங்கம் என்பவருடைய மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் (புத்தகம்) NP BAA XXXX என்ற தொடர் இலக்கத்தையுடையது. கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0771495714 (24270)(10.6.7)

குழந்தை வைத்திய நிபுணர் பார்வையிடும் நேரம்: தினசரி - காலை 7 மணி

லாவா வைத்தியசாலை
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :021-2224333

மணமகன் தேவை

* யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1987 பூரம் 8 செவ்வாய், டொக்டர்,
* 1983, அவிட்டம், ஒன்றில் செவ்வாய் உயர் பதவி (A.O)

தொடர்பு:077 078 3832 (27763)(5.6)

வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகருக்கும் கச்சேரிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 03 அறைகள் கொண்ட நல்ல நிலையிலுள்ள வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 433 6778 (33853)(5.6.7)

கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கு
குருக்கள், உதவிப் பூசகர் தேவை

* குருக்கள்: ஆலயத்தின் பூசைகள், அபிடேகம், மகோற்சவம், திருமண வைபவங்கள் போன்றவற்றை பொறுப்பேற்று நடத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
* உதவிப் பூசகர்: குருக்களுக்கு உதவியாக ஆலயத்தில் கடமையாற்ற வேண்டும்.
* கடமையாற்றும் காலத்தில் வசிப்பதற்கு வசதியான, தனித்தனி அமைக்கப்பட்ட வீடுகள் வழங்கப்படும்.
* சம்பளமும் ஏனைய விடயங்களும் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:
021 222 3003
0770388421

தலைவர்/செயலாளர்,
பரிபாலன சபை,
கொக்குவில் நந்தாவில்
மனோன்மணி அம்பாள் ஆலயம்.
கொக்குவில்.

(33849)(6.7.11)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் அன்னலிங்கம் அரவிந்தன்

இன்று (28.02.2013) வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் B.SC (Hons)Spl in Chem பட்டம் பெறும் அன்னலிங்கம் அரவிந்தன் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes





22/14, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.

(33853)(6.8)

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்





PACKED BY:
ROYAL Industries
Colombo 12. T.P 0777 2776 70

சிவா நறுமணைப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 2567

★ விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் வீரசக்தியை வழங்குவது றோயல் குளுக்கோஸ்
★ நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்கு புத்துணர்வும் புதுத்தெம்பும் தருவது றோயல் குளுக்கோஸ்
★ காலை முதல் மாலைவரை அதிக வேலை காரணமாக சோர்வுற்ற நிலை அடையும் போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்
★ மழலைகட்கும், மகப்பேற்றுத்தாய்மாருக்கும், விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும், முதியோருக்கும், மூதாதையர் காலத்தில் இருந்து முன்நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்

சந்தைப்படுத்துவோர்:- சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
உற்பத்தியாளர்:- றோயல் இன்டஸ்ரீஸ், ஆல்லொன்ட் ஸ்ரீற், கொழும்பு - 13

(C/6257)

# மரண அறிவித்தல்



## திருமதி தையல்நாயகி சிவகுரு

திருமதி தையல்நாயகி சிவகுரு கடந்த 22.02.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு அவர்களின் அன்பு மனைவியும், சிவநாயகி, அருள்நாயகி, சிவறஞ்சன், சிவபாலன், சிவராமன், சுந்தரநாயகி தங்கவேலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராஜா, பாலசுப்பிரமணியம், சகுந்தலா, ராஜ், ஆனந்தி, நல்லைநாதன், சமிலா ஆகி யோரின் மாமியாரும், 13 பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும் இரண்டு பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(01.03.2013) வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(c/6580) (6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

### இல்ல மெய்வன்மைப் போட்டி

முல்லைத்தீவு,பெப்.28

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலய கல்விப்பணிப்பாளர் எம்.இராஜகுமார் கலந்து கொள்கிறார்.

(16-400)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வையகம் போற்ற வைத்தியப் பணியது
தொடர்ந்திட மருத்துவமாணிப் பட்டம்
பெறும் எம் கல்லூரி முதல்வரின் மகள்
**செல்வி தனுஜா மகேந்திரன்**
அவர்கள் தன் வாழ்வில் மாட்சி
பெற்று வாழ்கவென்று
மனமகிழ்வுடனே வைத்தீஸ்வரப்
பெருமானின் அருள் வேண்டி
வாழ்த்துகின்றோம்.
வாழிய பல்லாண்டு!
Best wishes

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி
நலன்புரி சங்கம்.

(33893)(5.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் பட்டதாரி பயிலுனராக கடமையும்



Best Wishes



சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த
செல்வன்
**மகேந்திரன் செல்வகாந்**
B.A (Hons) Planning

புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த
செல்வன்
**சிவஞானம் ஞானகணேசன்**
B.A (Hons) Sociology

ஆகிய இருவரும் இன்று (2013.02.28 ஆம் திகதி) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெற்றுக் கொள்வதையிட்டு பெரு மகிழ்வடைகின்றோம்.

இவர்கள் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் வளமுடன் உயர்வடைய இறைவன் ஆசியினை வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உதவி மாவட்ட செயலாளர் மற்றும் நிர்வாகக்கிளை உத்தியோகத்தர்கள்
மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்.

(c/6703) (10.6)

# மரண அறிவித்தல்



## திருமதி இராசலட்சுமி சிவபுரநாதன்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம், கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி சிவபுரநாதன் நேற்று (27.02.2013) புதன்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் செல்லத்துரை சிவபுரநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - காமாட் சிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகளும் செல்வகரன் (வைத்தியர்-யாழ். போதனா வைத்தியசாலை), சுபாஸ்கரன் (U.K) ரமேஸ்கரன் (Kishna stores Co - 11), கார்த்யாயினி (யாழ்/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), கமலகரன் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயும், பிரதீபனா (வைத்தியர்-யாழ். போதனா வைத்தியசாலை), கயூர்ணா, கபிலரூபன் (ஆசிரியர் - J/ st Patrick's College) ஆகியோரின் அன்பு மாமியும், அஸ்வினின் அப்பம்மாவும், சோமசுந்தரம் (Canada), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (காலி-கந்தசாமி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மயூரகிரிநாதன் (Colombo), ஜெகதீஸ்வரநாதன் (U.K), அருணகிரிநாதன் (Canada), பரஞ்சோதி நாதன்(Colombo), சிவஞ்ஞானவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

(33896) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

ரவிசங்கரசர்மா - பிரியதர்சினி தம்பதியரின்
செல்வப் புதல்வி



## அக்ஸ்மிதா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (28.02.2013) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்தி, அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார்.

வீரபத்திரர் கோயில்,
கோப்பாய்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழ் சிறப்புக்கலையில் முதல் வகுப்பில் கலைமாணிப் பட்டம் {B.A(Hons)} பெறும், எமது நண்பன் **த.அஜந்தகுமார்** அவர்களின் துணைவியார்

## திருமதி
## வதனரேகா அஜந்தகுமார்

அவர்கள் இன்னும் பற்பல பட்டங்கள் பெற்று, சாதனைகள் படைத்திட வாழ்த்துவதுடன் இறையாசி வேண்டுகின்றோம்.

Best Wishes

பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

உரிமையாளரும் ஊழியர்களும்,
தமிழ்ப்பூங்கா அச்சகம்.

# தவக்கால தியானம்

தவக்காலத்தையொட்டி கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள சகோ. லலித் பெரேரா குழுவினரால் தவக்காலத் தியானங்களும் குணமாக்கல் வழிபாடுகளும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் 7.30 மணிவரை தும்பளை லூர்து அன்னை ஆலயத்திலும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ். பழைய பூங்கா வீதியில் உள்ள இறைதியான இல்லத்திலும் நடைபெறும்.

யாழ்.மறைமாவட்ட இறை தியானக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வழிபாடுகளில் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை குருக்கள், துறவிகள், குருமட மாணவர்களுக்கான தியான வழிபாடுகள் இறைதியான இல்லதில் இடம் பெறும்.

(ஓ-135)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக 28ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் இன்று **வைரவநாதன் கிருபாகரன்** முதுகலைமாணி M.A(Distinction Pass) பட்டத்தைப் பெறுகின்றமையை அகமகிழ்வோடு வாழ்த்தி மேலும் பல பட்டங்கள் பெற்று சகல செல்வங்களுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best wishes

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(33888)(5.6)

சாரு அக்கடமி
ஆசிரியர்கள், மாணவர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய

## சோமசுந்தரம் கனகராசா

*(ஓய்வு பெற்ற பொறியியலாளர், ஆங்கில ஆசிரியர், சமூக சேவையாளர்)*

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/வல்லோரிக்குளம் ம.வி.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## தேசமானி லயன் த.இ.பாலசுந்தரம் J.P- M.J.F.

(கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்)
ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத் தலைவர்.

தேசத்தின் உயர் விருதான தேசமானி விருதுடன் லங்காபுத்திர மற்றும் விஸ்வகீர்த்தி ஆகிய மூன்று விருதுகளை தேசிய மட்டத்தில் பெற்றமைக்காக செயற்றிறன் பாராட்டுடன் கௌரவித்து வாழ்த்துகின்றோம்.

Best wishes



வாழ்த்துபவர்கள்:
கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபை.
கோண்டாவில் கிழக்கு, ஸ்ரீ [illegible] காளி அம்பாள் தேவஸ்தானம்.
கோண்டாவில் கிழக்கு, நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை.
லயன்ஸ் கழகம், கோப்பாய்.
இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம் - யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்.

13878


# யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மிகப்பெரிய இந்திய கல்விக் கண்காட்சி

விஷேடமாக உயர்தரப்பரீட்சையில் தோற்றியோர் மற்றும் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்காக

edCIL

**INDIAN Education Fair**

பிரவேசம் இலவசம்

ON THE SPOT ADMISSIONS

2013 மார்ச் மாதம்
5 மு.ப. 10.30 – பி.ப. 6.30
6 மு.ப. 10.30 – பி.ப. 12.00
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

## இந்திய கல்விச் சந்தை உங்களுக்கு வழங்குவது என்ன?

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்

ORGANISED BY: edCIL, EdCIL (India) Limited
SUPPORTED BY: Consulate General of India Jaffna
PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
OFFICIAL TV

# கொலின்ஸ், நவஜீவன்ஸ் இறுதியாட்டத்தில் மோதும்

கரவெட்டி,பெப்.28

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்துக்கு நவிண்டில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கொலின்ஸ் அணி முதல் போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியுடன் மோதி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. இதில் கொலின்ஸ் அணி சார்பாக தர்சன் 2 கோலையும், கோகுலன், குமார், சசிக்குமார் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் போட்டனர்.

காலிறுதியாட்டத்தில் கொலின்ஸ் அணி வதிரி டயமன்ஸ் அணியை எதிர்கொண்டது. இதில் கொலின்ஸ் அணி சார்பாக விஜய் ஒரு கோலையும், டயமன்ஸ் அணி சார்பாக மதுஜன் ஒரு கோலையும் போட ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

தண்டனை உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட இறுதியில் 4:3 என்ற கோல் கணக்கில்கொலின்ஸ் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தெரிவு செய்யப்பட்டது.

அரை இறுதியாட்டத்தில் கொலின்ஸ் அணி றேஞ்சர்ஸ் அணியை எதிர்கொண்டது. இதில் இரு அணிகளும் பலமான முறையில் மோதியதால் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியாமையால் இறுதியில் தண்டனை உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் 4:3 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டது.

இதேபோல் நவஜீவன்ஸ் அணி முதல் போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் மோதியது. இரு அணிகளும் சமபலத்தை வெளிக்காட்ட இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

இதனால் தண்டனை உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டு 3:2 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் வெற்றி பெற்றது. அடுத்த போட்டியில் பொர்மர்ஸ் அணியுடன் மோதியது. ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணி முன்னிலை வகித்தது. இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போதும் இரு அணிகளும் பலமாக மோதின. அப்போது நவஜீவன்ஸ் அணி வீரர் உஷானர் மிகவும் வேகமாகப் பந்தைக் கொண்டு சென்று ஒருகோலைப் போட்டார். பொம்மர்ஸ் அணியினர் வேகமாக வியூகங்களை அமைக்கதண்டப் பிரதேசத்தில் வைத்து நவஜீவன்ஸ் அணி வீரரின் கையில் பந்துபட்டது. இதனால்பொம்மர்ஸ் அணிக்கு 16 ஆவது நிமிடத்தில் தண்டனை உதை கிடைக்கப் பெற்றது.

இதனைச் சரியாகப் பயன்படுத்திய பொம்மர்ஸ் அணி வீரர் சாரங்கன் ஒரு கோலைப் போட ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை அடைந்தது.

அதன்பின்னர் பொமர்ஸ் அணியினருக்கு கிடைத்த இரு வாய்ப்புக்கள் நழுவ விடப்பட இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவாகியது.

(த-422-400)

## ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,பெப்.28

வலிகாமம் லீக் அனுசரணையுடன் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மோதும் அணிகள் வருமாறு:-

**பிற்பகல் 4.30 மணி**

அராலி சில்வெஸ்ரார் எதிர் நவாலி சென்.பீற்றர்ஸ் அணி

**பிற்பகல் 3.30 மணி**

அராலி அண்ணர் விளையாட்டுக் கழகம் ''ஏ'' அணி எதிர் வட்டுக்கோட்டை காரைநகர் வி.க. அணி.

போட்டிகள் அராலி ஜேம்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

★ ★ ★

கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண், பெண், இருபாலாருக்குமான கபடி, கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் 2ஆம் திகதி சனிக்கிழமை பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

★ ★ ★

கண்டவளைப் பிரதேச செயலக பரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்,பெண், இருபாலாருக்குமான கிரிக்கெட் சுற்றுப் போட்டி 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தர்மபுரம் பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்,பெண், இரு பாலாருக்குமான எல்லே, உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பரந்தன் மத்திய விளை யாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

பட்டிணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்,பெண், இருபாலாருக்குமான கபடி சுற்றுப் போட்டியில் பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

★ ★ ★

பட்டிணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண், பெண், இருபாலாருக்குமான எல்லே, சுற்றுப் போட்டி 2ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

# தென்மராட்சிக் கழகங்களின் குழு நிலைப் போட்டி ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.28

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான குழுநிலைப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின.

கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற்ற 6 பேர் கொண்ட 5 பந்துப்பரிமாற்ற மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகள் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

இரு தினங்களும் இரு பிரிவுகளாக நடத்தப்பட்ட போட்டிகளில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணியும், சங்கத்தானை ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் அரையிறுதிப் போட்டிக்கு மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணியும், கைதடி குமரன் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி குமரன் விளையாட்டுக் கழக அணி 4:4 ஓவரில் அனைத்து இலக்குகளையும் இழந்து 18 ஓட்டங்கள் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணி 1:3 பந்துப்பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது பிரிவுக்கான போட்டியில் சங்கத்தானை ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக அணியும், மட்டுவில் ஞானதீபம் அணியும் அரையிறுதிப் போட்டியில் கலந்துகொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கத்தானை ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணியினர் 4:4 பந்துப்பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப் பட்டது. (த-9)

# அண்ணர் அணி வெற்றி



யாழ்ப்பாணம் பெப். 28

பூநகரி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் , பெண்களுக்கான, கபடி சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் 4 ஆம் கட்டை அண்ணர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து 4 ஆம் கட்டை அண்ணர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டன.

இதில் 4ஆம் கட்டை அண்ணர் விளையாட்டுக் கழக அணி38:26 என்ற புள்ளிகணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# வலைப்பாடு ஜெகமீட்பர் வி.க. இரு பிரிவுகளிலும் சம்பியன்

யாழ்ப்பாணம் பெப். 28

பூநகரி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண், இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தின் இரு பிரிவுகளிலும் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயபுரம் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணிமோதிக் கொண்டன.

இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகஅணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டன.

இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் அனைத்துப் பிரிவுகளிலும் சம்பியன்

யாழ்ப்பாணம்,பெப்.28

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற வலய மட்ட ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சகல வயதுப் பிரிவுகளிலும் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இந்தப் போட்டிகள் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி.த கல்லூரியும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன. இதில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி 25:15, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 நேர் செற்றில் கரவெட்டி விக்னேஸ்வராவை வென்று சம்பியனாகியது.

**இதில் மூன்றாமிடத்தை தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளையார் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.**

இதன் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இமையாணன் அ.த.க.பாடசாலை அணி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அணியை தோற்கடித்து மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி அ.மி.கல்லூரியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மோதிக்கொண்டதில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி 2:0 என்ற நேர்செற்களில் ஹாட்லிக் கல்லூரியை மிகஎளிதாக வெற்றி கொண்டு சம்பியனானது.

இதில் மூன்றாமிடத்தை தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளையார் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.


அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி கல்லூரியும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 2:0 என்ற செற்றில் வென்று வலயமட்டச் சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தை தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளையார் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

(த-400-422)



கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட அணி வீரர் அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே இடம் பெற்ற 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் வீராங்கனைகள். (த-86)



# சிம்பாப்வேயை தோற்கடித்தது மே. தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணிக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிகொண்டுள்ளது.

கிரெனடா, தேசியக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்கை 23 ஓட்டங்களுக்கு இழந்த அந்த அணி, 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தடுமாறியபோதிலும், மூன்றாவது இலக்குக்காக 55 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன. தொடர்ந்து வந்த வீரர்களும் சிறப்பாகப் பிரகாசிக்கத் தவறியிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக சமு சிபாபா 62 பந்துகளில் 48 ஓட்டங்களையும், வியூசி சிபின்டா 60 பந்துகளில் 41 ஓட்டங்களையும், பிரென்டன் ரெய்லர் 38 பந்துகளில் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக வீரசம்மி பேர்மாள் 3 இலக்குகளையும் ரீனோ பெஸ்ட், டுவைன் பிராவோ ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சுனில் நரைன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

215 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 46.2 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்குக்காக 46 ஓட்டங்கள் பகிரப்பட்டபோதிலும், ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களையும், 5 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களையும் பெற்று அந்த அணி தடுமாறியபோதிலும் டெரன் பிராவோ, டினேஷ் ராம்டினின் சிறப்பான ஆட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டெரன் பிராவோ 103 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும், கெரன் பவுல் 52 பந்துகளில் 42 ஓட்டங்களையும், டுவைன் பிராவோ 23 பந்துகளில் 25 ஓட்டங்களையும், டினேஷ் ராம்டின் 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக ரினோரென்டா முற்றொம்போட்ஷி 2 இலக்குகளையும், கைல் ஜார்விஸ், ஹமில்ற்றன் மஸகட்ஸா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாகவும் போட்டித் தொடரின் நாயகனாகவும் டெரன் பிராவோ தெரிவானார்.

# துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடவேண்டும்



ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய அணி துடுப்பாட்டத்தில் தடுமாறித் தோல்வியைத் தழுவியிருந்தது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மைக்கல் கிளார்க், தன்னைப் பொறுத்தவரை வீரர்களுக்குத் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும், அவர்கள் விரும்பிய பாணியில் போட்டிகளில் பங்குபற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியப் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசியிருந்த நிலையில், தங்களுடைய பாணியிலான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த வீரர்கள் சிலவேளை தடுமாறியிருக்கலாம் எனக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், இந்தியப் பந்துவீச்சாளர்களுக்கு தனது பாராட்டையும் தெரிவித்தார்.

போட்டி இடம்பெற்ற ஆடுகளம் எதிர்பார்க்கப்பட்டதை விட துடுப்பாட்டத்துக்குச் சிறந்த ஆடுகளமாகவே அமைந்ததாகக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், முதலிரு இன்னிங்ஸ்களும் துடுப்பாட்டத்துக்கு மிகவும் சாதகமாகக் காணப்பட்டதாகவும், அதன் பின்னரே துடுப்பாட்டத்துக்குச் சிரமமாக மாறியதாகவும் தெரிவித்தார்.

# காணிப் பங்கீட்டின் போது எமக்கும் இடம் வழங்குக

## முல்லைத்தீவில் பெண்கள் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, பெப். 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண் தலைமைத்துவ குடும்பப் பெணகள், காணி பங்கீட்டில் தமக்கு உரிய இடம் வழங்குமாறு கோரி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று புதன் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்தகால போர் அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கு மாவட்டச் செயலகத்தினால் பிரதேச செயலக ரீதியாகக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மீளக்குடியமர்ந்து மூன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் தமக்கான காணி ஒதுக்கீட்டில் உரிய இடம் வழங்கப்படாததைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

போரினால் கணவனை இழந்த பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எனப் பல்வேறு வகையான பெண்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

**ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பெண்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜனாதிபதிக்கான மனுவொன்றை கையளித்தனர்.**

வடக்கு மாகாண பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பெண்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜனாதிபதிக்கான மனுவொன்றையும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மா.வேதநாயகனிடம் கையளித்தனர். (த-16-400)

# ஜனநாயகத்தின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். மேலும் அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு -

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு மெதுவாகவே நடைமுறைப்படுத்தி வருகிறது.

10 ஆயிரத்துக்கும் 40 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என ஐ.நா. நிபுணர் குழு மதிப்பிட்ட போதும், இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் எத்தனை பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பது தொடர்பாக பல கேள்விகள் உள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, இலங்கை உள்ளக நடைமுறைகளின் மூலம் விசாரிப்பதற்கு அமெரிக்கா ஆதரவளித்தது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் போன்றவற்றில் துரிதமான முன்னேற்றத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கை தான், அமெரிக்கா உள்ளக நடைமுறைகளுக்கு ஆதரவு அளித்ததற்கு பிரதான காரணம்.

### அமெரிக்காவை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியது

எனினும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மெதுவாகவே நடைமுறைப்படுத்தப்படுவது அமெரிக்காவை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது. போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளாகியும் வடக்கு மாகாண சபைக்கு இன்னமும் தேர்தல் நடத்தப்படாதது அமெரிக்காவை வெறுப்படைய வைத்துள்ளது.

அதிகாரப்பகிர்வு குறித்து இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசவேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

இலங்கை ஜனநாயகத்தில் பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தவறியதன் விளைவாகவும், பிரதம நீதியரசர் பதவிநீக்கத்தின் மூலமும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்துக்குப் பரந்தளவிலான ஆதரவு இருந்தது.

இந்தமுறை கொண்டு வரவுள்ள தீர் மானத்துக்கும் அதுபோன்ற ஆதரவு கிடைக் கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது - இப்படி அவர் தெரிவித்தார். (த)

# மனித...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், பிரச்சினைகளிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க ஒருங்கிணைந்து செயற்படுமாறு இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் நேற்று உலகளாவிய தமிழ் அமைப்பின் மூன்றாவது வருடாந்த மாநாடு நடைபெற்றது. அதையொட்டி தாம் விடுத்துள்ள செய்தியிலேயே அவர் இவற்றைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

நீதி, சட்டமுறைமை ஆகியவற்றை மூலாதாரங்களாகக் கொண்டே சமாதானம் எட்டப்படவேண்டும். அரசியல் தீர்வு, போரால் பாதிக்கப்பட்ட அனைவருக்குமிடையிலான நல்லிணக்கப்பாடு ஆகியவையும் சமாதானத்தை எட்டுவதற்கு அனுசரிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, மனிதாபிமான சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பாக இலங்கை முறையான விசாரணைகளை மேற்கொண்டு இவற்றுக்குப் பொறுப்பானவர்களை நீதிக்குமுன் நிறுத்தவேண்டும். இது அவசியமானதொன்று.

புலம்பெயர்ந்த தமிழர்கள், பிரிட்டனில் தேசிய நீரோட்டத்துக்கு முக்கிய பங்களிப்பு செய்துள்ளனர். இது மறுக்க முடியாது.'' - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரிட்டிஷ் சக்திவளத்துறை அமைச்சர் எட்டேவி பிரத்தியேக அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் போரின் இறுதிக்கட்ட மாதங்களில் இடம்பெற்ற பயங்கரச் சம்பவங்களுக்குப் பின்னர் இலங்கை நம்பத்தகுந்த பொறுப்புக்கூறல் கடப்பாடுகளையும், நல்லிணக்கப்பாட்டுக்கான முன்னெடுப்புகளையும் மேற்கொள்ளுமென பிரிட்டன் நம்புகின்றது.

இவற்றின் வாயிலாக இலங்கையில் நீண்டு நிலைக்கக்கூடிய சமாதானம் வேரூன்ற வழிசமைக்கப்படவேண்டும். இவற்றிற்கான எங்களின் நம்பிக்கைகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை.

ஐ.நா. நிறுவனங்கள், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் ஆணைக்குட்பட்ட அமைப்புகள், சர்வதேச மனித உரிமை காப்பகங்கள், 'சனல் - 4' செய்திகள் ஆகியவை போரின்போது இரு தரப்புகளுமே போர்க்குற்றங்களும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களும் இழைத்துள்ளமைக்கான சாட்சியங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன.

எது எப்படியிருப்பினும், போர் குறித்தும், பலியானோர் குறித்தும் நம்பத்தகுந்த உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. பலியானோரில் பெரும்பாலானோர் தமிழர்களாவர். அவர்களது குடும்பங்களுக்கு நீதி கிடைக்கவேண்டும்.

இதன்பொருட்டே போர் நடத்தப்பட்ட விதம் குறித்து சுயாதீனமான - சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் ஆதரிக்கின்றேன். - இவ்வாறு சக்திவளத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த)

திரு.இ.அருட்செல்வம்
திருமதி ஜெயலட்சுமி அருட்செல்வம்
தம்பதியரின் நினைவு குறித்து
"அருள் லட்சுமி"
வணக்கத்திற்குரிய ஆறுதல் மண்டபம்

**திறப்புவிழா அழைப்பு**

காலம்-01.03.2013 வெள்ளிக்கிழமை
நேரம்- காலை 8.00 மணி
இடம்- "அருள் லட்சுமி மண்டபம்"
துவாளி வீதி, உடுப்பிட்டி

முதன்மை விருந்தினர்
திரு.ச.சிவஸ்ரீ அவர்கள்
(பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரவெட்டி)

மேற்படி நிகழ்வு யா/உடுப்பிட்டிப் பெண்கள் கல்லூரி நுழைவாயில் இருந்து முதன்மை விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர் அனைவரும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு முதன்மை விருந்தினர் திரு.ச.சிவஸ்ரீ அவர்களால் உணர்வு பூர்வமாக மண்டபம் திறந்து வைக்கப்படும். எல்லோரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். நாளை (01.03.2013) திருமதி ஜெய லட்சுமி அருட்செல்வம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நடைபெறும்.

மகன்
அ.கருணாகரன் (கண்ணன்)

உணர்வுபூர்வமான
அன்புள்ளங்கள்

---

விக்னேஸ்வரா நாயகனைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.த.இலட்சுமணன்
B.A. (Hons) M.Phil(Jaffna)

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுதத்துவமானிப் பட்டம் பெறுகின்ற (M.Phil) எமது பாடசாலை ஆசிரியரைப் பாராட்டுவதில் பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது.

மேலும் இவர் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்
வ/விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், சின்னப்புவரசங்குளம்,
புளியங்குளம், வவுனியா.

---

ST ANTONY இல
HP FULL SET COMPUTER
24,750/= மட்டும்
ஒரு வருட உத்தரவாதம்
FREE- HEAD PHONE/ 8GB PEN/ WEBCAM/ COVER
187, KKS ROAD, JAFFNA.
0212224865, 0750698608

---

## CHEMISTRY CENTRE

33, அரசடி வீதி (ஒட்டுமடம் சந்தி அருகில்)

ஆண்டு ரீதியான 20 வருட வினாவிடை
Mon, Wed, Thurs- 6.30- 8.00Pm

Group Class முறையில்
01.Basic 02.அயன்சமநிலை
03.Inorganic 04.ORGANIC

ஆரம்பமாகவிருக்கும் CHEMISTRY CENTRE கிளைகள்
01.பழம் Road, கந்தர்மடச் சந்தி
02.மஞ்சவனப்பதி வடக்கு வீதி, கொக்குவில்.
03.மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக

By- அன்பு (0775180217)

---

## டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

(DOHA QATAR) அரச அனுமதி இல L.L. NO:2490

இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட Air trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

* மேசன் (Mason)
* கார்பென்டர்
* House Painter
* கல் F லைசன்ஸ் சாரதிகள்
* Welders
* கம்பி கூடு கட்டுபவர்கள்
* எலெக்ரிஷியன் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்)
* பைப்லைன் பொருத்துனர் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.)
* உதவியாளர்
* சுத்திகரிப்பாளர்

இன்னும் பல வாய்ப்புக்கள், அதிஉயர் சம்பளம், மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அணுகுங்கள்:

மார்ச்-01 Jaffna. 0777929475.
மார்ச்-02 முல்லைத்தீவு Holly Wood City, Word No-02, Mulliyawalai, Mullaitivu.0777929475, 0772393165.
மார்ச்-03 வவுனியா Lanka Voice, No.24, Station Road. 0777929475, 0772393165.
மார்ச்-04 கொழும்பு Air Trust, 945, Maradana Road. Borella, Colombo-8, 0112676777.

(27690)(10.6,7)

---

## காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ். வீதியில் (சோடாக்கம்பனி ஒழுங்கை) 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:0777532994 (33889)

---

## வெளிவந்து விட்டது

A/L-மாணவர்களுக்கான புதிய வெளியீடு -தொண்டமானாறு தனது வெளியீட்டுப் பிரிவினரால் வெளியிடப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் (Past paper புத்தக வடிவில்) மொத்தம்- 8 பாடங்கள்

யாழ் நகரில் அன்னை புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்
T.P: 222 9881

---

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

---

## THE SCIENCE CORNER

Physics- K.Selvan B.S c. (Hons)
Clock Tower Lane Jaffna

A/L 2013
காந்தப்புலம்

ஆரம்பம்: 02/03/2013 சனி
(சனி,ஞாயிறு 9.30-11.00 Am)

---

வடமாகாண கணக்காளர் போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு

ஒவ்வொரு சனிக்கிழமையும் 1 மணிதொடக்கம் 5 மணி வரை கடந்த கால வினாத்தாள்களை அடிப்படையாகக் கொண்ட மீட்டல்
ஆரம்பம்:- சனி(2/3) மணி
யாழ்ப்பாணக் [illegible]லூரி
பட்டப்படிப்புப் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல்வங்கிக்கு அருகில்

---

விசிட்டிங்காட் - பில்புத்தகம் - லேபல்கள் - நினைவுமலர்கள்
பருவகால மலர்கள் - சஞ்சிகைகள் - போஸ்டர்கள் - லேட்டபாட்
சான்றிதழ்கள் - அழைப்பிதழ்கள் - CD கவர்கள் - CD ஸ்ரிக்கர்கள்

சகலவிதமான பிறிண்டிங் வேலைகளையும் குறைந்த செலவில் நவீன உயர்தொழில் நுட்பத்தில் செய்திட

கலர் பிறிண்ட்

யாழில் M கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)
தொ.பே: 0771974875 கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

---

திருநெல்வேலி அபான்ஸ்
வழங்கும்

மேசைக் கணினிகளுக்கான விசேட சலுகை

ஆரம்பக் கொடுப்பனவு 14,000/=



உடன் நாடுங்கள் -
269, பலாலி வீதி,
கந்தர்மடம்.
021 222 0247

---

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

---

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர் ஐயம்பிள்ளை வேலாயுதர்



மண்ணில் :- 1934-03-06

* * *

விண்ணில்:- 2013-01-29

நந்தன வருட தை மாத அபர பக்க
திருதியை திதியினில்
காலைக் கதிரவனின்
வருகையோடு
உடலை விட்டுப் பிரிந்தது
உங்களுயிர்!
நாங்கள் ஆறாத் துயரடைந்தோம்

உங்கள் வாழ்வின் பாதையிலே
எம் குடும்பத்தின் பாசமுள்ள ஒளி
விளக்காய்,
உற்றவர், உறவினர், நண்பர்க்கு
உறுதுணையாய்,
நல் ஆசிரியனாய், உயர்
அதிபராய்,
மாணவச் செல்வங்களுக்கு நல்
அறிவூட்டி,
சமூக சேவகனாய்,
பக்தி மார்க்க இறை அடியவனாய்,
திருமுறை ஓதுவராய்,
தொண்டுகள் பல செய்து
அர்த்தமுள்ள உயர் வாழ்வு
வாழ்ந்து
தென் கோவை வீரபத்திரர்
துணையோடு
கைதடி குருநாதர் பாதம் இறையடி
சேர்ந்தீரே!

உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனைப் பிரார்த்திக்கும்

வேல் வாசம், பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நாகநாதபிள்ளை (துரைச்சாமி)



வேலணை மேற்கு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஞானவைரவர் சுற்றுவட்ட வீதி, தவசிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நாகநாதபிள்ளை (துரைச்சாமி) நேற்று (27.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (பிள்ளை குட்டியர்) - சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், சபாநாதன், சிவகௌரி, பக்தகௌரி (ஆசிரியை, வ/விபுலானந்தாக் கல்லூரி), பவநாதன், கேதாரகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், இராஜகோபால் மற்றும் பாலசுப்பிரமணியம் (தவம்), பேரின்பநாயகம் (இன்பம்), இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மினி, திருநாதன், ஜெயரஞ்சினி, ஜெயராஜா ஆகியோரின் பாசமிகு மாமனும், பிரியந்தன் (ஸ்ரார் மீடியா), ஜீவதன், அதீசன் (பொறியியலாளர், பேராதனை பல்கலைக்கழகம்), கவிந்தன், தட்சாயினி, விநோதினி (விபுலானந்தாக் கல்லூரி மாணவிகள்), மதுசாளினி, டிலக்சி, கிருசனா, ரஜினா, ராகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பூபதி, திருவருட்செல்வி, சறோஜினிதேவி, கமலாதேவி, பரமேஸ்வரி, கமலாதேவி, சிவக்கொழுந்து, நமசிவாயம், பொன்னம்மா, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2013) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது தவசிக்குளம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல: 19/1, ஞானவைரவர், சுற்றுவட்ட வீதி,
தவசிக்குளம், வவுனியா.
தொ.பே:- 077 8880 805

(27700)

தகவல்:
குடும்பத்தினர்.
(ஸ்ரார் மீடியா)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.